# குறள்களுக்கு குறள்வடிவில் விளக்கம்

## அறத்துப்பால்
## பொருட்பால்
## இன்பத்துப்பால்

**மதுரை பாபாராஜ்**

**அறிமுகத் துளிகள்**

பெயர் : சு.பெ.பாபாராஜ் (மதுரை பாபாராஜ்)

தந்தை : தெய்வத்திரு.சு.பெருமாள் முதுசுப்பு

தாய் : தெய்வத்திரு.தேவகி முத்துசுப்பு

பிறந்தநாள் : 11.10.1948

மனைவி : பா.வசந்தா

பள்ளிகள் : கேப்ரன் ஹால்—மதுரை
புனித ஜோசப் கான்வெண்ட்—மதுரை
சேதுபதி உயர்நிலைப் பள்ளி—மதுரை

கல்லூரிகள் : மதுரைக் கல்லூரி மதுரை
அழகப்பா கலைக் கல்லூரி கரைக்குடி

பட்டம் : அறிவியல் இளவல்-பயிரியல்

பணிபுரிந்த
நிறுவனங்கள் : பென்னெர் (இந்தியா) லிட் மதுரை (22
ஆண்டுகள்)

பி எம் எஃப் பெல்டிங்க்ஸ் லிட் சென்னை (10
ஆண்டுகள்)

பொறுப்பு : முதுநிலை அலுவலர்(ஓய்வு)

மின்னஞ்சல் : spbabaraj@gmail.com

முகவரி : சி1, பிரார்த்தனா,குரோவ் அடுக்ககம்,
நகர இணைப்புச் சாலை. ஆதம்பாக்கம்
சென்னை 600088

கைபேசி எண் : 900 3260 981

இணையதளம் : www.maduraibabaraj.blogspot.com

***கவிஞரின் நூல்கள் இதுவரை:***

| | |
|---|---|
| *கவிச்சாரல்* | *1981* |
| *கவியமுதம்* | *1984* |
| *மகர விளக்கு* | *1985* |
| *மரபுகளின் அருவி* | *1989* |
| *மகிழம்பூ* | *1997* |
| *கிளிஞ்சல்கள்* | *2002* |
| *மகரயாழ்* | *2004* |
| *அற்புதத்தரு(சீரடி சாய்பாபா அற்புதங்கள் கவிதை வடிவில்)* | *2005* |
| *திருக்குறள் பேழை* | *2006* |
| *திருக்குறள் (1330) (வெண்பா வடிவில்)* | *2008* |
| *வசந்தம்* | *2010* |
| *பூச்சரம் (அகரவரிசைக் கவிதைகள்)* | *2012* |
| *தேனருவி* | *2014* |
| *வாழ்வியல் அந்தாதி* | *2015* |
| *கம்பராமாயணம் அயோத்தி முதல் கிட்கிந்தை வரை* | *2015* |
| *திருக்குறள் அறத்துப்பால் - ஆங்கிலம்* | *2018* |
| *திருக்குறள் இன்பத்துப்பால் - ஆங்கிலம்* | *2018* |

***இதர படைப்புகள்:***

| |
|---|
| *மின்னூல்கள்:* |
| *திருக்குறள் குழந்தைப்பாடல்--அறம்,பொருள் இன்பத்துப்பால் குழந்தைகளுக்காக* |
| *கம்பராமாயணம் குறள் வெண்பா* |
| *மனக்குறள்* |
| *திருக்குறள்--ஆங்கில விளக்கம்_-பொருள்* |
| *பாரதியின் புதிய ஆத்திசூடி/ஔவையின் ஆத்திசூடி* |

# குறள்களுக்கு குறள்வடிவில் விளக்கம்

## அறத்துப்பால்




**மதுரை பாபாராஜ்**

*சான்றோர்களின் வாழ்த்து*

***குறள்நெறிக் குரிசில் சி ஆர் வாழ்த்து***

***காந்தியின் எளிமை அழகு..
அதைப்போலவே உங்கள் வெண்பா
குறள் கருத்துக்களை முழுமையாக உள் வாங்கி,
அதன் சாரத்தை/ கருத்தை எளிய தமிழில்
வெண்பா வடிவில் இயல்பாக வழங்கும்,
உங்கள் திறன்  வியப்பளிக்கிறது..***

***வாழ்த்துகள்...
பாபா***

---

***ஔவையார்~காளமேகம் இருவருக்கும் பிறகு
எளிய தமிழில் வெண்பாப் பாடுகிறவர் நம்
"வெண்பாப்புலி "மதுரை பாபாராஜ் ஐயா
அவர்கள் தான்! வாழ்த்துக்கள்!
--நண்பர் இராமசாமி பெரியகுளம்***

---

***உங்களின்
பதிவை
திரும்பத் திரும்ப
படிக்க அவா.***

***சீனி வரதராஜன்***

---

***குறளுக்கு குறள் வடிவில் பொருள் கூறும் பாங்கு தனித்தன்மை
வாய்ந்தது!
மிக எளிய முறையில் மனம் கவரும் வகையில் அமைந்துள்ளது அய்யா!
வாழ்த்துகள்!
அனைத்து அதிகாரங்களும் முடித்து புத்தகமாக வெளிவர வேண்டும் என்று
விழைகிறேன்!
அருமை அய்யா! அருமை
தாங்கள் ஒரு குற்றால அருவி!
அல்ல நயாகரா!
கவிதை தொடர்மழையாய்
கொட்டுகிறது!
இமய***

---

## *1.கடவுள் வாழ்த்து*

*1*
*அகர முதல எழுத்தெல்லாம் ஆதி*
*பகவன் முதற்றே உலகென்றார் அய்யன்!*

*அகரம் மொழிக்கு முதலாம்! இறையோ*
*உலகின் முதலென் றறி.*

*2*
*கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅர் எனினென்றார் வள்ளுவர்!*

*கற்றும் பணிவின்றி சான்றோர்முன் பண்பிழந்தால்*
*சற்றும் பயனில்லை சாற்று.*

*3*
*மலர்மிசை ஏகினான் மாண்டி சேர்ந்தார்*
*நிலமிசை நீடுவாழ் வார்.*

*மலர்போன்ற உள்ளத்தில் என்றும் நிறைந்து*
*கலந்தவரைப் பின்பற்று வோர்களே பாரில்*
*நிலைத்தேதான் வாழ்வார் உணர்.*

*குறள் 4:*

*வேண்டுதல்வேண் டாமை இலானடி சேர்ந்தார்க்கு*
*யாண்டும் இடும்பை இல.*

*வேண்டியோர் வேண்டாதோர் பாராத சான்றோரைப்*
*போற்று, துயரில்லை இங்கு.*

*குறள் 5*

*இருள்சேர் இருவினையும்சேரா இறைவன்*
*பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.*

*இறைநிலை வேண்டுவோர் நன்மைதீமை தன்னை*
*சமமாய்க் கருதுவர் காண்.*

*குறள் 6:*

*பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க*
*நெறிநின்றார் நீடுவாழ் வார்.*

*நெறிபிறழ்வே இன்றியே ஐம்புலனை ஆட்கொள்!*
*ஒழுக்கம் நிமிரவைக்கும் சொல்.*

*குறள் 7:*

*தனக்குவமை  இல்லாதான் தாள்சேர்ந்தார்க்  கல்லால்*
*மனக்கவலை மாற்றல் அரிது.*

*இணையற்ற சான்றோர் வழிநடந்தால் தீரும்*
*மனக்கவலை மக்களுக்குத் தான்.*

*குறள் 8*

*அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க் கல்லால்*
*பிறவாழி நீந்தல் அரிது.*

*அறக்கடல் சான்றோரைப் போற்றுவோர் துன்பக்*
*கடலையோ நீந்தல் எளிது.*

*குறள் 9:*

*கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்*
*தாளை வணங்காத் தலை.*

*நெறிபிறழாச் செம்மலை ஏற்க மறுத்தல்*
*பொறியைந்தும் கொண்டும் இயங்கா நிலைக்கு*
*பயனற்று போனதற் கொப்பு.*

*குறள் 10:*

*பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்*
*இறைவன் அடிசேரா தார்.*

*நெறிபிறழாச் சான்றோர் வழிமறந்தால் நீந்த*
*முடியாது துன்பக் கடல்.*

## *2.வான்சிறப்பு*

*குறள் 11:*

*வானின் றுலகம் வழங்கி வருதலால்*
*தானமிழ்தம் என்றுணரற் பாற்று.*

*வான்மழை இவ்வுலகைக் காப்பதால் அம்மழை*
*தேனமிழ்(து)  என்றேதான் செப்பு.*

*குறள் 12:*

*துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்*
*துப்பாய தூஉ மழை.*

*பெய்தே உணவைத் தருகிறதுதானுமிங்கே*
*நன்னீர் உணவாகும் சொல்.*

*குறள் 13:*

*விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து*
*உள்நின் றுடற்றும் பசி.*

*முக்கடல் நீரிருந்தும் வான்பொய்த்தால் நம்பசியோ*
*பற்றித் துடிக்கவைக்கும் பார்.*

*குறள் 14:*

*ஏரின் உழாஅர் உழவர் புயல்என்னும்*
*வாரி வளங்குன்றிக் கால்.*

*வான்மழை பொய்த்தால்  உழவுத்தொழில்கூட*
*தேன்மொழியே! குன்றிவிடும் கூறு.*

*குறள் 15:*

*கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே*
*எடுப்பதூஉம் எல்லாம் மழை.*

*கெடுக்கும் உயிரின வாழ்வைத்தான் பொய்த்து!*
*கொடுக்கும் வளத்தைத்தான் பெய்து.*

*குறள் 16:*

***விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே***
***பசும்புல் தலைகாண் பரிது.***

***மழைத்துளி பெய்தால் பசும்புல்  தழைக்கும்!***
***மழைபொய்த்தால் புல்முளைக் காது.***

*குறள் 17:*

***நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்தெழிலி***
***தான்நல்கா தாகி விடின்.***

***கொடுக்கின்ற வானியல்பு பொய்த்தால் கடல்நீர்***
***கடுகளவாய் வற்றிவிடும் காண்.***

*குறள் 18:*

***சிறப்பொடு பூசனை செல்லாது வானம்***
***வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு.***

***முறைமழை பொய்த்தால் விழாக்கள்,பூசை***
***நடக்காமல் தேங்கிவிடும் செப்பு.***

*குறள் 19:*

***தானம் தவமிரண்டும் தங்கா வியனுலகம்***
***வானம் வழங்கா தெனின்.***

***வான்மழை பொய்த்தால் வழங்குகின்ற தானமும்***
***ஏற்கும் தவமும் அரிது.***

*குறள் 20:*

***நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்***
***வானின் றமையா தொழுக்கு.***

***யாரெனினும் நீரின்றி வாழ்தல் அரிதாகும்!***
***நீரோ மழைபெய்தால் தான்.***

***குறள்நெறிக் குரிசில் சி.ஆர்.வாழ்த்து***
***புது வடிவம்.. புதுவெள்ளம்..புதிய குறள் மேல்வைப்பு நூல்..***
***வாழ்த்துகள் பாபா.. புகுந்து விளையாடுங்க***

---

## *3. நீத்தார் பெருமை*

*குறள் 21:*

***ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து***
***வேண்டும் பனுவல் துணிவு.***

***ஒழுக்கமான உண்மைத் துறவிகளை நூல்கள்***
***பழுதின்றிப் போற்றும் உணர்.***

*குறள் 22:*

***துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்து***
***இறந்தாரை எண்ணிக்கொண் டற்று.***

***இறந்தோர் அளவைக் கணித்தல் அரிது!***
***துறவிப் பெருமையும் தான்.***

*குறள் 23:*

***இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்***
***பெருமை பிறங்கிற் றுலகு.***

***இருநிலை இன்பதுன்பம் நன்கறிந்தே ஆசை***
***அறவேதான் நீக்கல் உயர்வு.***

*குறள் 24:*

***உரனென்னுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்***
***வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.***

***உறுதியெனும் அங்குசத்தால்  ஐம்புலனை வென்றோன்***
***துறவு நிலத்திற்கு வித்து.***

*குறள் 25:*

***ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார்கோமான்***
***இந்திரனே சாலுங் கரி.***

***ஐம்புலன் ஆசையால் இந்திரன் சீரழிந்தான்!***
***வென்றால் உயர்வுக்குச் சான்று.***

*குறள் 26:*

***செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்***
***செயற்கரிய செய்கலா தார்.***

***உயர்செயல்  செய்வோர் பெரியோர்! இழிந்த***
***செயல்செய்வோர் தாழ்ந்தோர் உணர்.***

*குறள் 27:*

***சுவையொளி ஊறோசை நாற்றமென் றைந்தின்***
***வகைதெரிவான் கட்டே உலகு.***

***புலனடக்கம் உள்ளோர்க்கே என்றும் உலகம்***
***வசப்படும் வாழ்வார் நிமிர்ந்து.***

*குறள் 28:*

***நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து***
***மறைமொழி காட்டி விடும்.***

***அறிஞர்கள் பண்பை அவர்களது பேச்சு***
***செறிவுடன் காட்டும் உணர்.***

*குறள் 29:*

***குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி***
***கணமேயுங் காத்தல் அரிது.***

***அறச்சீற்றம் கொண்ட துறவிகளின் கோபம்***
***புகைந்தால் எதிர்த்தல் அரிது.***

*குறள் 30:*

***அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்***
***செந்தண்மை பூண்டொழுக லான்.***

***அன்பு கருணை கடைபிடிப்போர் எல்லோரும்***
***அந்தணர் என்றழைப்போம் சாற்று.***

---

### *4. அறன்வலியுறுத்தல்*

*குறள் 31:*

***சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு***
***ஆக்கம் எவனோ உயிர்க்கு.***

***அறவழி மேன்மையும் செல்வமும் என்றும்***
***சிறந்த பயனைத் தரும்.***

*குறள் 32:*

***அறத்தினூஉங் காக்கமும் இல்லை அதனை***
***மறத்தலின் ஊங்கில்லை கேடு.***

***அறச்செயல் செய்வதைப்போல் வேறுநன்மை உண்டோ?***
***அதைமறத்தல் என்றுமே தீது.***

*குறள் 33:*

***ஒல்லும் வகையான அறவினை ஓவாதே***
***செல்லும்வாய் எல்லாஞ் செயல்.***

***செய்கின்ற நற்செயலை எல்லாம் அறவழியில்***
***செய்யவேண்டும் எங்கெனினும் செப்பு.***

*குறள் 34:*

***மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்***
***ஆகுல நீர பிற.***

***மனத்தளவில் குற்றமின்றி வாழ்தல் அறமே!***
***மனவேடம் ஆரவாரந் தான்.***

*குறள் 35:*

***அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்***
***இழுக்கா இயன்ற தறம்.***

***பொறாமையும் ஆசையும் கோபமுடன் வன்சொல்***
***இலாத குணமே அறம்.***

*குறள் 36:*

***அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது***
***பொன்றுங்கால் பொன்றாத் துணை.***

***அன்றன்றே நல்லறம் செய்யவேண்டும்!***
***அப்புகழே,***
***சென்றபின்பும் நிற்கும் நிலைத்து.***

*குறள் 37*

***அறத்தா றிதுவென வேண்டா சிவிகை***
***பொறுத்தானோ டூர்ந்தான் இடை.***

***அறவழி இன்பம் சிவிகைக்குள் உள்ளோன்!***
***மறந்தால் சுமப்போன் துயர்.***

*குறள் 38:*

***வீழ்நாள் படாஅமை நன்றாற்றின் அஃதொருவன்***
***வாழ்நாள் வழியடைக்கும் கல்.***

***வாழ்நாள் முழுதும் விதைக்கும் அறச்செயல்***
***வாழ்க்கையைச் சீராக்கும் கல்.***

*குறள் 39:*

***அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்***
***புறத்த புகழும் இல.***

***அறவழி இன்பமே இன்பமாம் மற்ற***
***வழிவந்தால் துன்பந்தான் செப்பு.***

*குறள் 40:*

***செயற்பால தோரும் அறனே ஒருவற்கு***
***உயற்பால தோரும் பழி.***

***அறவழியைப் பின்பற்று நன்மை திரளும்!***
***புறக்கணித்தால் என்றும் பழி***

---

.

## *5. இல்வாழ்க்கை*

*குறள் 41:*

***இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்***
***நல்லாற்றின் நின்ற துணை.***

***இல்லாள்  குழந்தைகள் பெற்றோர் இவர்களுக்கு***
***இல்லறத் தானே துணை.***

*குறள் 42:*

***துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்***
***இல்வாழ்வான் என்பான் துணை.***

***துறவி , வறியோர்கள், ஆதர வற்றோர்க்(கு)***
***அறத்துணை இல்லறத்தான் தான்.***

*குறள் 43:*

***தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு***
***ஐம்புலத்தா றோம்பல் தலை.***

***வாழ்ந்தவர்கள், வாழ்வோர், விருந்தோம்பல், சுற்றத்தார்***
***பேணுதல் இல்லறத்தான் பண்பு.***

*குறள் 44:*

***பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை***
***வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல.***

***பழியின்றி சேர்த்த பொருளைப் பகுத்துக்***
***களித்துண்ணும் வாழ்வே உயர்வு.***

*குறள் 45:*

***அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை***
***பண்பும் பயனும் அது.***

***அன்பும் அறமுமிங்கே இல்வாழ்வின் நற்பயனும்***
***பண்பென்று மாகும் உணர்.***

*குறள் 46:*

***அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்***
***போஒய்ப் பெறுவ தெவன்.***

***அறநெறி இல்வாழ்வின் நற்பயனை வேறு***
***நெறிகளேற்றால்   காண்போமா? கூறு.***

*குறள் 47:*

***இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்***
***முயல்வாருள் எல்லாம் தலை.***

***இயல்பாக இல்வாழ்க்கை வாழ்வோன் மற்ற***
***முயற்சி உடையோர்முன் ஏறு.***

*குறள் 48:*

*ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை உடைத்து.*

*போற்றும் அறவழியில் மற்றவரை வாழவைப்போர்*
*பற்றற்றோர் நோன்பைவிட மேல்.*

*குறள் 49:*

*அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்*
*பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.*

*பழியற்ற இல்வாழ்க்கை வாழ்தல் அறமாம்!*
*அழியாப் புகழ்தரும் வாழ்வு.*

*குறள் 50:*

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்.*

*இல்லறத்தில் நல்லறத்தைப் போற்றியே வாழ்பவன்*
*தெய்வப் பிறவிதான் இங்கு.*

---

### *6. வாழ்க்கைத் துணைநலம்*

*குறள் 51:*

*மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்*
*வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.*

*மனையறம் காத்து வருவாய்க்குள் வாழும்*
*குணவதியே இல்லாள்! உணர்.*

*குறள் 52:*

*மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை*
*எனைமாட்சித் தாயினும் இல்.*

*அனைத்து வளமிருந்தும் பண்பற்ற இல்லாள்*
*அமைந்தால் சிறப்பெல்லாம் வீண்.*

*குறள் 53:*

***இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்***
***இல்லவள் மாணாக் கடை.***

***இல்லாளோ பண்பரசி! வாழ்க்கை ஒளிமயந்தான்!***
***முள்ளாய் அமைந்தால் இருள்.***

*குறள் 54:*

***பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்***
***திண்மைஉண் டாகப் பெறின்.***

***பண்புகளும் கற்பும் மனைவியின் மூச்சானால்***
***பெண்ணுக்கு மாண்புண்டோ வேறு?***

*குறள் 55:*

***தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்***
***பெய்யெனப் பெய்யும் மழை.***

***தெய்வமாய் என்றும்  கணவனைப் போற்றுபவள்***
***நல்மழை போன்றவள்! சாற்று.***

*குறள் 56:*

***தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற***
***சொற்காத்துச் சோர்விலாள்***
***பெண்.***

***அக்கறை கொண்டே குடும்பத்தை, சார்ந்தோரை***
***எக்கணமும் காப்பவள் பெண்.***

*குறள் 57:*

***சிறைகாக்கும் காப்பெவன் செய்யும் மகளிர்***
***நிறைகாக்கும் காப்பே தலை.***

***சிறைவைக்கும் பெண்ணடிமை காக்குமா? பெண்ணின்***
***முறையான பண்புகளே காப்பு.***

*குறள் 58:*

*பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.*

*இல்லறப் புத்துலகம் பொன்னாகும் பெண்ணுக்கோ
இல்லறத்தான் தன்மை பொறுத்து.*

*குறள் 59:*

*புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை.*

*தாறுமாறாய் வாழ்வில் இணையர் அமைந்துவிட்டால்
ஏறுபோல் நன்னடை ஏது?*

*குறள் 60:*

*மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு.*

*பண்புகளே இல்லறத்தின் வேராகும்! பிள்ளைகள்
நல்லவராய் வாழ்ந்தால் புகழ்.*

---

## *7. மக்கட்பேறு*

*குறள் 61:*

*பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.*

*அறிவிற் சிறந்தவராய்ப் பிள்ளைகள் வாழ்ந்தால்
மதிப்புள்ள வேறுபேறு ஏது?*

*குறள் 62:*

*எழுபிறப்பும் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.*

*விழுமிய பண்பார்ந்த பிள்ளைகளைப் பெற்றால்
எழுபிறப்பும் துன்பமில்லை கூறு.*

*குறள் 63:*

*தம்பொருள் என்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்.*

*நம்வாழ்க்கை நம்செயல் நம்பயன்கள்
இப்படித்தான்
பிள்ளைகள் வாழ்க்கை அவர்க்கு.*

*குறள் 64:*

*அமிழ்தினும் ஆற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை அளாவிய கூழ்.*

*அமிழ்தையும் விஞ்சுவது பிள்ளை பிசைந்த
அமுதாகும் பெற்றோர்க்(கு) உணர்.*

*குறள் 65:*

*மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு.*

*பெற்றோர்க்குப் பிள்ளையைத் தீண்டலோ  மெய்க்கின்பம்!
சொல்மழலை இன்பம் செவிக்கு.*

*குறள் 66:*

*குழலினி தியாழினி தென்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்.*

*குழலோசை யாழோசை இன்பமென்றே சொல்வார்
மழலைச்சொல் கேட்காதோர் தான்.*

*குறள் 67:*

***தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து***
***முந்தி இருப்பச் செயல்.***

***தந்தை உழைத்துக்  குழந்தைகள் ஆற்றலுடன்***
***முன்னேற வைத்தல் கடன்.***

*குறள் 68:*

***தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து***
***மன்னுயிர்க் கெல்லாம் இனிது.***

***பெற்றோரை விஞ்சும் அறிவார்ந்த பிள்ளைகள்***
***இத்தரணிக் கெல்லாம் பயன்.***

*குறள் 69:*

***ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்***
***சான்றோன் எனக்கேட்ட தாய்.***

***தன்பிள்ளை  போற்றப் படும்போது பெற்றெடுத்த***
***இன்பத்தை விஞ்சும் மகிழ்வு.***

*குறள் 70:*

***மகன் தந்தைக் காற்றும் உதவி இவன்தந்தை***
***என்நோற்றான் கொல்லெனும் சொல்.***

***இவன்போல் மகன்பெற என்னதவம் செய்தார்?***
***வியக்கவைத்தல் மைந்தன் கடன்.***

---

## *8.அன்புடைமை*

*குறள் 71:*

***அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்***
***புண்கணீர் பூசல் தரும்.***

***அன்புகொண்டோர்  வாடும் துயர்கண்டால் கண்ணீரோ***
***தன்னால் பெருக்கெடுக்கும் சாற்று.***

*குறள் 72:*

***அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்***
***என்பும் உரியர் பிறர்க்கு.***

***அன்பற்றோர் எல்லாம் தனக்கென்பார்!***
***அன்புள்ளோர்***
***இன்னுயிரும் ஈவார் பிறர்க்கு.***

*குறள் 73:*

***அன்போ டியைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு***
***என்போ டியைந்த தொடர்பு.***

***இன்னுயிரும்  இவ்வுடலும்  சேர்ந்தே இருப்பதுபோல்***
***அன்புதான் வாழவின் உயிர்.***

*குறள் 74:*

***அன்பீனும் ஆர்வம் உடைமை அதுஈனும்***
***நண்பென்னும் நாடாச் சிறப்பு.***

***அன்பே விருப்பத்தைத் தந்தே பழகவைக்கும்!***
***நட்பாக மாறவைக்கும் சாற்று.***

*குறள் 75:*

***அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்து***
***இன்புற்றார் எய்தும் சிறப்பு.***

***இன்பமாக  முன்னணியில் வாழ்வதே அன்புள்ளம்***
***கொண்டதன் பின்னணிதான் கூறு.***

*குறள் 76:*

***அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்***
***மறத்திற்கும் அஃதே துணை.***

***அறவுணர்வுக்  கன்பிங்கே வேண்டுதல்போல் வீரம்***
***நடைபோட அன்பே துணை.***

*குறள் 77:*

***என்பி லதனை வெயில்போலக் காயுமே***
***அன்பி லதனை அறம்.***

***மண்புழுவை வாட்டுகின்ற வெய்யிலின் வெம்மைபோல்***
***அன்பிலாரை வாட்டும் அறம்.***

*குறள் 78:*

***அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்***
***வற்றல் மரந்தளிர்த் தற்று.***

***அன்பற்ற  வாழ்க்கையோ பட்டமரம் பாலைவன***
***மண்ணில் தழைப்பதுபோ லாம்.***

*குறள் 79:*

***புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை***
***அகத்துறுப் பன்பி லவர்க்கு.***

***அகஉறுப்பாம் அன்பின்றி வாழ்வோர் உடலின்***
***புறஉறுப்பால்  என்னபயன் சொல்?***

*குறள் 80:*

***அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்கு***
***என்புதோல் போர்த்த உடம்பு.***

***அன்பே உயிராகும்! அன்பற்ற மேனியோ***
***தோல்போர்வை போட்ட உடம்பு.***

---

## *9. விருந்தோம்பல்*

*குறள் 81:*

***இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி***
***வேளாண்மை செய்தற் பொருட்டு.***

***விருந்தினரைப் பேணி உதவும் பொருட்டே***
***பொருள்சேர்க்கும் இல்லறமாம் கூறு.***

*குறள் 82:*

***விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா***
***மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.***

***விருந்தினர் காத்திருக்க தான்மட்டும் உண்ணல்***
***அமிழ்தெனினும் நாம்தவிர்த்தல் பண்பு.***

*குறள் 83:*

***வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை***
***பருவந்து பாழ்படுதல் இன்று.***

***விருந்தினரைப் பேணுவதால் வாழ்க்கையைத்  துன்பம்***
***நெருக்கி அழிப்பதில்லை சாற்று.***

*குறள் 84:*

***அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து***
***நல்விருந் தோம்புவான் இல்.***

***அகம்மகிழ நாளும் விருந்தோம்பல் செய்யும்***
***அகம்நாடித் தங்கும் வளம்.***

*குறள் 85:*

***வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி***
***மிச்சில் மிசைவான் புலம்.***

***அன்பு  விருந்தினர் உண்டபின் உண்பவரின்***
***மண்விளையும் வித்திடாமல் தான்.***

*குறள் 86:*

***செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்***
***நல்விருந்து வானத் தவர்க்கு.***

***வந்தவர் செல்ல வருவோர்க்குக்  காத்திருக்கும்***
***பண்பினை வாழ்த்தும் உலகு.***

*குறள் 87:*

***இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்***
***துணைத்துணை வேள்விப் பயன்.***

***விருந்தினர்க் கேற்ற சிறப்பின் அளவே***
***விருந்தோம்பல் வேள்விப் பயன்.***

*குறள் 88:*

***பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி***
***வேள்வி தலைப்படா தார்.***

***விருந்தோம்பல் வேள்விப் பயனைப் பெறாமல்***
***வளமிழந்தால் சோகத் துடிப்பு..***

*குறள் 89:*

***உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா***
***மடமை மடவார்கண் உண்டு.***

***விருந்தினரைப் போற்றாமல் செல்வம் படைத்தோர்***
***வறியோர் அறிவிலி யாம்.***

*குறள் 90:*

***மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து***
***நோக்கக் குழையும் விருந்து.***

***வாடும் முகர்ந்தால் அனிச்சம்! விருந்தளிப்போர்***
***வேறுபட்டால் வாடும் விருந்து.***

---

### *10 இனியவை கூறல்*

*குறள் 91:*

***இன்சொலால் ஈரம் அளைஇப் படிறிலவாம்***
***செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.***

***அன்புடன் மாசற்ற உள்ளத்தின்  வாய்மையே***
***இன்சொல்லென் றிங்கே உணர்.***

*குறள் 92:*

***அகன்அமர்ந் தீதலின் நன்றே முகனமர்ந்து***
***இன்சொலன் ஆகப் பெறின்.***

***முகம்மலர்ந்தே இன்சொல் பேசுகின்ற பண்போ***
***அகங்குளிர ஈவதினும் மேல்.***

*குறள் 93:*

*முகத்தான் அமர்ந்தின்து நோக்கி அகத்தானாம்*
*இன்சொ லினதே அறம்.*

*முகம்மலர்ந்து பார்த்தே அகங்குளிர இன்சொல்*
*இதமாகச் சொல்வ தறம்.*

*குறள் 94:*

*துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்*
*இன்புறூஉம் இன்சொ லவர்க்கு.*

*இன்சொல்லைப் பேசிப் பழகுவோர்க்கோ புண்படுத்தித்*
*துன்புறுத்தும் ஏழ்மையில்லை சாற்று.*

*குறள் 95:*

*பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு*
*அணியல்ல மற்றுப் பிற.*

*பணிவான பண்புகளும் இன்சொல் இயல்பும்*
*அணிகலனாம்! மற்றவை வீண்.*

*குறள் 96:*

*அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை*
*நாடி இனிய சொலின்.*

*நல்லதை எண்ணியே இன்சொல்லை ஊன்றவைத்தால்*
*நல்லறம் கூடும் நிலைத்து.*

*குறள் 97:*

*நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று*
*பண்பின் தலைப்பிரியாச் சொல்.*

*பயன்தரும் சொற்களைப் பேசுவோர்க்கு நன்மை*
*தழைக்கின்ற இன்பம் தரும்.*

*குறள் 98:*

***சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்
இம்மையும் இன்பம் தரும்.***

***கடுமையற்ற இன்சொற்கள் எக்காலும் இன்ப
நிறைவும் புகழும் தரும்.***

*குறள் 99:*

***இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது?***

***இன்சொற்கள் நன்மை அறிந்தபின்பும் புண்படுத்தும்
வன்சொற்கள் பேசுவ தேன்?***

*குறள் 100:*

***இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று.***

***இனியசொல் உள்ளபோது வன்சொல்லைக் கூறல்
கனியிருக்க காய்பறிக்கும் போக்கு.***

---

## *11. செய்ந்நன்றியறிதல்*

*குறள் 101:*

***செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது.***

***நன்மையே செய்யாத மாந்தருக்குச் செய்கின்ற
நன்மைக்கு ஈடோ உலகு?***

*குறள் 102:*

***காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்***
***ஞாலத்தின் மாணப் பெரிது.***

***தேவைக் குரியநேரம் செய்கின்ற சிற்றுதவி***
***ஞாலத்தை விஞ்சும் அளவு***

*குறள் 103:*

***பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்***
***நன்மை கடலின் பெரிது.***

***பயனெதிர் பார்க்காமல் செய்த உதவி***
***கடலினும் என்றும் பெரிது.***

*குறள் 104:*

***தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்***
***கொள்வர் பயன்தெரி வார்.***

***தினையளவே நன்மை எனினும் பயனால்***
***பனையள வென்பார் மகிழ்ந்து.***

*குறள் 105:*

***உதவி வரைத்தன் றுதவி உதவி***
***செயப்பட்டார் சால்பின் வரைத்து.***

***உதவி அளவைப் பொறுத்தல்ல  ஆனால்***
***உதவிபெற்றோர் பண்பைப் பொறுத்து.***

*குறள் 106:*

***மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க***
***துன்பத்துள் துப்பாயார் நட்பு.***

***துறக்காதே துன்பம் துடைத்தோரின் நட்பு!***
***மறக்காதே தூயோர் உறவு.***

*குறள் 107:*

***எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்***
***விழுமந் துடைத்தவர் நட்பு.***

***துயர்துடைத்தோர் நட்பை எழுபிறவி ஆனாலும்***
***எண்ணவேண்டும் நாமிங்கே சொல்.***

*குறள் 108:*

***நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது***
***அன்றே மறப்பது நன்று.***

***நன்மையை என்றும் மறக்காதே! தீமையை***
***அன்றே மறப்பது நன்று.***

*குறள் 109:*

***கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த***
***ஒன்றுநன் றுள்ளக் கெடும்.***

***துன்பத்தைச் செய்தாலும் அன்பரோ முன்செய்த***
***நன்மையை எண்ணி மற.***

*குறள் 110:*

***எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை***
***செய்ந்நன்றி கொன்ற மகற்கு.***

***இங்கே அறத்தை மறந்தாலும் வாழ்வுண்டு***
***நன்றி மறந்தாலோ தாழ்வு.***

---

### *12. நடுவுநிலைமை!*

*குறள் 111:*

*தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்*
*பாற்பட் டொழுகப் பெறின்.*

*ஒருதலைச் சார்பின்றி நீதி வழங்கும்*
*நடுநிலையே வாழ்வின் அறம்.*

*குறள் 112:*

*செப்பம் உடையவன் ஆக்கஞ் சிதைவின்றி*
*எச்சத்திற் கேமாப் புடைத்து.*

*எப்போதும் நீதிமானின் செல்வம் தலைமுறையை*
*வற்றாமல்  காக்கும் உணர்.*

*குறள் 113:*

*நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை*
*அன்றே யொழிய விடல்.*

*என்றும் நடுநிலையை விட்டால் வளம்சேரும்*
*என்றால் வளம்தவிர்த்தல் நன்று.*

*குறள் 114:*

*தக்கார் தகவிலர் என்ப தவரவர்*
*எச்சத்தாற் காணப் படும்.*

*கெட்டவரா? நல்லவரா? சென்றபின் எஞ்சிநிற்கும்*
*நற்புகழும் மாப்பழியும் சான்று.*

*குறள் 115:*

*கேடும் பெருக்கமும் இல்லல்ல நெஞ்சத்துக்*
*கோடாமை சான்றோர்க் கணி.*

*வாழ்வதும் தாழ்வதும் வாழ்வின் இயல்பாகும்!*
*கோடாமை சான்றோர்க் கழகு.*

*குறள் 116:*

***கெடுவல்யான் என்ப தறிகதன் நெஞ்சம்***
***நடுவொரீஇ அல்ல செயின்.***

***நடுநிலை விட்டுப் பிறழ்வதே இங்கே***
***கெடுதிக்(கு) அறிகுறி யாம்.***

*குறள் 117:*

***கெடுவாக வையா துலகம் நடுவாக***
***நன்றிக்கண் தங்கியான் தாழ்வு.***

***நடுநிலைப் பண்பாளர் தாழ்வினை என்றும்***
***கெடுதியாகப் பார்க்கா( து)  உலகு.***

*குறள் 118:*

***சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபாற்***
***கோடாமை சான்றோர்க் கணி.***

***துலாக்கோலைப் போல நடுநிலை போற்றல்***
***உலகிலே சான்றோர் சிறப்பு.***

*குறள் 119:*

***சொற்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா***
***உட்கோட்டம் இன்மை பெறின்.***

***உள்ளம் ஒருபக்கம் சாயாமல் நீதியைக் காப்பதே***
***நல்லோர் நடுநிலை யாம்.***

*குறள் 120:*

***வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்***
***பிறவும் தமபோல் செயின்.***

***நுகர்வோர்போல் எண்ணி வணிகத்தைச் செய்தல்***
***வணிகநெறி யாகும் உணர்***

## *13 அடக்கம் உடைமை*

*குறள் 121:*

***அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை***
***ஆரிருள் உய்த்து விடும்.***

***அடக்கம் இருந்தால் ஒளிமயமாகும் வாழ்வு!***
***அடங்காமை என்றும் இருள்.***

*குறள் 122:*

***காக்க பொருளா அடக்கத்தை ஆக்கம்***
***அதனினூஉங் கில்லை உயிர்க்கு.***

***போற்றும் அடக்கத்தைக் காக்கவேண்டும் செல்வம்போல் !***
***வேறுசெல்வம் இஃதைப்போல் ஏது.***

*குறள் 123:*

***செறிவறிந்து சீர்மை பயக்கும் அறிவறிந்***
***தாற்றின் அடங்கப் பெறின்.***

***அடக்கம் அறிவுடைமை என்றறிந்து வாழ்ந்தால்***
***அகங்குளிர வாழ்த்தும் உலகு.***

*குறள் 124:*

***நிலையின் திரியா தடங்கியான் தோற்றம்***
***மலையினும் மாணப் பெரிது.***

***நிலையில் பிறழாமல் தன்னடக்கம்  கொள்வோன்***
***பெருமை மலையின் பெரிது.***

*குறள் 125:*

***எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவருள்ளும்***
***செல்வர்க்கே செல்வம் தகைத்து.***

***எல்லோர்க்கும் பண்பே பணிவாகும்! மேலுமொரு***
***செல்வமாகும் செல்வந்தர்க் காம்.***

*குறள் 126:*

***ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்***
***எழுமையும் ஏமாப் புடைத்து.***

***உறுப்புகளை ஆமை ஒடுக்கிவாழ்தல் போல***
***புலனடக்கம் மாந்தர்க்(கு) அரண்.***

*குறள் 127:*

***யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்***
***சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.***

***நாவடக்கம் சொல்லடக்கம் இல்லையெனில் சொற்குற்றம்***
***ஏற்படுத்தும் ஆறாத் துயர்.***

*குறள் 128:*

***ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்***
***நன்றாகா தாகி விடும்.***

***சொன்னசொல் ஒன்றிலே தீயசொல் வந்தாலும்***
***நன்சொல் அனைத்துமே பாழ்.***

*குறள் 129:*

***தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே***
***நாவினாற் சுட்ட வடு.***

***தீப்புண்ணோ ஆறிவிடும் தீச்சொல்லால்***
***ஏற்பட்ட புண்ணாறா தே.***

*குறள் 130:*

***கதங்காத்துக் கற்றடங்கல் ஆற்றுவான் செவ்வி***
***அறம்பார்க்கும் ஆற்றின் நுழைந்து.***

***படித்தும் அடக்கமுடன் கோபமின்றி வாழ்வோர்***
***வழிபார்த்து நிற்கும் அறம்***

## *14. ஒழுக்கம் உடைமை*

*குறள் 131:*

*ஒழுக்கம் விழுப்பந் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.*

*ஒழுக்கமே வாழ்வில் உயர்வை வழங்கும்!
ஒழுக்கம் உயிரினும் மேல்.*

*குறள் 132:*

*பரிந்தோம்பிக் காக்க ஒழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினும் அஃதே துணை.*

*ஒழுக்கமே வாழ்வின் துணையாம்! அதனைப்
பழுதின்றிக் காத்தால் உயர்வு.*

*குறள் 133:*

*ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.*

*ஒழுக்கம் உயர்ந்த பிறப்பை உணர்த்தும்!
இழிவே ஒழுக்கமற்ற பண்பு.*

*குறள் 134:*

*மறப்பினும் ஓத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.*

*மறையை மறந்துவிட்டால் கற்கலாம் மீண்டும்!
ஒழுக்கம் குறைந்தால் இழிவு.*

*குறள் 135:*

*அழுக்கா றுடையான்கண் ஆக்கம்போன் றில்லை
ஒழுக்க மிலான்கண் உயர்வு.*

*பொறாமைக் குணமிருந்தால் செல்வமில்லை! பண்பில்
பிறழ்விருந்தால் இல்லை உயர்வு.*

*குறள் 136:*

***ஒழுக்கத்தி னொல்கார் உரவோர் இழுக்கத்தின்***
***ஏதம் படுபாக் கறிந்து.***

***ஒழுக்கம் பிறழ்ந்தால் இழிவென் றறிந்தோர்***
***ஒழுக்கம் தவறமாட்டார் சொல்.***

*குறள் 137:*

***ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை இழுக்கத்தின்***
***எய்துவ ரெய்தாப் பழி.***

***ஒழுக்கம் தலைநிமிர வைக்கும்! பிறழ்ந்தால்***
***பழியும் தலைகுனிவும் தான்.***

*குறள் 138:*

***நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கந் தீயொழுக்கம்***
***என்றும் இடும்பை தரும்.***

***நல்லொழுக்கம் நன்மை தருவது! தீயொழுக்கம்***
***அல்லலுக்கு வித்தூன்றும் சொல்.***

*குறள் 139:*

***ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய***
***வழுக்கியும் வாயாற் சொலல்.***

***தவறியும் தீயசொல் சொல்லார் ஒழுக்க***
***நெறிகொண்டு வாழ்வோர்கள் தாம்.***

*குறள் 140:*

***உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றுங்***
***கல்லா ரறிவிலா தார்.***

***உயர்ந்தோர் ஒழுக்கத்தை ஏற்க மறுப்போர்***
***பலகற்றும் கல்லார் உணர்.***

## *15.பிறனில்விழையாமை*

***குறள் 141:***

***பிறன்பொருளான் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்***
***தறம்பொருள் கண்டார்க ணில்.***

***பிறன்மனை நாடும் கயமை,***
***அறநூல்***
***அறிந்தோர் விழையமாட்டார் சொல்.***

***குறள் 142:***

***அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை***
***நின்றாரிற் பேதையா ரில்.***

***பிறன்மனை நாடுகின்ற குற்றத்தைச் செய்வோர்***
***அறம்பிறழ்ந்த கீழோர்க்கும் கீழ்.***

***குறள் 143:***

***விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரில்***
***தீமை புரிந்தொழுகு வார்.***

***புறத்திலே நட்பும் உளத்தில் துரோகம்***
***உடையோர் நடைப்பிணந் தான்.***

***குறள் 144:***

***எனைத்துணைய ராயினும் என்னாந் தினைத்துணையும்***
***தேரான் பிறனில் புகல்.***

***பிழையென் றறிந்தும் பிறன்மனை நாடல்***
***குணக்குன் றெனினும் பிணம்.***

*குறள் 145:*

***எளிதென இல்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்***
***விளியாது நிற்கும் பழி.***

***எளிதாய்ப் பிறர்மனையைத் தீண்டலாம் என்னும்***
***கழிசடையைத் தீண்டும் பழி.***

*குறள் 146:*

***பகைபாவம் அச்சம் பழியென நான்கும்***
***இகவாவாம் இல்லிறப்பான் கண்.***

***பகைதீமை அச்சம் பழியென்றும் நீங்கா***
***பிறன்மனை நாடுவோனை விட்டு.***

*குறள் 147:*

***அறனியலான் இல்வாழ்வா னென்பான் பிறனியலான்***
***பெண்மை நயவா தவன்.***

***பிறன்மனை நாடாத பண்பாளன் மட்டும்***
***அறங்காக்கும் இல்லறத்தா னாம்.***

*குறள் 148:*

***பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்***
***கறனென்றோ ஆன்ற வொழுக்கு.***

***பிறன்மனையை நாடாத  சான்றாண்மை ஒன்றே***
***அறமும் ஒழுக்கமு மாம்.***

*குறள் 149:*

***நலக்குரியார் யாரெனின் நாமநீர் வைப்பின்***
***பிறற்குரியாள் தோள்தோயா தார்.***

***கடல்சூழ் உலகத்தின் நன்மைகள் எல்லாம்***
***பிறர்மனைத் தோள்சேரா தார்க்கு.***

*குறள் 150:*

***அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்***
***பெண்மை நயவாமை நன்று.***

***பிறன்மனை நாடும் செயலோ அறத்தின்***
***நெறிமறத்தல் வாழ்வினும் தீது.***

---

## *16* பொறையுடைமை

*குறள் 151:*

***அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை***
***இகழ்வார்ப் பொறுத்தல் தலை.***

***அகழ்ந்தெடுத்தும்  நம்மையே தாங்கும் நிலம்போல்***
***இகழ்வாரை நாம்பொறுத்தல் பண்பு.***

*குறள் 152:*

***பொறுத்த லிறப்பினை யென்றும் அதனை***
***மறத்த லதனினும் நன்று.***

***பொறுப்பதைக் காட்டிலும் தீங்கிழைத்தால், தீங்கை***
***மறப்பதே பண்பட்டோர் சால்பு.***

*குறள் 153:*

***இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்***
***வன்மை மடவார்ப் பொறை.***

***வன்கொடுமை ஏழ்மை! வலிமையோ பண்பற்றோர்***
***செய்யும் செயல்பொறுத்த லாம்.***

*குறள் 154:*

***நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை போற்றி யொழுகப் படும்.***

***பொறுமையின் சின்னமாக உள்ளவரை மாந்தர் நிறைகுடம் என்பார் புகழ்ந்து.***

*குறள் 155:*

***ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.***

***பொறுமை இழந்தோரைத் தூற்றுவார்! என்றும் பொறுத்தாரைப் பொன்னென்பார் இங்கு.***

*குறள் 156:*

***ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்.***

***தவறுசெய்தால் தண்டித்தால் கடுகளவே இன்பம்! பொறுத்தாலோ வாழ்நாள் புகழ்.***

*குறள் 157:*

***திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந் தறனல்ல செய்யாமை நன்று.***

***பழிக்குப் பழியென்று வாழ்தல் மடமை! பழிமறந்து வாழ்வதே பண்பு.***

*குறள் 158:*

***மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தந் தகுதியான் வென்று விடல்.***

***செருக்குடன் தீங்கிழைக்கும் தீயோரை என்றும் பொறுமையுடன் வெல்தல் எளிது.***

*குறள் 159:*

***துறந்தாரின் தூய்மை யுடையர் இறந்தார்வாய்***
***இன்னாச்சொல் நோற்கிற் பவர்.***

***கொடியோரின் சொற்களை ஏற்றுப் பொறுப்போர்***
***துறவிகளுக் கொப்பாவார் சொல்.***

*குறள் 160:*

***உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்***
***இன்னாச்சொ னோற்பாரிற் பின்.***

***தன்பசி தாங்கியே நோன்பிருப்போர் எல்லோரும்***
***வன்சொல் பொறுத்தார்க்குப் பின்.***

---

*17.அழுக்காறாமை*

*குறள் 161:*

***ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்***
***தழுக்கா றிலாத இயல்பு.***

***அழுக்காறை உள்ளத்தில் ஏற்காத பண்பாம்***
***ஒழுக்க நெறிகளைப் போற்று.***

*குறள் 162:*

***விழுப்பேற்றின் அஃதொப்ப தில்லையார் மாட்டும்***
***அழுக்காற்றின் அன்மை பெறின்***

***ஒருவ ரிடமும் பொறாமையற்ற பண்பே***
***பெருமைக் குரியநற் பேறு.***

*குறள் 163:*

***அறனாக்கம் வேண்டாதான் என்பான் பிறனாக்கம்***
***பேணா தழுக்கறுப் பான்.***

***அறநெறிச் செல்வத்தை வேண்டாதான் இங்கே***
***பொறாமை அடைவான் தகித்து.***

*குறள் 164:*

***அழுக்காற்றின் அல்லவை செய்யார் இழுக்காற்றின்***
***ஏதம் படுபாக் கறிந்து.***

***நெறிபிறழ்ந்தால் துன்பம் வருமென் றறிந்தோர்***
***பொறாமைச் செயல்தவிர்ப்பார் கூறு.***

*குறள் 165:*

***அழுக்கா றுடையார்க் கதுசாலும் ஒன்னார்***
***வழுக்கியுங் கேடீன் பது.***

***பொறாமை படைத்தோர்க்கு வேறுபகை உண்டோ?***
***பொறாமையே வீழ்த்தும் உணர்.***

*குறள் 166:*

***கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்***
***உண்பதூஉ மின்றிக் கெடும்.***

***கொடுப்பதைப் பார்த்துப் பொறுக்காதோர் சுற்றம்***
***உடையுண வின்றிக் கெடும்.***

*குறள் 167:*

***அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவள்***
***தவ்வையைக் காட்டி விடும்.***

***உள்ளம் பொறாமை வசப்பட்டால் செல்வமோ***
***ஏழ்மைக்கு வாய்ப்பளிக்கும் சொல்.***

*குறள் 168:*

***அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்***
***தீயுழி உய்த்து விடும்.***

***பொறாமையோ செல்வத்தைச் சீரழித்தும் தீய***
***நெறியிலும் விட்டுவிடும் சொல்.***

*குறள் 169:*

***அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்***
***கேடும் நினைக்கப் படும்.***

***முற்றும் பொறாமைதான்! வாழ்க்கை வளமுடன்!***
***சற்றும் பொறாமையில்லை! வாழ்க்கை வறுமைதான்!***
***இப்படி வாழ்க்கை முரண்.***

*குறள் 170:*

***அழுக்கற் றகன்றாரும் இல்லையஃ தில்லார்***
***பெருக்கத்தில் தீர்ந்தாரு மில்.***

***பொறாமைக் குணத்தோர் உயர்ந்ததில்லை  வாழ்வில்!***
***பொறாமையற்றோர் தாழ்ந்ததில்லை சாற்று.***

---

## *18.வெஃகாமை*

*குறள் 171:*

***நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்***
***குற்றமும் ஆங்கே தரும்.***

***பிறரின் பொருளைக் கவர்ந்தால் குடும்பம்***
***அழியும்! பெருகிவரும் தீது.***

*குறள் 172:*

*படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்*
*நடுவன்மை நாணு பவர்.*

*கவர்தல் பழிச்செயல் என்றேதான் அஞ்சித்*
*தவிர்ப்பார் நீதிமான் இங்கு.*

*குறள் 173:*

*சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே*
*மற்றின்பம் வேண்டு பவர்.*

*இன்பம் கிடைக்கிற( து) என்றே அறம்பிறழ்ந்து*
*பண்புள்ளோர் ஏற்கமாட்டார் கூறு.*

*குறள் 174:*

*இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற*
*புன்மையில் காட்சி யவர்.*

*புலனடக்கம் கொண்டோர் வறுமையில் கூட*
*பிறர்பொருள் நாடமாட்டார் கூறு.*

*குறள் 175:*

*அஃகி யகன்ற அறிவென்னாம் யார்மாட்டும்*
*வெஃகி வெறிய செயின்.*

*மற்றவர்க் குள்ள பொருளைப் பகுத்தறிவு*
*பெற்றோர் கவரமாட்டார் கூறு.*

*குறள் 176:*

*அருள்வெஃகி யாற்றின்கண் நின்றான் பொருள்வெஃகிப்*
*பொல்லாத சூழக் கெடும்.*

*அருள்நாடும் இல்லறத்தான் மாற்றான் பொருளைக்*
*கவர்ந்தால் அழிந்திடுவான் காண்.*

*குறள் 177:*

***வேண்டற்க வெஃகியாம் ஆக்கம் விளைவயின்***
***மாண்டற் கரிதாம் பயன்.***

***மாற்றார் பொருளைக் கவர்ந்து வளம்பெற்றால்***
***அப்பயன் தீமை தரும்.***

*குறள் 178:*

***அஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெஃகாமை***
***வேண்டும் பிறன்கைப் பொருள்.***

***தன்செல்வம் குன்றா திருக்கப் பிறர்பொருளை***
***என்றும் கவராமல் வாழ்.***

*குறள் 179:*

***அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேருந்***
***திறனறிந் தாங்கே திரு.***

***பிறர்பொருள்மேல் ஆசையற்ற பண்பே அறமாம்!***
***அவர்நாடி செல்வம் வரும்.***

*குறள் 180:*

***இறலீனும் எண்ணாது வெஃகின் விறலீனும்***
***வேண்டாமை யென்னுஞ் செருக்கு.***

***பிறர்பொருள் ஆசை அழிவதான்!! ஆசை***
***புறக்கணித்துச் சேர்த்தால் வளம்.***

---

## *19 புறங்கூறாமை*

*குறள் 181:*

***அறங்கூறா னல்ல செயினும் ஒருவன்***
***புறங்கூறா னென்றல் இனிது.***

***அறவழி போற்றவில்லை என்றாலும் நாளும்***
***புறங்கூறி வாழ்தலோ தீது.***

*குறள் 182:*

***அறனழீஇ யல்லவை செய்தலின் தீதே***
***புறனழீஇப் பொய்த்து நகை.***

***அறமற்ற வாழ்வினும்  நேரில் புகழ்ந்தும்***
***மறைவில் புறம்பேசல் கேடு.***

*குறள் 183:*

***புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல்***
***அறங்கூறும் ஆக்கந் தரும்.***

***மறைவில் புறம்பேசி நேரில் புகழ்ந்து***
***கடைந்தெடுத்த கோழையாய் வாழ்கின்ற வேடம்***
***நடைப்பிணமாய் மாற்றும் உணர்.***

*குறள் 184:*

***கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க***
***முன்னின்று பின்னோக்காச் சொல்.***

***கண்ணெதிரே நேர்படப் பேசு தவறில்லை!***
***பின்னால் புறங்கூறல் தீது.***

*குறள் 185:*

***அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்***
***புன்மையாற் காணப் படும்.***

***புறம்பேசும் பண்புள்ளோன் என்றும் அறத்தைப்***
***புறக்கணித்து வாழ்வோன் அறி.***

*குறள் 186:*

*பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்*
*திறன்தெரிந்து கூறப் படும்.*

*பிறரைப் பழித்துப் புறம்பேசு வோனைப்*
*பிறரும் குறைசொல்வார் கூறு.*

*குறள் 187:*

*பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி*
*நட்பாடல் தேற்றா தவர்.*

*அகங்குளிர சேர்த்துவைக்கும் பண்பற்றோர் நாளும்*
*புறம்பேசி தாழ்வார் கலைத்து.*

*குறள் 188:*

*துன்னியார் குற்றமுந் தூற்றும் மரபினர்*
*என்னைகொல் ஏதிலார் மாட்டு.*

*நண்பரைப் பற்றிக் குறைசொல்வோர்  என்னதான்*
*அன்னியரைக் கூறமாட்டார் கூறு?*

*குறள் 189:*

*அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்*
*புன்சொ லுரைப்பான் பொறை.*

*புறம்பேசு வோரைச் சுமத்தலும் இங்கே அறமென்றே ஏற்கும் நிலம்.*

*1குறள் 190:*

*ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்*
*தீதுண்டோ மன்னு முயிர்க்கு.*

*மற்றவர் குற்றமுடன்  தன்குற்றம்  ஒப்பிட்டால்*
*எப்போதும் இங்கே புறங்கூறி வாழமாட்டோம்!*
*துன்பம் விலகும் உணர்.*

## *20 பயனிலசொல்லாமை!*

*குறள் 191:*

*பல்லார் முனியப் பயனில சொல்லுவான்*
*எல்லாரும் எள்ளப் படும்.*

*எல்லோரும் கேட்டு முகஞ்சுழிக்கப்  பேசுவோரை*
*எல்லோரும் தூற்றுவார் சொல்.*

*குறள் 192:*

*பயனில பல்லார்முன் சொல்லல் நயனில*
*நட்டார்கட் செய்தலிற் றீது.*

*பலர்முன் பயனற்ற சொல்பேசல், நட்பைக்*
*கலைக்கின்ற தீமையினும் கீழ்.*

*குறள் 193:*

*நயனில னென்பது சொல்லும் பயனில*
*பாரித் துரைக்கும் உரை.*

*பயனற்ற சொல்லை விரித்துரைப்போன் நீதி*
*தவறுவோன் என்றுணர்த்தும் சொல்.*

*குறள் 194:*

*நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்*
*பண்பில்சொல் பல்லா ரகத்து.*

*பலரிடம் பண்பும்  பயனுமற்ற சொல்லை*
*விளம்புதல்  நன்மைக்குத் தீது.*

*குறள் 195:*

*சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில*
*நீர்மை யுடையார் சொலின்.*

*பார்போற்றும் சான்றோர் பயனற்ற சொல்சொன்னால்*
*வேரோடும் நன்மதிப்போ பாழ்.*

*குறள் 196:*

***பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்***
***மக்கட் பதடி யெனல்.***

***பயனற்ற  சொற்களைப் பேசுவோனை மக்கள்***
***பதரென்பார், மானிடராய் அன்று.***

*குறள் 197:*

***நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்***
***பயனில சொல்லாமை நன்று.***

***அறமற்ற சொற்களைச் சொன்னாலும் சான்றோர்***
***பயனற்ற சொல்தவிர்த்தல் நன்று.***

*குறள் 198:*

***அரும்பய னாயும் அறிவினார் சொல்லார்***
***பெரும்பய னில்லாத சொல்.***

***அரிய பயன்களை ஆயும் அறிஞர்***
***பயனற்ற சொல்சொல்லார் பார்.***

*குறள் 199:*

***பொருள்தீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருள்தீர்ந்த***
***மாசறு காட்சி யவர்.***

***தெளிந்த அறிவுடைய மாசற்றோர் சொல்லார்***
***பயனற்ற சொற்களைத் தான்.***

*குறள் 200:*

***சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க***
***சொல்லிற் பயனிலாச் சொல்.***

***நல்ல பயனுள்ள சொற்களைச் சொல்லவேண்டும்!***
***இல்லையேல் சொல்லாதே இங்கு***

## *21. தீவினையச்சம்*

***குறள் 201:***

***தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்***
***தீவினை யென்னுஞ் செறுக்கு.***

***தீயவர்கள் தீயசெயல் செய்வதற்கு அஞ்சமாட்டார்!***

***குறள் 202:***

***தீயவை தீய பயத்தலால் தீயவை***
***தீயினும் அஞ்சப் படும்.***

***தீயசெயல் தீமை தருவதால் செய்வதற்கோ***
***தீயினும் கேடென்றே அஞ்சு.***

***குறள் 203:***

***அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய***
***செறுவார்க்குஞ் செய்யா விடல்.***

***கெடுதி புரிந்தால் கெடுதிசெய் யாமல்***
***இருக்கும் அறிவே சிறப்பு.***

***குறள் 204:***

***மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்***
***அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு.***

***மறந்தும் கெடுதிசெய்தல் தீதாகும்! செய்தால்***
***அறமுன்னைத் தண்டிக்கும் கூறு.***

***குறள் 205:***

***இலனென்று தீயவை செய்யற்க செய்யின்***
***இலனாகும் மற்றுப் பெயர்த்து.***

***வறுமையால்   தீயவை செய்யாதே செய்தால்***
***வறுமையே வாட்டும் தொடர்ந்து.***

*குறள் 206:*

***தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால***
***தன்னை அடல்வேண்டா தான்.***

***தீச்செயல் தன்னை வருத்துமென்றால் அச்செயலை***
***மாற்றார்க்கும் செய்தல் தவிர்.***

*குறள் 207:*

***எனைப்பகை யுற்றாரும் உய்வர் வினைப்பகை***
***வீயாது பின்சென் றடும்.***

***கணைபோன்ற நேர்ப்பகைக்குத் தப்பலாம்! தீய***
***வினைப்பகைக்குத் தண்டனை உண்டு.***

*குறள் 208:*

***தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை***
***வீயா தடியுறைந் தற்று.***

***தீமைசெய்தல், ஒட்டி இருக்கும் நிழல்போல***
***தீயோரை ஒட்டிநிற்கும் தீங்கு.***

*குறள் 209:*

***தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்***
***துன்னற்க தீவினைப் பால்.***

***தன்வாழ்வை வாழ நினைப்பவன்  தீயசெயல்***
***தன்னை விரும்பமாட்டான் செப்பு.***

*குறள் 210:*

***அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித்***
***தீவினை செய்யான் எனின்.***

***முரடன்தான்! கேடுசெய்ய வில்லையென்றால் தீமை***
***நெருங்கா தவர்க்கென்றே நம்பு***

## *22. ஒப்புரவறிதல்*

*குறள் 211:*
*கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்*
*டென்னாற்றுங் கொல்லோ உலகு.*

*மழைக்கென்ன கைம்மா றளிப்பார்? மழைபோல்*
*உதவுவோரும் நாடமாட்டார் இங்கு.*

*குறள் 212:*

*தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு*
*வேளாண்மை செய்தற் பொருட்டு.*

*வாழ்க்கையில் சேர்க்கின்ற செல்வங்கள் எல்லாமே*
*ஏழைக்குத் தந்துதவத் தான்.*

*குறள் 213:*

*புத்தே ளுலகத்தும் ஈண்டும் பெறலரிதே*
*ஒப்புரவின் நல்ல பிற.*

*எந்த உலகிலும் உற்றாரைக் காப்பாற்றும்*
*ஒப்புரவுப்  பண்போ அரிது.*

*குறள் 214:*

*ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்*
*செத்தாருள் வைக்கப் படும்.*

*மற்றவர்க்கு அன்பாய் உதவுபவன் வாழ்பவன் !*
*செத்தார்போல் மற்றவர் சொல்.*

*குறள் 215:*

*ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்*
*பேரறி வாளன் திரு.*

*ஊருக் குதவுகின்ற ஊருணிபோல்*
*பேரறி*
*வாளனிடம் உள்ளசெல்வம் இங்கு.*

*குறள் 216:*

***பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்***
***நயனுடை யான்கண் படின்.***

***கருணைமனங் கொண்டவரின் செல்வம் பழுத்த***
***மரமொன்று ஊர்நடுவே போல்.***

*குறள் 217:*

***மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்***
***பெருந்தகை யான்கண் படின்.***

***பெருந்தன்மை யாளனின் செல்வம் மருந்து***
***மரம்போல் பயன்படும் சொல்.***

*குறள் 218:*

***இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்***
***கடனறி காட்சி யவர்.***

***உதவ முடியாத போதும் உதவத்***
***தயங்கமாட்டார் ஏழைக்குத் தான்.***

*குறள் 219:*

***நயனுடையான் நல்கூர்ந்தா னாதல் செயும்நீர***
***செய்யா தமைகலா வாறு.***

***உதவ முடியவில்லை என்றே வருந்தும்***
***மனமுடையோன் ஏழ்மை நிலை.***

*குறள் 220:*

***ஒப்புரவி னால்வருங் கேடெனின் அஃதொருவன்***
***விற்றுக்கோள் தக்க துடைத்து.***

***ஒப்புரவால் கேடுவரும் என்றால் தனைவிற்றும்***
***அக்கேட்டை வாங்குதல் நன்று.***

*23 ஈகை!*

*குறள் 221:*

***வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாங்***
***குறியெதிர்ப்பை நீர துடைத்து.***

***வறியோர்க்(கு) ஈதலே ஈகையாம்! இன்றிப்***
***பிறர்க்களித்தல் தன்னல மே.***

*குறள் 222:*

***நல்லா றெனினுங் கொளல்தீது மேலுலகம்***
***இல்லெனினும் ஈதலே நன்று.***

***பிறரிடம் வாங்குதல் நன்றல்ல! ஆனால்***
***பிறர்க்கோ ஈதல் சிறப்பு.***

*குறள் 223:*

***இலனென்னும் எவ்வம் உரையாமை ஈதல்***
***குலனுடையான் கண்ணே யுள.***

***தனது வறுமையைக் காட்டாமல் ஈதல்***
***மனங்கொள்தல் என்றும் சிறப்பு.***

*குறள் 224:*

***இன்னா திரக்கப் படுதல் இரந்தவர்***
***இன்முகங் காணு மளவு.***

***இல்லையென்று வந்துநிற்போர் இன்முகம்  காணுமட்டும்***
***தொல்லைதான் ஈவார்க்கு! செப்பு.***

*குறள் 225:*

***ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை***
***மாற்றுவா ராற்றலிற் பின்.***

***ஊண்பசி தாங்குகின்ற நோன்பினைக் காட்டிலும்***
***ஏழைக் குணவளித்தல் மேல்.***

*குறள் 226:*

***அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்***
***பெற்றான் பொருள்வைப் புழி.***

***மற்றவர் வன்பசி ஆற்றுவது சேர்த்துவைத்த***
***செல்வத்தை வைக்கும் இடம்.***

*குறள் 227:*

***பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்***
***தீப்பிணி தீண்ட லரிது.***

***வாழ்வில் பகிர்ந்துண்போர் தம்மைப் பசிநோயோ***
***நீண்ட நெருங்கா துணர்.***

*குறள் 228:*

***ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை***
***வைத்திழக்கும் வன்க ணவர்.***

***ஈயாமல் பொருளை இழப்போர், அறியாரோ***
***ஈவதன் இன்பத்தை இங்கு?***

*குறள் 229:*

***இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய***
***தாமே தமிய ருணல்.***

***பிறருக்கே ஈயாமல் சேர்த்துக் குவித்தல்,***
***இரத்தலை விஞ்சும் இழிவு.***

*குறள் 230:*

***சாதலின் இன்னாத தில்லை இனிததூஉம்***
***ஈத லியையாக் கடை.***

***சாதலின் துன்பத்தை விஞ்சும்  இயலாமை***
***வேதனைத் துன்பம் உணர்.***

## *24 புகழ்*

*குறள் 231:*

*ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல*
*தூதிய மில்லை உயிர்க்கு.*

*ஏழைக் குதவவேண்டும்! அந்தப் புகழொன்றே*
*வாழ்வின் பயனாகும் இங்கு.*

*குறள் 232:*

*உரைப்பா ருரைப்பவை யெல்லாம் இரப்பார்க்கொன்*
*றீவார்மேல் நிற்கும் புகழ்.*

*ஒருவரைப் போற்றுவதே ஏழைக் குதவும்*
*புகழ்பெற்ற காரணத்தால் தான்.*

*குறள் 233:*

*ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லாற்*
*பொன்றாது நிற்பதொன் றில்.*

*மண்ணுலகில் என்றும் நிலைத்திருக்கும் பண்பாய்த்*
*திகழ்தல் புகழ்மட்டுந் தான்.*

*குறள் 234:*

*நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்*
*போற்றாது புத்தே ளுலகு.*

*வருமுலகு கூட அறிஞரை விட்டுப்*
*பொதுநலத் தொண்டர் புகழையே போற்றும்!*
*பொதுநலத் தொண்டே புகழ்.*

*குறள் 235:*

***நத்தம்போல் கேடும் உளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லால் அரிது.***

***நற்புகழைத் தொண்டுகளால் ஈட்டி அறிஞர்கள்
செத்தபின்பும் பேசப் படும்.***

*குறள் 236:*

***தோன்றின் புகழோடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.***

***தேர்ந்தெடுத்தால் அத்துறை வல்லுநராய் ஆகவேண்டும்!
ஆர்வமில்லை,நாடாமை நன்று.***

*குறள் 237:*

***புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன்.***

***புகழ்வர வில்லையெனில் நோகவேண்டும் தன்னை!
இகழ்வோரைச் சாடுவதேன்? சொல்.***

*குறள் 238:*

***வசையென்ப வையத்தார்க் கெல்லாம் இசையென்னும்
எச்சம் பெறாஅ விடின்.***

***தனக்குப் பிறகுமிங்கே நிற்கும் புகழை
மனிதன் பெறவில்லை என்றாலோ வாழ்வைப்
பழியென்று சொல்லும் உலகு.***

*குறள் 239:*

***வசையிலா வண்பயன் குன்றும் இசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.***

***புகழற்ற யாக்கை சுமந்த நிலமோ
விளைச்சலற்ற வெற்றுத் தரிசு.***

*240*
***வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய வாழ்வாரே வாழா தவர்.***

***பழியற்ற வாழ்க்கையே வாழ்க்கை, புகழின் ஒளியற்ற வாழ்க்கை இருள்.***

---

## *25 அருளுடைமை*

*குறள் 241:*

***அருட்செல்வஞ் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம் பூரியார் கண்ணு முள்.***

***பெருஞ்செல்வம் கீழோ ரிடத்திலும் உண்டு! அருட்செல்வம் ஒன்றே சிறப்பு.***

*குறள் 242:*

***நல்லாற்றான் நாடி யருளாள்க பல்லாற்றால் தேரினும் அஃதே துணை.***

***பல்வழியில்  ஆய்ந்தாலும் வாழ்வில் அருளுடைமை நல்லதுணை என்றேதான்  சொல்.***

*குறள் 243:*

***அருள்சேர்ந்த நெஞ்சினார்க் கில்லை இருள்சேர்ந்த இன்னா உலகம் புகல்.***

***அருள்மனம்  கொண்டோர் அறியாமைத் துன்ப இருளுலகில் வாழமாட்டார் சொல்.***

*குறள் 244:*

***மன்னுயி ரோம்பி அருளாள்வாற் கில்லென்ப தன்னுயி ரஞ்சும் வினை.***

***இங்கே உயிரினத்தைக் காக்கும்  கருணைகொண்டோர் தன்னுயி ரஞ்சமாட்டார் சாற்று..***

*குறள் 245:*

***அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.***

***துன்பம் அருளுடையார்க் கில்லையே! காற்றுலாவும்
மண்ணுலகச் சான்றோரே சான்று.***

*குறள் 246:*

***பொருள்நீங்கிப் பொச்சாந்தா ரென்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.***

**அருளற்றுத் தீமை புரிந்தோர்
கடமை,
பொருளை மறந்தோராம் கூறு.**

*குறள் 247:*

***அருளில்லார்க் கவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்
கிவ்வுலகம் இல்லாகி யாங்கு.***

***பொருளில்லை இல்லறம் இல்லை! கருணை
பெருகாத் துறவறம் வீண்.***

*குறள் 248:*

***பொருளற்றார் பூப்ப ரொருகால் அருளற்றார்
அற்றார்மற் றாதல் அரிது.***

***பொருளிழந்தால் மீண்டுவர வாய்ப்பிருக்கும்! ஆனால்
அருளிழந்தால் வாய்ப்பில்லை சொல்.***

*குறள் 249:*

***தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின்
அருளாதான் செய்யும் அறம்.***

***அறிவற்றோன் நூற்பொருள் காணான்! அதுபோல்
நெறியற்றோன் போற்றும் அறம்.***

*குறள் 250:*

***வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின்***
***மெலியார்மேற் செல்லு மிடத்து.***

***எளியோரைத் துன்புறுத்தும் நேரத்தில் நம்மை***
***வலியோர் வதைப்பதை எண்ணு.***

---

*26 புலால்மறுத்தல்*

*குறள் 251:*

***தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பான்***
***எங்ஙனம் ஆளும் அருள்.***

***தன்னுடலைத் தான்வளர்க்க மற்றோர் உயிருடலைத்***
***தின்போ னிடம்கருணை ஏது?***

*குறள் 252:*

***பொருளாட்சி போற்றாதார்க் கில்லை அருளாட்சி***
***ஆங்கில்லை ஊன்றின் பவர்க்கு.***

***பொருள்பயன் இல்லை! பொருள்காவா தார்க்கு!***
***அருள்பயன் ஊன்தின்பார்க் கில்.***

*குறள் 253:*

***படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்கா தொன்றன்***
***உடல்சுவை யுண்டார் மனம்.***

***பகைவருக்(கு) இரக்கமில்லை! இறைச்சி சுவைப்போர்***
***அகத்தில் கருணையில்லை சாற்று.***

*குறள் 254:*

***அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்***
***பொருளல்ல தவ்வூன் தினல்.***

***பிறஉயிரைக் கொல்தல் அருளல்ல! வாழ்வில்***
***அறமல்ல ஊன்தின்னல்! சொல்.***

*குறள் 255:*

***உண்ணாமை யுள்ள துயிர்நிலை ஊனுண்ண***
***அண்ணாத்தல் செய்யா தளறு.***

***உண்பதில்லை ஊனென்ற கொள்கை மனிதநேயம்!***
***உண்பவரைச் சூழ்ந்துவிடும் கேடு.***

*குறள் 256:*

***தினற்பொருட்டால் கொல்லா துலகெனின் யாரும்***
***விலைப்பொருட்டால் ஊன்றருவா ரில்.***

***இறைச்சியைத்  தின்பதற்குக் கொல்வதில்லை என்றால்***
***இறைச்சிவிற்க ஆளில்லை சாற்று..***

*குறள் 257:*

***உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்***
***புண்ண துணர்வார்ப் பெறின்.***

***இறைச்சியோ வேறோர் உடலேந்தும் புண்ணே!***
***இதையுணர்ந்து உண்ணாமல் வாழ்.***

*குறள் 258:*

***செயிரின் தலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்***
***உயிரின் தலைப்பிரிந்த ஊன்.***

***அறிவார்ந்த ஆன்றோர் உயிர்ப்பிரிந்த மற்ற***
***இறைச்சியை ஏற்கமாட்டார் கூறு.***

*குறள் 259:*

***அவிசொரிந் தாயிரம் வேட்டலின் ஒன்றன்***
***உயிர்செகுத் துண்ணாமை நன்று.***

***பொருளிட்டு வேள்வி படைத்தலினும் ஊனை***
***விருப்புடன் உண்ணாமை நன்று.***

*குறள் 260:*

***கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி***
***எல்லா உயிருந் தொழும்.***

***கொல்லாமல் வாழ்வோனை ஊனை மறுப்பவனை***
***இவ்வுலகம் சூழ்ந்து தொழும்***

---

*27 தவம்*

*குறள் 261:*

***உற்றநோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை***
***அற்றே தவத்திற் குரு.***

***மற்றவர்க்குத் துன்பம் கொடுக்காமல், புண்படுத்தும்***
***மற்றவரைத் தாங்கல் தவம்.***

*குறள் 262:*

***தவமுந் தவமுடையார்க் காகும் அவமதனை***
***அஃதிலார் மேற்கொள் வது.***

***புலனடக்கம் கொண்டோர் தவக்கோலம் நன்றே!***
***இலாதோர் தவக்கோலம் வீண்.***

*குறள் 263:*

***துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொான்***
***மற்றை யவர்கள் தவம்.***

***துறவிக் குதவவேண்டும்  என்றே தவத்தை***
***மறந்தனரோ மற்றவர்கள் இங்கு,?***

*குறள் 264:*

***ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும்***
***எண்ணின் தவத்தான் வரும்.***

***வன்பகையை மாற்றவும் நட்பை வளர்க்கவும்***
***என்றும் உதவும் தவம்.***

*குறள் 265:*

***வேண்டிய வேண்டியாங் கெய்தலால் செய்தவம்***
***ஈண்டு முயலப் படும்.***

***வேண்டுவ தெல்லாம் தவத்தால் கிடைப்பதால்***
***ஏந்துவோம் இல்லறத்தில் தான்.***

*குறள் 266:*

***தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்***
***அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு.***

***தவம்செய்வோர்  தன்கடமை செய்வோர்! பிறரோ***
***வலையாசைக் குள்துடிக்கும் மீன்.***

*குறள் 267:*

***சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடுந் துன்பஞ்***
***சுடச்சுட நோற்கிற் பவர்க்கு.***

***சுடச்சுட பொன்னொளிரும்! துன்பத்தைத் தாங்கி***
***நடக்கும் தவமளிக்கும் மாண்பு.***

*குறள் 268:*

***தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய***
***மன்னுயி ரெல்லாந் தொழும்.***

***தன்னுயிர்,தானென்னும் ஆணவம் இல்லாத***
***பொன்மனத்தைப் போற்றும் உலகு.***

*குறள் 269:*

***கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்***
***ஆற்றல் தலைப்பட் டவர்க்கு.***

***வாட்டுகின்ற  துன்பத்தைத் தாங்கும் உறுதிகொண்டோர்***
***கூற்றையும் வெல்வார் நிமிர்ந்து.***

*குறள் 270:*

***இலர்பல ராகிய காரணம் நோற்பார்***
***சிலர்பலர் நோலா தவர்.***

***தவத்தில் சிலரும் தவிர்ப்பில் பலரும்***
***அவனியில் உள்ளதன் போக்கால் அடக்கம்***
***தவிர்ப்போர் பலரானார் இங்கு.***

---

### *28 கூடா ஒழுக்கம்*

*குறள் 271:*

***வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்***
***ஐந்தும் அகத்தே நகும்.***

***வஞ்சக எண்ணங்கள் கொண்டோர் ஒழுக்கத்தை***
***ஐம்பூதம் நம்முள் நகும்.***

*குறள் 272:*

***வானுயர் தோற்றம் எவன்செய்யுந் தன்நெஞ்சத்***
***தானறி குற்றப் படின்.***

***தான்செய்தல் குற்றம் எனத்தெரிந்தும் செய்பவர்கள்***
***பூண்டுள்ள வேடம் துறவு.***

*குறள் 273:*

***வலியில் நிலைமையான் வல்லுருவம் பெற்றம்***
***புலியின்தோல் போர்த்துமேய்ந் தற்று.***

***இழிந்தோர்கள் நல்லவர்போல் வாழ்தல், பசுக்கள்***
***புலித்தோ லணிந்துமேய்தல் போல்.***

*குறள் 274:*

***தவமறைந் தல்லவை செய்தல் புதல்மறைந்து***
***வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.***

***துறவி ஒழுக்கமின்றி வாழ்வது,***
***வேடன்***
***மறைந்திருந்துப் புள்பிடித்தல் போல்.***

*குறள் 275:*

***பற்றற்றேம் என்பார் படிற்றொழுக்கம் எற்றெற்றென்***
***றேதம் பலவுந் தரும்.***

***பற்றில்லை என்றேதான் பொய்சொல்லி வாழ்வோரைச்***
***சுற்றும் துயரங்கள் சூழ்ந்து.***

*குறள் 276:*

***நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து***
***வாழ்வாரின் வன்கணா ரில்.***

***வஞ்சகரும், பற்றை விடாமல் துறவியைப்போல்***
***இங்கே நடிப்பவரும் ஒன்று.***

*குறள் 277:*

***புறங்குன்றி கண்டனைய ரேனும் அகங்குன்றி***
***மூக்கிற் கரியா ருடைத்து.***

***புறத்திலே குன்றிமணி செம்மை!***
***அகத்தில்***
***கறைபோல் கருமைகொண்டோர் உண்டு.***

*குறள் 278:*

***மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி***
***மறைந்தொழுகு மாந்தர் பலர்.***

***மனமெல்லாம் மாசு! புறத்தோற்றம்***
***தூய்மை!***
***தினவெடுத்தோர் இவ்வுலகில் உண்டு.***

*குறள் 279:*

***கணைகொடியது யாழ்கோடு செவ்விதாங் கனை***
***வினைபடு பாலாற் கொளல்.***

***கணையோ அழகெனினும்  துன்பந்தான்! யாழோ***
***மனங்கவரும் தோற்றமில்லை! மீட்டினால்***
***இன்பம்!***
***வினையால் கணித்தலே நன்று.***

*குறள் 280:*

***மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்***
***பழித்த தொழித்து விடின்.***

***பழிச்செயலை விட்டால் முடிவளர்த்தல் மற்றும்***
***மழித்தலெல்லாம் வேண்டாம் உணர்.***

### *29. கள்ளாமை*

*குறள் 281:*

***எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்***
***கள்ளாமை காக்கதன் நெஞ்சு.***

***முள்ளாய் உறுத்தும் இகழ்ச்சியின்றி வாழ்வதற்குக்***
***கொள்ளை,திருட்டைத் தவிர்.***

*குறள் 282:*

***உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன்பொருளைக்***
***கள்ளத்தால் கள்வே மெனல்.***

***கள்ள வழியில் கவர்வேன், எனமனத்தால்***
***உள்ளுவதுத் தீதே! உணர்.***

*குறள் 283:*

***களவினா லாகிய ஆக்கம் அளவிறந்***
***தாவது போலக் கெடும்.***

***களவால் பொருள்கள் பெருகுவதாய்த் தோன்றும்!***
***அழியும் அனைத்தும் விரைந்து.***

*குறள் 284:*

***களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்***
***வீயா விழுமந் தரும்.***

***களவாடும் ஆசை நிறைவேறும்!***
***ஆனால்***
***வளையவந்து தாக்கும் துயர்.***

*குறள் 285:*

***அருள்கருதி அன்புடைய ராதல் பொருள்கருதிப்***
***பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.***

***பொருளைத் திருடுகின்ற ஆசை இருந்தால்***
***அருள்பண்பு போய்விடும் சொல்.***

*குறள் 286:*

***அளவின்கண் நின்றொழுக லாற்றார் களவின்கண்***
***கன்றிய காத லவர்.***

***வரம்புக்குள் வாழாதோர் மாற்றார் பொருளைக்***
***களவாட நாடுவார் சாற்று.***

*குறள் 287:*

***களவென்னுங் காரறி வாண்மை அளவென்னும்***
***ஆற்றல் புரிந்தார்க ணில்.***

***அளவறிந்து வாழ்வோ ரிடத்தில்  பொருளைக்***
***களவாடும் வஞ்சமிருக் காது.***

*குறள் 288:*

***அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்***
***களவறிந்தார் நெஞ்சில் கரவு.***

***களவுமனம் வஞ்சகத்தை நாடுமிங்கே! நேர்மை***
***உளமோ அறவழிக்கே தூது.***

*குறள் 289:*

***அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல***
***மற்றைய தேற்றா தவர்.***

***அளவைத் தவிர்ப்போர் வரம்பு கடப்பார்!***
***அழியும் அவர்வாழ்க்கை இங்கு.***

*குறள் 290:*

***கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை கள்ளார்க்குத்***
***தள்ளாது புத்தே ளுலகு.***

***களவாடி வாழ்வோரைத் தன்னுயிரே தூற்றும்!***
***தவிர்த்தால் புகழுலகம் உண்டு.***

---

### *30 வாய்மை*

*குறள் 291:*

***வாய்மை எனப்படுவ தியாதெனின் யாதொன்றந்***
***தீமை யிலாத சொலல்.***

***யாருக்கும் தீமை பயக்காமல் சொல்வதே***
***வாய்மை எனப்படும்! கூறு.***

*குறள் 292:*

***பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த***
***நன்மை பயக்கு மெனின்.***

***பொய்சொன்னால் குற்றமற்ற நன்மை கிடைக்குமென்றால்***
***பொய்கூட வாய்மைதான் சொல்.***

*குறள் 293:*

***தன்நெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்***
***தன்நெஞ்சே தன்னைச் சுடும்.***

***நெஞ்சறிய பொய்பேசி வாழவேண்டாம்! பேசினால்***
***நெஞ்சே பொசுக்கும் உணர்.***

*குறள் 294:*

***உள்ளத்தாற் பொய்யா தொழுகின் உலகத்தார்***
***உள்ளத்து ளெல்லாம் உளன்.***

***உள்ளம் அறிந்திடப் பொய்சொல்லாப் பண்பாளர்***
***இவ்வுலகம் மெச்சவாழ் வார்.***

*குறள் 295:*

***மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு***
***தானஞ்செய் வாரின் தலை.***

***மனமறிய வாய்மை கடைப்பிடிப்போர் தானம்***
***தவஞ்செய் தலினும் மேல்.***

*குறள் 296:*

***பொய்யாமை யன்ன புகழில்லை எய்யாமை***
***எல்லா அறமுந் தரும்.***

***பொய்சொல்லாப் பண்பு புகழ்மிக்க வாழ்வாம்!***
***அவ்வாழ்வே நல்லறம் இங்கு.***

*குறள் 297:*

***பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற***
***செய்யாமை செய்யாமை நன்று.***

***பொய்களைப் பேசாமல் வாழ்வோன், அறங்களைச்***
***செய்யாமல் விட்டாலும் நன்று.***

*குறள் 298:*

***புறந்தூய்மை நீரா னமையும் அகந்தூய்மை***
***வாய்மையால் காணப் படும்.***

***புறத்தூய்மை தண்ணீரால்! உள்ளமோ வாய்மை***
***கடைப்பிடித்தால் தூய்மை பெறும்.***

*குறள் 299:*

***எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்***
***பொய்யா விளக்கே விளக்கு.***

***அல்லிருளைப் போக்கும் விளக்கு விளக்கல்ல!***
***பொய்யாமை சான்றோர் விளக்கு.***

*குறள் 300:*

***யாமெய்யாக் கண்டவற்று ளில்லை எனைத்தொன்றும்***
***வாய்மையின் நல்ல பிற.***

***நாமறிந்த பண்புகளில் வாய்மைபோல் வாழ்க்கையில்***
***பாமணக்கும் பண்பில்லை சாற்று.***

---

*31 வெகுளாமை*

*குறள் 301:*

***செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்***
***காக்கினென் காவாக்கா லென்.***

***செல்லு மிடத்தில் சினம்காத்தல் நல்லது!***
***செல்லா இடத்திலே காத்தாலும் காக்காமல்***
***துள்ளினாலும் ஒன்றே உணர்.***

*குறள் 302:*

***செல்லா இடத்துச் சினந்தீது செல்லிடத்தும்***
***இல்லதனின் தீய பிற.***

***நம்கோபம் செல்லா இடத்திலே தீதுதான்! செல்லுமிடந்***
***தன்னிலே காட்டினாலும் தீது.***

*குறள் 303:*

*மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய*
*பிறத்தல் அதனான் வரும்.*

*மறக்கவேண்டும் கோபத்தை யாரெனினும்! இல்லை*
*அதனால் பெருகிவரும் கேடு.*

*குறள் 304:*

*நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்*
*பகையும் உளவோ பிற.*

*முகமலர்ச்சி  மற்றும் அகமகிழ்ச்சி இங்கே*
*மறையும் சினங்கொள் பவர்க்கு.*

*குறள் 305:*

*தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லுஞ் சினம்.*

*தன்னையே காக்க சினங்கொள்ளக் கூடாது!*
*கொண்டால் தனக்கே அழிவு.*

*குறள் 306:*

*சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்*
*ஏமப் புணையைச் சுடும்.*

*சினங்கொண்ட மாந்தரைக் கோபம் அழிக்கும்!*
*இனச்சுற்றம் சேர்ந்தழியும் சாற்று.*

*குறள் 307:*

*சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு*
*நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.*

*நிலத்தை அறைந்தவனின் கைவலிக்கும்! அந்த*
*நிலையே சினங்கொண் டவர்க்கு.*

*குறள் 308:*

***இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்***
***புணரின் வெகுளாமை நன்று.***

***அனல்போல தீமைகள் செய்தாலும்***
***நாமோ***
***சினங்கொள்ளாப் பண்பே அழகு.***

*குறள் 309:*

***உள்ளிய தெல்லாம் உடனெய்தும் உள்ளத்தால்***
***உள்ளான் வெகுளி யெனின்.***

***உள்ளத்தில் கோபமே கொள்ளாதோன் எண்ணிய***
***தெல்லாம் பெறுவான் உணர்.***

*குறள் 310:*

***இறந்தார் இறந்தா ரனையர் சினத்தைத்***
***துறந்தார் துறந்தார் துணை.***

***இறந்தார்க்கே ஒப்பாம் சினமுடையோர்! நாளும்***
***துறவிகள் கோபமற்றோர் தான்.***

---

## *32 இன்னா செய்யாமை*

*குறள் 311:*

***சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா***
***செய்யாமை மாசற்றார் கோள்.***

***சிறப்பான செல்வங்கள் வந்தாலும்***
***பிறரை***
***அகம்நோகத் துன்பங்கள் செய்யாமல் வாழ்வோர்***
***அகத்திலே மாசற்றோர் தான்.***

*குறள் 312:*

***கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.***

***கடுங்கோபம் கொண்டே வதைப்போரைக் கூட
பொறுத்திருப்பார் மாசற்றோர் இங்கு.***

*குறள் 313:*

***செய்யாமற் செற்றார்க்கும் இன்னாத செய்தபின்
உய்யா விழுமந் தரும்.***

***சும்மா இருப்போரைத் துன்புறுத்து வோருக்கோ
துன்பத்தைத்  தந்தால்  துயர்.***

*குறள் 314:*

***இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.***

***துன்பத்தைச் செய்தாலும் செய்தவர் நாணுமாறு
நன்மையைச் செய்தலே நன்று.***

*குறள் 315:*

***அறிவினான் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.***

***துடிக்கவேண்டும் மற்றவர் துன்பத்தை எண்ணி!
துடிப்பற்றோர் மாந்தரல்ல சொல்.***

*குறள் 316:*

***இன்னா எனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.***

***துன்பமென்றுத் தானெண்ணும் துன்பத்தை மற்றவர்க்கோ
என்றும் தவிர்த்தலே பண்பு.***

***குறள் 317:***

***எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தானாம்***
***மாணாசெய் யாமை தலை.***

***எவரெனினும் உள்ளத்தால் எள்ளளவும் தீமை***
***தவறியும் செய்யாமை நன்று.***

***குறள் 318:***

***தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ***
***மன்னுயிர்க் கின்னா செயல்.***

***துன்பம் நமக்குவந்தால்  வாடுகிறோம்! மற்றவர்க்குத்***
***துன்பத்தை நாம்செய்வ  தேன்?***

***குறள் 319:***

***பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா***
***பிற்பகல் தாமே வரும்.***

***பிறருக் கொருமுறை துன்பத்தைச் செய்தால்***
***மறுமுறை உண்டு நமக்கு.***

***குறள் 320:***

***நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்***
***நோயின்மை வேண்டு பவர்.***

***தீயவை செய்தவர்க்கே தீயவை வந்துசேரும்!***
***தீயவை நாடாதார் மற்றவர்க்குச் செய்யாமல்***
***தூயவாழ்க்கை வாழ்தல் சிறப்பு.***

---

## *33 கொல்லாமை*

*குறள் 321:*

***அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்.***

***அறச்செயல் என்றால் கொலைதவிர்த்தல்! செய்தால்
உறுத்தும் தீவினைகள் சூழ்ந்து.***

*குறள் 322:*

***பகுத்துணடு பல்லுயி ரோம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.***

***பகிர்ந்துண்டும் வாழ்வே சிறப்பாகும்.! அந்தப்
பகிர்ந்துண்ணும் பண்பே உயர்வு.***

*குறள் 323:*

***ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.***

***பண்பில் சிறந்தது கொல்லாமை! பின்னரே
நன்றென்பார் பொய்யாமை பண்பு.***

*குறள் 324:*

***நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழும் நெறி.***

***இவ்வுலகில் எந்த உயிரையும் கொல்லாமை
நல்லற மாகும் உணர்.***

*குறள் 325:*

***நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.***

***தலைச்சுமை வாழ்வென அஞ்சித் துறவில்
நுழைவோரைக் காட்டிலும் தீமையென அஞ்சிக்
கொலைசெய்யா தோரே உயர்வு.***

*குறள் 326:*

***கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாள்மேல்
செல்லா துயிருண்ணுங் கூற்று.***

***கொல்லாமைப் பண்புடைய மாந்தரைச் சாவுகூட
வெல்லத் தயங்கிநிற்கும் கூறு.***

*குறள் 327:*

***தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.***

***தன்னுயிரே போனாலும் மற்றோர் உயிரையோ
கொன்றெடுக்கும் எண்ணமோ தீது.***

*குறள் 328:*

***நன்றாகும் ஆக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகும் ஆக்கங் கடை.***

***கொன்றால்  மலைப்பயன் வந்தாலும் சான்றோர்க்கோ
அந்தநன்மை என்றும் இழிவு.***

*குறள் 329:*

***கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.***

***கொலைபுரிந்து வாழ்வோரைச் சான்றோர்கள்  என்றும்
இழிபிறவி என்றெண்ணு வார்.***

*குறள் 330:*

*உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்*
*செல்லாத்தீ வாழ்க்கை யவர்.*

*பிணியில் வறுமையில் வாடுவோரைப் பார்த்து*
*மனம்பதைக்க பாதகம் செய்திருப்பார் அன்றே*
*எனச்சொல்வார் சான்றோர் இடித்து.*

---

## *34 நிலையாமை*

*குறள் 331:*

*நில்லாத வற்றை நிலையின என்றுணரும்*
*புல்லறி வாண்மை கடை.*

*எல்லாம் நிலைத்தவை என்றே நினைக்கின்ற*
*பொல்லா அறியாமை கேடு.*

*குறள் 332:*

*கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்*
*போக்கும் அருவிளிந் தற்று.*

*கூட்டம் திரள்வதுபோல் செல்வங்கள் சேர்கிறது!*
*கூட்டம் கலைவதுபோல் சேர்ந்த வளமனைத்தும்*
*காற்றாய் மறைந்துவிடும் காண்.*

*குறள் 333:*

*அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்*
*அற்குப ஆங்கே செயல்.*

*சற்றும் நிலையற்ற செல்வங்கள் உள்ளபோதே*
*முற்றும் அறம்செய் நிலைத்து.*

*குறள் 334:*

***நாளென ஒன்றுபோற் காட்டி உயிரீரும்***
***வாள துணர்வார்ப் பெறின்.***

***நாளெனில் வாழ்நாள் தனைக்குறைக்க வெட்டுகின்ற***
***வாளாகும் இங்கென் றுணர்.***

*குறள் 335:*

***நாச்செற்று விக்குள்மேல் வாராமுன் நல்வினை***
***மேற்சென்று செய்யாப் படும்.***

***வாழ்விலே விக்கி உயிர்போகும் முன்னமே***
***சோர்வின்றி  நல்லறம் செய்.***

*குறள் 336:*

***நெருந லுளனொருவன் இன்றில்லை என்னும்***
***பெருமை யுடைத்திவ் வுலகு.***

***பெருமையுடன் நேற்றுவாழ்ந்தோர் இன்றில்லை என்ற***
***நிலையாமை கொண்டதிவ் வாழ்வு.***

*குறள் 337:*

***ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப***
***கோடியு மல்ல பல.***

***கரையும் குமிழிதான் வாழ்வென் றுணரார்***
***அலைகின்றார் கோடியாசை கொண்டு.***

*குறள் 338:*

***குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே***
***உடம்போ டுயிரிடை நட்பு.***

***உடலுடன் நம்முயிர் நட்பினமோ முட்டை***
***கிடக்கப் பறக்கும்புள் போல்.***

*குறள் 339:*

***உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி***
***விழிப்பது போலும் பிறப்பு.***

***உறங்குவது போன்றதே சாவு! உறக்கம்***
***கடந்து விழித்தல் பிறப்பு.***

*குறள் 340:*

***புக்கி லமைந்தின்று கொல்லோ உடம்பினுள்***
***துச்சி லிருந்த உயிர்க்கு.***

***உடம்புடன் வாழ்ந்த உயிருக்கு***
***வேறோர்***
***இடமில்லை யோஇங்கு? சொல்.***

---

## *35 துறவு*

*குறள் 341:*

***யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்***
***அதனின் அதனின் அலன்.***

***ஆசையை எப்பொருளின் மீதுநாம் நீக்கினோமோ***
***கேடில்லை அப்பொருளால் தான்.***

*குறள் 342:*

***வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபின்***
***ஈண்டியற் பால பல.***

***தூண்டிலிடும் பற்றைத் துறந்துவிட்டால் நன்மைகள்***
***ஊன்றி வளரும் உணர்.***

*குறள் 343:*

***அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்***
***வேண்டிய வெல்லாம் ஒருங்கு.***

***அடக்கவேண்டும் அய்ம்புலனை! ஆசை வெறியை!***
***துறவின் ஒழுக்கம் இது.***

*குறள் 344:*

***இயல்பாகும் நோன்பிற்கொன் றின்மை உடைமை***
***மயலாகும் மற்றும் பெயர்த்து.***

***துறவெனில் பற்றற்று வாழ்தலே! ஆசை***
***தொடர்ந்தால் சலனமே வாழ்வு.***

*குறள் 345:*

***மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்கல்***
***உற்றார்க் குடம்பும் மிகை.***

***பற்றைத் துறந்தோர்க்(கு) உடம்பே மிகையாகும்!***
***மற்ற தொடர்பேனோ சொல்?***

*குறள் 346:*

***யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்***
***குயர்ந்த உலகம் புகும்.***

***யானென்றும் மற்றும் எனதென்றும் எண்ணாதோன்***
***ஞானமுடன் வாழ்வான் உயர்ந்து.***

*குறள் 347:*

***பற்றி விடாஅ இடும்பைகள் பற்றினைப்***
***பற்றி விடாஅ தவர்க்கு.***

***பற்றுகளைப் பற்றி விடாதோரைத் துன்பங்கள்***
***பற்றித் தொடரும் தொடர்ந்து.***

*குறள் 348:*

***தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி***
***வலைப்பட்டார் மற்றை யவர்.***

***அனைத்தும் துறந்தோர் துறவி!***
***சலனச்***
***சுனையே அறியாமை ஊற்று.***

*குறள் 349:*

***பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கும் மற்று***
***நிலையாமை காணப் படும்.***

***பற்றைத் துறந்துவிடு இன்பதுன்பம் தீண்டாது!***
***மற்றபடி என்றால் பிறவியை ஆட்டுவிக்கும்!***
***பற்றே பிறவித் துயர்.***

*குறள் 350:*

***பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்***
***பற்றுக பற்று விடற்கு.***

***பற்றுகளை விட்டவரைப் பற்றும் முடிவெடுத்தால்***
***பற்றுகளை நீக்கலாம் நாம்.***

---

## *36 மெய்யுணர்தல்*

*குறள் 351:*

***பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்***
***மருளானாம் மாணாப் பிறப்பு.***

***பொய்ப்பொருளை மெய்ப்பொருளாய் எண்ணும் அறியாமை***
***என்றும் துயரைத் தரும்.***

*குறள் 352:*

***இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.***

***உருமயக்கம் நீங்கியே மெய்த்தோற்றம் கண்டால்
உருவாகும் வாழ்வில் தெளிவு.***

*குறள் 353:*

***ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.***

***ஐயந் திரிபற வாழ்பவர்க்கு வானம்
உலகினும் பக்கமாம் சாற்று..***

*குறள் 354:*

***ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.***

***மெய்யுணர்வைக் கண்டும் தெளிவடை யாதோர்க்கோ
அய்ம்புலன் அடக்கினாலும் வீண்.***

*குறள் 355:*

***எப்பொரு ளெத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.***

***எப்பொருள் தோற்றமும் ஏமாற்றும்!
மெய்ப்பொருள்
முற்றும் உணர்தலே நன்று.***

*குறள் 356:*

***கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்***
***மற்றீண்டு வாரா நெறி.***

***கற்றறிந்து மெய்ப்பொருள் ஏற்ற துறவியர்***
***சற்றும் விரும்பமாட்டார் இல்லறத்தை மீண்டுமிங்கே!***
***இத்தகைய பண்பே துறவு.***

*குறள் 357:*

***ஓர்த்துள்ளம் உள்ள துணரின் ஒருதலையாப்***
***பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.***

***ஆய்ந்தறிந்து மெய்ப்பொருளில் தோய்ந்தவர்கள் மீண்டுமிங்கே***
***ஆய்வதில்லை இப்பிறப்பை இங்கு.***

*குறள் 358:*

***பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்***
***செம்பொருள் காண்ப தறிவு.***

***பிறவியின் மெய்ப்பொருளைக் கண்டறிந்தே இந்தப்***
***பிறவி அறியாமை நீக்கு.***

*குறள் 359:*

***சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்***
***சார்தரா சார்தரு நோய்.***

***ஆர்த்தெழும் துன்பம் விலகிட துன்பத்தின்***
***காரணமான பற்றை விலக்கு.***

*குறள் 360:*

***காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்***
***நாமங் கெடக்கெடு நோய்.***

***ஆசை, வெறுப்பு, அறியாமை இல்லாத***
***வாழ்வை நெருங்காது கேடு***

---

## *37 அவா அறுத்தல்*

*குறள் 361:*

***அவாவென்ப எல்லா உயிர்க்குமெஞ் ஞான்றுந்***
***தவாஅப் பிறப்பீனும் வித்து.***

***புவிவாழ்வில் துன்பம் வளர்வதற் கெல்லாம்***
***தவிக்கவைக்கும் ஆசையே வித்து.***

*குறள் 362:*

***வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது***
***வேண்டாமை வேண்ட வரும்.***

***துன்பம், பிறவிவேண்டாம் என்றேதான் சொல்லவைக்கும்!***
***துன்பமோ ஆசையால் தான்.***

*குறள் 363:*

***வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை***
***யாண்டும் அஃதொப்ப தில்.***

***ஆசைப் படாத நிலைக்கொத்த செல்வமில்லை!***
***வேறுசெல்வம் இல்லை நிகர்.***

*குறள் 364:*

***தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது***
***வாஅய்மை வேண்ட வரும்.***

***தூய்மையோ பேராசை யற்ற நிலையாகும்!***
***வாய்மையத் தூய்மை தரும்.***

*குறள் 365:*

***அற்றவ ரென்பார் அவாவற்றார் மற்றையார்***
***அற்றாக அற்ற திலர்.***

***பற்றில்லார் ஆசையே அற்றவர்! மற்றவர்***
***பற்றற்றோர் ஆகமாட் டார்.***

*குறள் 366:*

***அஞ்சுவ தோரும் அறனே ஒருவனை***
***வஞ்சிப்ப தோரும் அவா.***

***வஞ்சித்துப் பார்ப்பதே ஆசைதான்! அவ்வாசைக்(கு)***
***அஞ்சிவாழ்தல் வாழ்வின் அறம்.***

*குறள் 367:*

***அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை***
***தான்வேண்டு மாற்றான் வரும்.***

***அவாவை விலக்குகின்ற மாந்தருக்(கு) இந்தப்***
***புவியில் அறவாழ்க்கை உண்டு.***

*குறள் 368:*

***அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃ துண்டேல்***
***தவாஅது மேன்மேல் வரும்.***

***அவாவை ஒழித்தவர்க்குத் துன்பமில்லை! ஆசை***
***உலாவந்தால் என்றும் துயர்.***

*குறள் 369:*

***இன்பம் இடையறா தீண்டும் அவாவென்னுந்***
***துன்பத்துள் துன்பங் கெடின்.***

***துன்பம் எனப்படும் ஆசையே இல்லையெனில்***
***இன்ப மயமாகும் வாழ்வு.***

*குறள் 370:*

***ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே***
***பேரா இயற்கை தரும்.***

***வாழ்க்கையில் ஆசையை நீக்கிவிட்டால் நீங்காத***
***பேரின்பம் காண்ப தியல்பு.***

---

## *38 ஊழ்*

*குறள் 371:*

***ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்***
***போகூழால் தோன்று மடி.***

***ஆக்கபூர்வ ஊக்கம் பொருள்சேர்க்கும்! சோம்பலெனில்***
***ஆக்கம் அழியும் உணர்.***

*குறள் 372:*

***பேதைப் படுக்கும் இழவூழ் அறிவகற்றும்***
***ஆகலூ ழுற்றக் கடை.***

***பேரழிவுச் சூழல் அறியாமை ஆட்கொள்ளும்!***
***ஆக்கநிலை கூட்டும் அறிவு.***

*குறள் 373:*

***நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்***
***உண்மை யறிவே மிகும்.***

***என்னதான் கற்றிருந்த போதிலும் நம்முள்ளே***
***உண்மை அறிவே மிகும்.***

*குறள் 374:*

***இருவே றுலகத் தியற்கை திருவேறு***
***தெள்ளிய ராதலும் வேறு.***

***ஒருவருக்குச் செல்வம்! ஒருவர்க் கறிவு!***
***இருநிலை கொண்டதே வாழ்வு.***

*குறள் 375:*

***நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவும்***
***நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.***

***நல்லதைச் செய்தால் கெடுதியாக, தீயதைச்***
***செய்தாலோ நல்லவை யாக விளைவுகள்!***
***எல்லாம் இயற்கையே இங்கு.***

*குறள் 376:*

***பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்***
***சொரியினும் போகா தம.***

***உரியவை எப்படியும் சேரும்! உனக்கோ***
***இலையென்றால் தங்காது சாற்று.***

*குறள் 377:*

***வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி***
***தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.***

***எதுவெனினும் அப்பயனைத் துய்த்தல் இயற்கை***
***வகுக்கும் வியூகந்தான் சாற்று.***

*குறள் 378:*

***துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால***
***ஊட்டா கழியு மெனின்.***

***கடக்கவேண்டும்  துன்பத்தால் என்றே இயற்கைத்***
***தடைவிதித்த காரணத்தால் இங்கே வறியோர்***
***துறவியாக வில்லை உணர்.***

*குறள் 379:*

***நன்றாங்கால் நல்லவாக் காண்பவர் அன்றாங்கால்***
***அல்லற் படுவ தெவன்.***

***நல்லதைக் கண்டு மகிழ்பவர்கள் துன்பத்தில்***
***அல்லல் படுவதேன் சொல்?***

*குறள் 380:*

***ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று***
***சூழினுந் தான்முந் துறும்.***

***வாழ்வில் இயற்கையின் ஆற்றலே வெல்கிறது!***
***தோல்விதான் மற்றவைக்(கு) இங்கு.***

# குறள்களுக்கு குறள்வடிவில் விளக்கம்

## பொருட்பால்




**மதுரை பாபாராஜ்**

*வாழ்த்துகள்*

*அருமை அய்யா! அழகு தமிழில்*
*எளிய கவிதையாய் அணுவைத் துளைத்து*
*எழுகடலை புகுத்திய அய்யன் வள்ளுவனை*
*வாழ்த்திய ஔவையாய் நாளும் பொருள்கூறும்*
*கவிஞர் பாபாவை வாழ்த்துவோம் வணங்கி!*

*இமயவரம்பன்*

---

*அருளுடையீர் வணக்கம்*

*தொடர்ந்து கடுமையான*
*உழைப்பை மேற்கொண்டு*
*வருகிறீர்கள்*

*வாழ்த்துகள்*
*- கு. மோகனராசு*

---

*வரும் தமிழ்ப் புத்தாண்டு நாளில்*
*திரு பாபாராஜ் அவர்கள்*
*திருக்குறள் 133 அதிகாரத்தையும்*
*நிறைவு செய்வார்கள் என்று எதிர்பார்க்கலாம்.*

*அது நூலாக வெளிவந்து "*
*திருக்குறள் நூல்*
*குறள்வெண்பாவாலேயே உரை பெற்றது"*
*என்று தமிழ் உலகில் பெயரும் பெறும்.*

*திருக்குறள் உரை வரலாற்றில் இது ஒரு மைல்கல் ஆகும்.*

*இராமசாமி*
*பெரியகுளம்*

---

***நண்பர் நற்றமிழர் இராமநுசன் கருத்து***

***குறள்பால் அன்புகொண்டு, அம்பெய்தி பொருட்பால் வரை கவிச்சுவைக் கனிகளைக் கொய்து வழங்கிய, தங்களின் காளமேகக் கவிதைகள் பல்லாண்டு வாழ்க!***

***குறளில் நுழைந்து, பிசைந்து, முறுக்கு மிக்க கவிதைகளை தாங்கள் வழங்கிய வேகத்திற்கு உண்மையில் என்னால் படித்து முழுமை பெற முடியவில்லை. ஏனெனில் சில பாக்களை ஒருமுறைக்கு இருமுறை படித்து மகிழ வேண்டும் எனக் கருதிக் கொண்டிருக்கையில் அடுத்த அதிகாரம் வேகமாக வந்து குழுவில் காத்து நிற்கும்.***

***இருப்பதை விடுத்து, புதியதை மடுத்து, மனதைத் தொடுத்து ஆண்டு கொள்ள முற்பட்டு விடுவேன். மகிழ்ச்சி!***

***ஆனால் காமத்துப் பாலில் இத்தகைய வேகத்தைக் காட்டுவது ஆகாது. அனுப்புங்கள் பாமணிகளை! அமைதியாகப் படித்து, தமிழென்னும் அமிழ்தத்துள் தங்களின் சொல்லாடல்களை மகிழ்ந்து சுவைத்தப் பின்பே , அடுத்த பாவினைப் பார்க்கச் செல்லுவேன்.***

***ஆக, அதற்காகத் தங்களின் வீச்சுதனைக் குறைத்துக் கொள்ள வேண்டாம். நீங்கள் முன்னால் சென்றால், நாம் சற்றே பின்னால் வருவோம். அம்மட்டுதான் ஐயா!***

***அழகானப் பாடல்கள் பிறக்கட்டும்! வருங்கால உள்ளத்தைக் கவரட்டும்! மகிழ்ச்சி!***

***வாழ்த்துகளும் வணக்கமும்!***

***நற்றமிழ் இராமானுசன்***

## *39 இறைமாட்சி*

*குறள் 381:*

***படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்***
***உடையான் அரசரு ளேறு.***

***படையுடன், குடிமக்கள், செல்வம், அமைச்சர்,***
***நிறைவான நட்பு, அரணென ஆறும்***
***உடையதே வல்லரசில் ஏறு.***

*குறள் 382:*

***அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்***
***எஞ்சாமை வேந்தற் கியல்பு.***

***துணிவு, இரக்கம், அறிவுடைமை, ஊக்கம்***
***எனநான்கும் வேந்தன் இயல்பு.***

*குறள் 383:*

***தூங்காமை கல்வி துணிவுடைமை அம்மூன்றும்***
***நீங்கா நிலனாள் பவற்கு.***

***சோம்பலின்மை, கல்வி, துணிவு இவைமூன்றும்***
***நாடாள்வோர் போற்றுகின்ற பண்பு.***

*குறள் 384:*

***அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா***
***மான முடைய தரசு.***

***அறநெறியைப் போற்றி, கொடுமை தவிர்த்து,***
***மறத்தில் தவறாமல் மானத்தைக் காக்கும்***
***நிறைவினைக் கொண்ட தரசு.***

*குறள் 385:*

***இயற்றலும் ஈட்டலுங் காத்தலுங் காத்த***
***வகுத்தலும் வல்ல தரசு.***

***பொருளீட்டிக் காத்தும், வகுத்தும் முறையாய்ச்***
***செலவழிக்க வல்ல தரசு.***

*குறள் 386:*

***காட்சி கெளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்***
***மீக்கூறும் மன்னன் நிலம்.***

***தோற்றம் எளிமை! கடுஞ்சொல்லே பேசமாட்டான்!***
***போற்றுவார் நல்லாட்சி என்று.***

*குறள் 387:*

***இன்சொலால் ஈத்தளிக்க வல்லாற்குத் தன்சொலால்***
***தான்கண் டனைத்திவ் வுலகு.***

***இன்சொல்லே பேசுவார்! ஏழைக்குத் தந்திடுவார்!***
***பண்புடையோர் மாட்டே உலகு.***

*குறள் 388:*

***முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்***
***கிறையென்று வைக்கப் படும்.***

***நெறிமுறை போற்றியே மக்களைக் காப்போன்***
***சிறந்த அரசனாவான் செப்பு.***

*குறள் 389:*

***செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்***
***கவிகைக்கீழ்த் தங்கு முலகு.***

***பெரியோர் அறிவுரை கேட்டு நடக்கும்***
***அரசின்***
***நிழலில் தழைக்கும் உலகு.***

*குறள் 390:*

***கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்***
***உடையானாம் வேந்தர்க் கொளி.***

***கொடையும், கருணையும், செங்கோல் முறையில்***
***குடிகாத்தல் வேந்தர்க் கழகு.***

## *40 கல்வி*

*குறள் 391:*

***கற்க கசடறக் கற்பவை கற்றபின்***
***நிற்க அதற்குத் தக.***

***கற்பதை  ஐயமின்றிக் கற்கவேண்டும்!***
***கற்றபின்***
***கற்றதை வாழ்க்கையில் போற்று.***

*குறள் 392:*

***எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டுங்***
***கண்ணென்ப வாழும் உயிர்க்கு.***

***எண்ணும் எழுத்தும் படிப்பறிவின் கண்களாம்!***
***மண்ணுலக வாழ்வின் உயிர்.***

*குறள் 394:*

***உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்***
***அனைத்தே புலவர் தொழில்.***

***மனம்மகிழ  பேசி, பிரிவில் கலங்கி***
***மனம்வாடல் சான்றோரின் பண்பு.***

*குறள் 395:*

***உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்***
***கடையரே கல்லா தவர்.***

***செல்வந்தர் முன்னே வறியவர்போல் கற்றவர்முன்***
***கல்லாதார் கற்கவேண்டும்! கற்கச் சுணங்கினால்***
***கல்லார் கடையர்தான் காண்.***

*குறள் 396:*

***தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்***
***கற்றனைத் தூறும் அறிவு.***

***தொட்டேதான் தோண்டும் அளவுக்கு நீரூறும்!***
***கற்கும் அளவே அறிவு.***

*குறள் 397:*

***யாதானும் டாடாமால் ஊராமால் என்னொருவன்***
***சாந்துணையுங் கல்லாத வாறு.***

***பாரெல்லாம் வாழ்ந்திடலாம் என்றறிந்தும், சாகுமட்டும்***
***ஆர்வமின்றி கற்பதில்லை! ஏன்?***

*குறள் 398:*

***ஒருமைக்கண் தான்னற்ற கல்வி ஒருவற்***
***கெழுமையும் ஏமாப் புடைத்து.***

***ஒருபிறப்பில் கற்றால் தலைமுறை ஏழும்***
***அருமையாய் வாழும் நிமிர்ந்து.***

*குறள் 399:*

***தாமின் புறுவ துலகின் புறக்கண்டு***
***காமுறுவர் கற்றறிந் தார்.***

***தாம்கற்ற கல்வி உலகை  மகிழ்விக்கும்***
***பாங்கறிந்து கற்பார் தொடர்ந்து.***

*குறள் 400:*

***கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு***
***மாடல்ல மற்றை யவை.***

***ஈடில்லா செல்வமே கல்வி! இதற்கிணை***
***வேறுசெல்வம் எங்குமில்லை சொல்.***

---

## *41 கல்லாமை*

*குறள் 401:*

***அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய***
***நூலின்றிக் கோட்டி கொளல்.***

***அரங்கின்றி சூதாடல் போல அறிஞர்***
***அரங்கிலே கல்லாதார்  பேச்சு.***

*குறள் 402:*

***கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டும்***
***இல்லாதாள் பெண்காமுற் றற்று.***

***கல்லாதார் கற்றவர்முன் சொல்தலோ பக்குவம்***
***இல்லா பருவத்துப் பெண்மீது மையலைக்***
***கொள்வது போலாம் உணர்.***

*குறள் 403:*

***கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்***
***சொல்லா திருக்கப் பெறின்.***

***கல்லாதார் நல்லவரே கற்றவர் கூட்டத்தில்***
***தள்ளிநின்று பேசாதார் இங்கு.***

*குறள் 404:*

*கல்லாதான் ஒட்பங் கழியநன் றாயினுங்*
*கொள்ளார் அறிவுடை யார்.*

*கல்லாதார் கற்றவர்முன் பேசினால் கற்றவர்*
*கல்லாரை ஏற்கமாட்டார் கூறு.*

*குறள் 405:*

*கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து*
*சொல்லாடச் சோர்வு படும்.*

*கற்காமல் கற்றவர்முன் பேசினால் மெய்த்தன்மை*
*சட்டென்று காட்டிவிடும் சாற்று.*

*குறள் 406:*

*உளரென்னும் மாத்திரைய ரல்லால் பயவாக்*
*களரனையர் கல்லா தவர்.*

*இருப்பதுபோல் தோற்றமுள்ளோர் கல்லாத மாந்தர்!*
*களர்நிலத்திற் கொப்பாவார் சாற்று.*

*குறள் 407:*

*நுண்மாண் நுழைபுல மில்லான் எழினலம்*
*மண்மாண் புனைபாவை யற்று.*

*ஒன்றுமே கற்காமல் தோற்றப் பொலிவுள்ளோர்*
*மண்பொம்மைக் கொப்பாவார் காண்.*

*குறள் 408:*

***நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே***
***கல்லார்கண் பட்ட திரு.***

***நல்லவரை வாட்டும் வறுமையினும் கல்லாதார்***
***செல்வம் மிகவும் கொடிது.***

*குறள் 409:*

***மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்***
***கற்றா ரனைத்திலர் பாடு.***

***மேலோரா? கீழோரா? கல்விப் பெருமை***
***யால்வரும் நற்புகழால் தான்.***

*குறள் 410:*

***விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்***
***கற்றாரோ டேனை யவர்.***

***உலகிலே கற்றவர் கல்லாதார்க் குள்ள***
***நிலைகளின் வேறுபாடே மாந்தருக்கும், காட்டு***
***விலங்கிற்கும் உள்ளதென்று செப்பு.***

---

## *42 கேள்வி*

*குறள் 411:*

***செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வஞ்***
***செல்வத்து ளெல்லாந் தலை.***

***நல்ல கருத்துகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளும்***
***செல்வத்திற் கீடில்லை வேறு.***

*குறள் 412:*

***செவிக்குண வில்லாத போழ்து சிறிது***
***வயிற்றுக்கும் ஈயப் படும்.***

***செவிகளுக்(கு)இன்சொல் உணவில்லை என்றால்***
***வயிற்றுக் குணவளிப்போம் கூறு.***

*குறள் 413:*

***செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்***
***ஆன்றாரோ டொப்பர் நிலத்து.***

***செவியுணவாம் கேள்விஞானம் கொண்டவர்கள் வேள்வித்***
***தெளிவுள்ள ஆன்றோர்க் கிணை.***

*குறள் 414:*

***கற்றில னாயினுங் கேட்க அஃதொருவற்***
***கொற்கத்தின் ஊற்றாந் துணை.***

***கல்லாதோர் கற்றவரைக்கேட்டுத் தெரிதல் நடைதளர்ந்து***
***தள்ளாடும் மாந்தருக்குக் கொம்பு.***

*குறள் 415:*

***இழுக்க லுடையுழி ஊற்றுக்கோ லற்றே***
***ஒழுக்க முடையார்வாய்ச் சொல்.***

***வழுக்கும் தரையிலே ஊன்றுகோல் போல***
***ஒழுக்கநெறி வாழ்வோரின் சொல்.***

*குறள் 416:*

***எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்***
***ஆன்ற பெருமை தரும்.***

***மனமொன்றி நல்லவை கேட்டால் பெருமை***
***உனக்குத்தான் வந்துசேரும் இங்கு.***

***குறள் 417:***

***பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்***
***தீண்டிய கேள்வி யவர்.***

***நிறைவான கேள்விஞானம் உள்ளோர் மறந்தும்***
***அறிவற்றுப் பேசமாட்டார் இங்கு.***

***குறள் 418:***

***கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்***
***தோட்கப் படாத செவி.***

***கேள்விஞானம் இல்லாத மாந்தர் செவிகளோ***
***கேளாச் செவியென்றே கூறு.***

***குறள் 419:***

***நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய***
***வாயின ராத லரிது.***

***நுண்ணிய கேள்விஞானம் இல்லாதோர் என்றுமே***
***தன்னடக்கம் கொள்தல் அரிது.***

***குறள் 420:***

***செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்***
***அவியினும் வாழினு மென்.***

***கேள்விச் சுவையொதுக்கி  வாய்ச்சுவை பின்னலைவோர்***
***வாழ்ந்தாலும் செத்தாலும் ஒன்று.***

---

## *43 அறிவுடைமை*

*குறள் 421:*

***அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண்.***

***அறிவே பகைவரைத் தாக்கும் கருவி!
பகையழிக்க வொண்ணா அரண்.***

*குறள் 422:*

***சென்ற இடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.***

***கண்டபடி வாழாமல் நல்வழியைக் காட்டுகின்ற
பண்பின் விளக்கே அறிவு.***

*குறள் 423:*

***எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.***

***எப்பொருளை யார்சொன்ன போதிலும்
மெய்ப்பொருளை
உற்றுநோக்கும் ஆற்ற லறிவு.***

*குறள் 424:*

***எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.***

***சொல்வதை மற்றவர்கள் ஏற்குமாறு சொல்வதும்
சொல்பவரின் சொற்களை ஆய்ந்து தெளிகின்ற
வல்லமையும் கொண்ட தறிவு.***

*குறள் 425:*

***உலகந் தழீஇய தொட்டம் மலர்தலுங்***
***கூம்பலு மில்ல தறிவு.***

***உயர்ந்தோரை நட்பாக்கி இன்பதுன்பம் என்ற***
***இரண்டு நிலையைச் சமமாகப் பார்க்கும்***
***தரமான பண்பே அறிவு.***

*குறள் 426:*

***எவ்வ துறைவ துலக முலகத்தோ***
***டவ்வ துறைவ தறிவு.***

***இவ்வுலகில் சான்றோர்கள் எவ்வழி வாழ்கின்றார்***
***அவ்வழி வாழ்தல் அறிவு.***

*குறள் 427:*

***அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்***
***அஃதறி கல்லா தவர்.***

***அறிவுடையார் பின்விளைவைச் சிந்திப்பார்! நாளும்***
***அறிவிலார் சிந்திப்ப தில்.***

*குறள் 428:*

***அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவ***
***தஞ்சல் அறிவார் தொழில்.***

***அஞ்சுவதற்கு அஞ்சாமல் வாழ்தல் அறியாமை!***
***அஞ்சுதல் சான்றோர் செயல்.***

*குறள் 429:*

***எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை***
***அதிர வருவதோர் நோய்.***

***வருமுன்னே காக்கும் அறிவிருந்தால் துன்பம்***
***துரும்பாகும் சந்திப்பார் சாற்று.***

*குறள் 430:*

*அறிவுடையார் எல்லா முடையார் அறிவிலார்*
*என்னுடைய ரேனு மிலர்.*

*அறிவிருந்தால் எல்லாம் இருப்பவராம்! மாந்தர்க்( கு)*
*அறிவில்லை என்றாலோ என்ன இருந்தும்*
*எதுவுமற்றோர் ஆவார் உணர்.*

---

### *44. குற்றங்கடிதல்*

*குறள் 431:*

*செருக்குஞ் சினமுஞ் சிறுமையும் இல்லார்*
*பெருக்கம் பெருமித நீர்த்து.*

*இறுமாப்பு கோபம் இழிசெயல் அற்றோர்*
*பெறுகின்ற செல்வம் உயர்வு.*

*குறள் 432:*

*இவறலும் மாண்பிறந்த மானமும் மாணா*
*உவகையும் ஏதம் இறைக்கு.*

*பேராசை  தேவையற்ற தன்மானம் வக்கிரம்*
*கேடாம் தலைமைக் குணர்.*

*குறள் 433:*

*தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்*
*கொள்வர் பழிநாணு வார்.*

*தினையளவு குற்றம் புரிந்தாலும் சான்றோர்*
*பனையளவாய்ப் பார்ப்பார் இடிந்து.*

*குறள் 434:*

***குற்றமே காக்க பொருளாகக் குற்றமே***
***அற்றந் தரூஉம் பகை.***

***குற்றம் பகையமையக் காரணம்! என்றென்றும்***
***குற்றம் தவிர்த்தலே பண்பு.***

*குறள் 435:*

***வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்***
***வைத்தூறு போலக் கெடும்.***

***வருமுன்னர் காக்கத் தவறுகின்ற வாழ்க்கை***
***நெருப்பின்முன் வைக்கோல்போர் போல்.***

*குறள் 436:*

***தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பின்***
***என்குற்ற மாகும் இறைக்கு.***

***தன்குற்றம் நீக்கிப் பிறர்க்குற்றம் நீக்குகின்ற***
***பண்பிற்கோ ஈடில்லை கூறு.***

*குறள் 437:*

***செயற்பால செய்யா திவறியான் செல்வம்***
***உயற்பால தன்றிக் கெடும்.***

***பயன்படாமல் சேமிக்கும் செல்வமோ எந்தப்***
***பயனுமின்றிப் பாழாகும் சாற்று.***

*குறள் 438:*

***பற்றுள்ள மென்னும் இவறன்மை எற்றுள்ளும்***
***எண்ணப் படுவதொன் றன்று.***

***பற்றுடன்  சேர்த்துவைத்த செல்வத்தை ஈயாத***
***குற்றமே  குற்றமாம் கூறு.***

*குறள் 439:*

***வியவற்க எஞ்ஞான்றுந் தன்னை நயவற்க***
***நன்றி பயவா வினை.***

***தன்னையே தானே  வியந்துகொண்டு தன்னலத்தால்***
***நன்மைசெய் யாததோ கேடு.***

*குறள் 440:*

***காதல காதல் அறியாமை உய்க்கிற்பின்***
***ஏதில ஏதிலார் நூல்.***

***தானெண்ணும் திட்டத்தை மாற்றார் அறியாமல்***
***காப்பவரைச் சூழ்ச்சியால் வெல்வதும் கூடுமோ?***
***மாற்றார் வலுவிழப்பார் கூறு.***

---

## *45 பெரியாரைத் துணைக்கோடல்*

*குறள் 441:*

***அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை***
***திறனறிந்து தேர்ந்து கொளல்.***

***அறிவார்ந்த சான்றோரின் நட்பை, திறமை***
***அறிந்தே தெரிவுசெய்தல் நன்று.***

*குறள் 442:*

***உற்றநோய் நீக்கி உறாஅமை முற்காக்கும்***
***பெற்றியார்ப் பேணிக் கொளல்.***

***தற்பொழுது துன்பத்தை நீக்கி வரும்துன்பம்***
***பற்றாமல் காப்போரை நாடு.***

*குறள் 443:*

*அரியவற்று ளெல்லாம் அரிதே பெரியாரைப்*
*பேணித் தமராக் கொளல்.*

*பெரியோரைப் போற்றியே தக்கவைத்துக் கொள்ளல்*
*பெரும்பேறாம் வாழ்வில்! உணர்.*

*குறள் 444:*

*தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்*
*வன்மையு ளெல்லாந் தலை.*

*தன்னைவிட அறிவிற் சிறந்த பெரியாரின்*
*பண்புவழி செல்தலே நன்று.*

*குறள் 445:*

*சூழ்வார்கண் ணாக ஒழுகலான் மன்னவன்*
*சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.*

*சூழ்ந்திருக்கும் சான்றோர்கள் ஆள்வோரின் கண்களாகும்!*
*ஆள்வோர் துணைக்கொள்ளல் நன்று.*

*குறள் 446:*

*தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்*
*செற்றார் செயக்கிடந்த தில்.*

*தக்கவரை ஏற்றே அவர்வழியில் சென்றிருந்தால்*
*எப்பகையும் தீண்டாது சாற்று.*

*குறள் 447:*

*இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே*
*கெடுக்குந் தகைமை யவர்.*

*இடித்துரைத்து நற்றுணை யாவோர் வழியில்*
*நடப்போர்க்குக் கேடுசெய்வார் யார்?*

*குறள் 448:*

***இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்***
***கெடுப்பா ரிலானுங் கெடும்.***

***இடித்துரைக்க அஞ்சுவோர் சூழ்ந்திருந்தால் ஆட்சி***
***முடிச்சவிழ்ந்த நெல்லிமூட்டை தான்.***

*குறள் 449:*

***முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்***
***சார்பிலார்க் கில்லை நிலை.***

***முதலில்லை என்றால் வரவில்லை! தாங்கும்***
***அகமற்றோர் சூழ்ந்திருந்தால் நன்மையே இல்லை!***
***தடைவந்தால் தக்கதுணை நன்று.***

*குறள் 450:*

***பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே***
***நல்லார் தொடர்கை விடல்.***

***நல்லார் தொடர்பைத் தவிர்த்தல், பலரது***
***தொல்லையைத் தேடலினும் கேடு.***

---

## *46 சிற்றினம் சேராமை*

*குறள் 451:*

***சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்***
***சுற்றமாச் சூழ்ந்து விடும்.***

***சிற்றினத்தைச் சேர பெரியோர்கள் அஞ்சுவார்!***
***சுற்றமென்பார் கீழ்மக்கள் சூழ்ந்து.***

*குறள் 452:*

***நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்***
***கினத்தியல்ப தாகும் அறிவு.***

***நிலத்தியல்பால் தண்ணீர்தான் மாறும்! இனத்தின்***
***இயல்பினை ஏற்கும் அறிவு.***

*குறள் 453:*

***மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்***
***இன்னா னெனப்படுஞ் சொல்.***

***மனத்தால் இயற்கை அறிவும் இனத்தால்***
***அனைவராலும் இப்படிப் பட்டவன் என்றே***
***குணத்தால் புகழ்வோரும் உண்டு.***

*குறள் 454:*

***மனத்து ளதுபோலக் காட்டி ஒருவற்***
***கினத்துள தாகும் அறிவு.***

***மனஇயல்பே மாந்தர் அறிவெனினும் வாழ்வில்***
***இனஇயல்பே உண்மை அறிவு.***

*குறள் 455:*

***மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்***
***இனந்தூய்மை தூவா வரும்.***

***மனமும் செயலுமிங்கே தூய்மையாய் ஆக***
***இனத்தூய்மை ஒன்றே தளம்.***

*குறள் 456:*

***மனந்தூயார்க் கெச்சநன் றாகும் இனந்தூயார்க்***
***கில்லைநன் றாகா வினை.***

***மனத்தூய்மை யாலே புகழ்வரும்! சார்ந்த***
***இனத்தூய்மை நற்செயலின் தூது.***

*குறள் 457:*

***மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்***
***எல்லாப் புகழூந் தரும்.***

***மனநலம் செல்வம் கொடுக்கும்! புகழை***
***இனநலம்  நாளும் தரும்.***

*குறள் 458:*

***மனநலம் நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்***
***கினநலம் ஏமாப் புடைத்து.***

***மனநலம் கொண்டவராய்  வாழ்ந்தாலும் சேர்ந்த***
***இனம்சார்ந்தே பாதுகாப்பாம் சாற்று.***

*குறள் 459:*

***மனநலத்தி னாகும் மறுமைமற் றஃதும்***
***இனநலத்தி னேமாப் புடைத்து.***

***மனநலம் நேர்மறை இன்பம் தரும்!***
***இனநலத்தால் நிற்கும் நிலைத்து.***

*குறள் 460:*

***நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தின்***
***அல்லற் படுப்பதூஉ மில்.***

***நல்லினம்போல் நற்றுணை வேறில்லை! என்றுமே***
***தொல்லையினம் போலில்லை கேடு.***

---

## *47 தெரிந்து செயல்வகை*

***குறள் 461:***

***அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்***
***ஊதியமுஞ் சூழ்ந்து செயல்.***

***செயல்படும் முன்னால் விளைவைக் கணித்துச்***
***செயலில் இறங்கவேண்டும் சாற்று.***

***குறள் 462:***

***தெரிந்த இனத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்***
***கரும்பொருள் யாதொன்று மில்.***

***தெரிவுசெய்த மாந்தருடன் சிந்தித்துச் செய்தால்***
***எளிதாய் முடியும் செயல்.***

***குறள் 463:***

***ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை***
***ஊக்கா ரறிவுடை யார்.***

***என்றோ வருமென்றே இன்றிருக்கும் கையிருப்பை***
***இங்கே இழக்கமாட்டார் நல்ல அறிவுடையார்!***
***என்றுமே ஆசை அழிவு.***

***குறள் 464:***

***தெளிவி லதனைத் தொடங்கார் இளிவென்னும்***
***ஏதப்பா டஞ்சு பவர்.***

***இழிவு  வருமென்றே அஞ்சுவோர் அந்தச்***
***செயல்களை மேற்கொள்ளார் சாற்று.***

*குறள் 465:*

***வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்***
***பாத்திப் படுப்பதோ ராறு.***

***முறையாகச் செய்யாத எச்செயலும் இங்கே***
***பகைவர்கள் காலூன்ற வாய்ப்பு.***

*குறள் 466:*

***செய்தக்க அல்ல செயக்கெடுஞ் செய்தக்க***
***செய்யாமை யானுங் கெடும்.***

***செய்வதற் கஞ்சுவதைச்   செய்தாலும் செய்வதைச்***
***செய்யாமல் விட்டாலும் கேடு.***

*குறள் 467:*

***எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்***
***எண்ணுவ மென்ப திழுக்கு.***

***எண்ணிச் செயல்பட்டால் உயர்வு! தொடங்கியபின்***
***எண்ணுதல் ஏற்படுத்தும் தாழ்வு.***

*குறள் 468:*

***ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று***
***போற்றினும் பொத்துப் படும்.***

***படைபோல் துணையிருந்த போதும் செயலை***
***முறையின்றிச் செய்தால் இழப்பு.***

*குறள் 469:*

***நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்***
***பண்பறிந் தாற்றாக் கடை.***

***நல்லதைக் கூட இயல்பறிந்து செய்யவேண்டும்!***
***இல்லையென்றால் நல்லதாலும் கேடு.***

*குறள் 470:*

***எள்ளாத எண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு***
***கொள்ளாத கொள்ளா துலகு.***

***உயர்ந்தோர் பழிக்கும் செயல்களைச் செய்தால்***
***உலகம் ஏற்காது சாற்று.***

---

## *48 வலியறிதல்*

*குறள் 471:*

***வினைவலியுந் தன்வலியும் மாற்றான் வலியும்***
***துணைவலியுந் தூக்கிச் செயல்.***

***செயல்வலிமை தன்வலிமை மாற்றான்***
***வலிமை***
***துணைவலிமை ஆய்ந்துசெயல் செய்.***

*குறள் 472:*

***ஒல்வ தறிவ தறிந்ததன் கண்தங்கிச்***
***செல்வார்க்குச் செல்லாத தில்.***

***செயல்களைச் செய்ய மனமொன்றி விட்டால்***
***செயலை முடிக்கலாம் கூறு.***

*குறள் 473:*

***உடைத்தம் வலியறியார் ஊக்கத்தின் ஊக்கி***
***இடைக்கண் முரிந்தார் பலர்.***

***வலிமை தெரியாமல் எப்படியோ செய்து***
***நலிவடைந்தோர் ஏராள முண்டு.***

*குறள் 474:*

***அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை***
***வியந்தான் விரைந்து கெடும்.***

***தன்னை வியந்துகொண்டு மற்றவரைக் கேட்காமல்***
***என்றும் செயல்பட்டால் கேடு.***

*குறள் 475:*

***பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்***
***சால மிகுத்துப் பெயின்.***

***வண்ண மயிலிறகைக் கூட அளவின்றி***
***வண்டியில் ஏற்றினால் பாரமோ தாங்காது!***
***வண்டியச்சு வீழுமே தூர்ந்து.***

*குறள் 476:*

***நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந் தூக்கின்***
***உயிர்க்கிறுதி ஆகி விடும்.***

***மரநுனிக்குச் சென்று கிளைமுறிந்து வீழ்தல்,***
***அளவுக் கதிகமாய் தன்வலிமை எண்ணிச்***
***செயலிலே தோற்றல்! ஒன்று.***

*குறள் 477:*

***ஆற்றின் அளவறிந் தீக அதுபொருள்***
***போற்றி வழங்கு நெறி.***

***வருவாய்க்கு ஏற்ப வழங்கவேண்டும்! மீறித்***
***தருதல் பொருளுக்குக் கேடு.***

*குறள் 478:*

***ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை***
***போகா றகலாக் கடை.***

***வரவுக்குள் நாளும் செலவென்றால் இங்கே***
***வரவில்லை, தீங்கில்லை சாற்று.***

*குறள் 479:*

***அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல***
***இல்லாகித் தோன்றாக் கெடும்.***

***அளவறிந்து வாழவில்லை என்றாலோ***
***வாழ்க்கை***
***வளம்சரிந்து வீழும் உணர்***

*குறள் 480:*

***உளவரை தூக்காத ஒப்புர வாண்மை***
***வளவரை வல்லைக் கெடும்.***

***அளவுக் கதிகமாய் வாரிக் கொடுத்தால்***
***வளமழிந்து போய்விடும் இங்கு.***

---

## *49 காலமறிதல்*

*குறள் 481:*

***பகல்வெல்லுங் கூகையைக் காக்கை இகல்வெல்லும்***
***வேந்தர்க்கு வேண்டும் பொழுது.***

***பகல்பொழுதில் கோட்டானைக் காகமோ வெல்லும்!***
***பகைவெல்லக் காலத்தைப் பார்.***

*குறள் 482:*

***பருவத்தோ டொட்ட ஒழுகல் திருவினைத்***
***தீராமை ஆர்க்குங் கயிறு.***

***பருவத்தில் செய்யும் செயல்கள் வளத்தை***
***நிலையாகக் கட்டும் கயிறு.***

*குறள் 483:*

***அருவினை யென்ப உளவோ கருவியாற்***
***கால மறிந்து செயின்.***

***கருவியுடன் கால மறிந்தேதான் செய்தால்***
***பெருஞ்செயலும் செய்தல் எளிது.***

*குறள் 484:*

***ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்***
***கருதி இடத்தாற் செயின்.***

***காலம் இடமறிந்து செய்வதைச் செய்துவிட்டால்***
***ஞாலம் வசப்படும் இங்கு.***

*குறள் 485:*

***காலங் கருதி இருப்பர் கலங்காது***
***ஞாலங் கருது பவர்.***

***காலம் கனியுமட்டும் காத்திருப்பார்***
***ஞாலத்தை***
***ஆள்வதற்கே எண்ணுவோர் தான்.***

*குறள் 486:*

***ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்***
***தாக்கற்குப் பேருந் தகைத்து.***

***ஊக்கமுள்ளோன் பின்வாங்கிச் செல்தல்***
***கடாவொன்று***
***தாக்கிடப் பின்செல்தல் போல்.***

*குறள் 487:*

***பொள்ளென ஆங்கே புறம்வேரார் காலம்பார்த்***
***துள்வேர்ப்பர் ஒள்ளி யவர்.***

***உள்ளத்தில் கோபம் இருந்தாலும் காலநேரம்***
***துல்லியமாய்ப் பார்த்தே அறிவுடையார் கோபத்தை***
***அள்ளித் தெளிப்பார் கனன்று.***

*குறள் 488:*

***செறுநரைக் காணிற் சுமக்க இறுவரை***
***காணிற் கிழக்காந் தலை.***

***பகைவருக்கு நேரம் வரும்வரை காத்தால்***
***பகைவரே வீழ்வார் கவிழ்ந்து.***

*குறள் 489:*

***எய்தற் கரிய தியைந்தக்கால் அந்நிலையே***
***செய்தற் கரிய செயல்.***

***செயற்கரிய செய்ய பொறுத்திருந்து காலம்***
***துலங்கியதும் செய்தல் அறிவு.***

*குறள் 490:*

***கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்***
***குத்தொக்க சீர்த்த இடத்து.***

***கொக்குபோல் காத்திருந்து வாய்ப்பு வரும்போது***
***முற்றும் பயன்படுத்தப் பார்.***

---

## *50 இடனறிதல்.*

*குறள் 491:*

***தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்றும்***
***இடங்கண்ட பின்னல் லது.***

***பகைவரை அற்பமென்றே எண்ணாமல் தாக்கும்***
***இடத்தில் செயல்பட்டே தாக்கு.***

*குறள் 492:*

***முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கும் அரண்சேர்ந்தாம்***
***ஆக்கம் பலவுந் தரும்.***

***வலிமை இருந்தும் அரணும் இருந்தால்***
***பயனுடன் வெற்றியுண்டு செப்பு.***

*குறள் 493:*

***ஆற்றாரும் ஆற்றி அடுப இடனறிந்து***
***போற்றார்கண் போற்றிச் செயின்.***

***தக்க இடத்தைத் தெரிவுசெய்து, தற்காத்தே***
***அக்கறையாய்த் தாக்கும் வலிமையற்ற வேந்தருக்கும்***
***வெற்றி கிடைக்கும் உணர்.***

*குறள் 494:*

***எண்ணியார் எண்ணம் இழப்பர் இடனறிந்து***
***துன்னியார் துன்னிச் செயின்.***

***தக்க இடமறிந்து தாக்கினால் நம்பகைவர்***
***வெற்றி பெறுதல் அரிது.***

*குறள் 495:*

*நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்*
*நீங்கின் அதனைப் பிற.*

*முதலைக்கு நீருக்குள் வெற்றி! தரையில்*
*முதலைக்குத் தோல்வி! உணர்.*

*குறள் 496:*

*கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும்*
*நாவாயும் ஓடா நிலத்து.*

*கடலுக்குள்  ஓடாது சக்கரத் தேர்தான்!*
*படகோ நிலத்திலே செல்லாது! மாந்தர்*
*இடமறிந்தால் சாதிக்க லாம்.*

*குறள் 497:*

*அஞ்சாமை யல்லால் துணைவேண்டா எஞ்சாமை*
*எண்ணி யிடத்தாற் செயின்.*

*அஞ்சாமல், செய்யும் செயலை இடனறிந்து*
*எண்ணியே செய்யவேண்டும் செப்பு.*

*குறள் 498:*

*சிறுபடையான் செல்லிடஞ் சேரின் உறுபடையான்*
*ஊக்கம் அழிந்து விடும்.*

*சின்னப் படையெனினும் தக்கஇடம் தேர்ந்தெடுத்தால்*
*அஞ்சும்  பெரும்படை பார்த்து.*

*குறள் 499:*

***சிறைநலனுஞ் சீறும் இலரெனினும் மாந்தர்***
***உறைநிலத்தோ டொட்ட லரிது.***

***அரண்வலி இல்லை! படைவலி இல்லை!***
***அவரிருக்கும் வாழ்விடத்தில் தாக்குதல் செய்தால்***
***எளிதல்ல வெற்றியென்று செப்பு.***

*குறள் 500:*

***காலாழ் களரின் நரியடுங் கண்ணஞ்சா***
***வேலாள் முகத்த களிறு.***

***வேலெறியும் வீரரைக் கொன்றயானை சேற்றிலே***
***வீழ்ந்துவிட்டால்  குள்ளநரி கொன்றுவிடும்! யானைக்கும்***
***சூழ்நிலை மாறினால் கேடு.***

---

## *51. தெரிந்து தெளிதல்*

*குறள் 501:*

***அறம்பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின்***
***திறந்தெரிந்து தேறப் படும்.***

***அறம்பொரு ளின்பத்தை நேர்வழியில்***
***ஏற்று***
***நடப்பதற்  கஞ்சாத நல்லவரைப்***
***பார்த்துக்***
***கடமைசெய்ய தேர்ந்தெடுக்க லாம்.***

*குறள் 502:*
***குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடுப்பரியும்***
***நாணுடையான் கட்டே தெளிவு.***

***நற்குடும்பம் சார்ந்தவரை குற்றத்திற் கஞ்சுகின்ற***
***வல்லவரைத் தேர்ந்தெடுத்தல் நன்று.***

*குறள் 503:*

***அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால்***
***இன்மை அரிதே வெளிறு.***

***கற்றறிந்த சான்றோரே ஆயினும் உற்றுநோக்கின்***
***சற்றே அறியாமை உண்டு.***

*குறள் 504:*

***குணநாடிக் குற்றமு நாடி அவற்றுள்***
***மிகைநாடி மிக்க கொளல்.***

***குணமென்ன குற்றமென்ன பார்த்தே***
***இரண்டில்***
***மிகைபார்த்தே தேர்ந்தெடுத்தல் நன்று.***

*குறள் 505:*

***பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்குந் தத்தங்***
***கருமமே கட்டளைக் கல்.***

***பெருமைக்கும் சிறுமைக்கும் நற்செயல் தானே***
***உரைக்கல் லாகும் உணர்.***

*குறள் 506:*

***அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர்***
***பற்றிலர் நாணார் பழி.***

***சுற்றத்தார் இல்லாரைத் தேர்வுசெய்தல் நல்லதல்ல!***
***சற்றும் அஞ்சார் பழிக்கு.***

***குறள் 507:***

***காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்***
***பேதைமை எல்லாந் தரும்.***

***திறனற்றோர் என்றறிந்தும் அன்பின் நிமித்தம்***
***எடுத்தல் அறியாமை யே.***

***குறள் 508:***

***தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை***
***தீரா இடும்பை தரும்.***

***ஆராய்ந்து தேர்ந்தெடுக்கா விட்டால் தலைமுறைக்கும்***
***தீராத துன்பங்கள் உண்டு.***

***குறள் 509:***

***தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபின்***
***தேறுக தேறும் பொருள்.***

***ஆராய்ந்து தேர்ந்தெடுத்தால் நம்பவேண்டும்! தேர்ந்தெடுத்துச்***
***சேர்த்தபின் நம்பாமை தீது.***

***குறள் 510:***

***தேரான் தெளிவுந் தெளிந்தான்கண் ஐயுறவும்***
***தீரா இடும்பை தரும்.***

***ஆராய்ந்து பாராமல் நம்புவதும், நம்பியபின்***
***வேரோடும் சந்தேகம் கேடு.***

---

## *52 தெரிந்து வினையாடல்*

***குறள் 511:***

***நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த***
***தன்மையான் ஆளப் படும்.***

***நன்மையைத் தீமையை நன்றாய் எடைபோட்டு***
***நன்மையைச் செய்வ தறிவு.***

***குறள் 512:***

***வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை***
***ஆராய்வான் செய்க வினை.***

***வரவைப் பெருக்கி வளத்தைப் பெருக்கி***
***வருகின்ற துன்பத்தை நீக்குவோரைத் தேர்ந்து***
***தரவேண்டும் ஆற்றும் செயல்.***

***குறள் 513:***

***அன்பறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும்***
***நன்குடையான் கட்டே தெளிவு.***

***அன்பும்  அறிவும் தெளிவும் ஆசையின்மை***
***இந்நான்கும் கொண்டவரை நம்பு.***

***குறள் 514:***

***எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்***
***வேறாகும் மாந்தர் பலர்.***

***நன்றாக சிந்தித்துத் தேர்ந்தெடுத்த போதிலும்***
***தன்செயல் ஆற்றலில் வேறுபட்டு நிற்பவர்கள்***
***மண்ணகத்தில் உண்டு பலர்.***

*குறள் 515:*

*அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்*
*சிறந்தானென் றேவற்பாற் றன்று.*

*செயல்புரியும் ஆற்றலுள்ள மாந்தரை நம்பு!*
*செயல்புரியத் தத்தளிக்கும் மற்றவரை நம்பிச்*
*செயலைத் தருவது தீது.*

*குறள் 516:*

*செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ*
*டெய்த உணர்ந்து செயல்.*

*செய்பவனின் தன்மை செயல்தன்மை காலத்தின்*
*எல்லை அறிந்தளித்தல் நன்று.*

*குறள் 517:*

*இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்*
*ததனை அவன்கண் விடல்.*

*இச்செயலை இங்கே இவன்முடிப்பான் என்றாய்ந்தே*
*அச்செயலை ஒப்படைத்தல் நன்று.*

*குறள் 518:*

*வினைக்குரிமை நாடிய பின்றை அவனை*
*அதற்குரிய னாகச் செயல்.*

*செயலுக் குரியவனைத்தேர்ந்தெடுத்தால் நம்பி*
*செயல்செய்ய விட்டுவிடல் நன்று.*

*குறள் 519:*

*வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக*
*நினைப்பானை நீங்குந் திரு.*

*செயல்முடிக்கும் ஆர்வத்தைத் தப்பாய்க் கருதும்*
*உளத்தோன் இழப்பான் வளம்.*

*குறள் 520:*

***நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்***
***கோடாமை கோடா துலகு.***

***உழைப்போர் மகிழ்ந்தால் உலகம் மகிழும்!***
***உழைப்போர்க்( கு)  அரணே அரசு.***

---

## *53 சுற்றந்தழால்*

*குறள் 521:*

***பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்***
***சுற்றத்தார் கண்ணே உள.***

***ஒருவருக்கு ஏழ்மை நிலைவரினும் சுற்றம்***
***பழம்பெருமை பாராட்டும் சூழ்ந்து.***

*குறள் 522:*

***விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா***
***ஆக்கம் பலவுந் தரும்.***

***நிரந்தர அன்பளிக்கும் சுற்றம் அமைந்தால்***
***பெருகும் பலவளங்கள் தான்.***

*குறள் 523:*

***அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்***
***கோடின்றி நீர்நிறைந் தற்று.***

***கரையின்றி  நீர்நிறைந்த  ஊர்க்குளம் போல***
***உறவுடன் வாழாதார் வாழ்வு.***

*குறள் 524:*

*சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்*
*பெற்றத்தாற் பெற்ற பயன்.*

*சுற்றத் துடன்வாழும் வாழ்க்கையே செல்வங்கள்*
*பெற்ற பயனாகும் செப்பு.*

*குறள் 525:*

*கொடுத்தலும் இன்சொல்லும் ஆற்றின் அடுக்கிய*
*சுற்றத்தாற் சுற்றப் படும்.*

*ஈதலும் இன்சொலும் பண்பாக உள்ளவரைச்*
*சூழவரும் சுற்றம் விழைந்து.*

*குறள் 526:*

*பெருங்கொடையான் பேணான் வெகுளி அவனின்*
*மருங்குடையார் மாநிலத் தில்.*

*கொடைப்பண்பும் கோபமும் இல்லான்போல் சுற்றம்*
*உடையோன் உலகிலில்லை சாற்று.*

*குறள் 527:*

*காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்*
*அன்னநீ ரார்க்கே உள.*

*காகம் அழைத்துண்ணும் சுற்றத்தை! அப்பண்பை*
*வாழ்வில் உடையோர்க்(கு)  உயர்வு.*

*குறள் 528:*

*பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்*
*அதுநோக்கி வாழ்வார் பலர்.*

*பொதுவாக நோக்காமல் ஆற்றலுக் கேற்ப*
*மதிக்கும் அரசனைச் சுற்றமாய்ச் சூழ்வார்!*
*மதிக்கவேண்டும் ஆற்றலைப் பார்த்து.*

*குறள் 529:*

***தமராகித் தற்றுறந்தார் சுற்றம் அமராமைக்***
***காரண மின்றி வரும்.***

***சுற்றம் பிரிந்தாலும் மீண்டும் உணர்ந்ததும்***
***பற்றுடன் வந்துசேர்வார் பார்.***

*குறள் 530:*

***உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்***
***இழைத்திருந் தெண்ணிக் கொளல்.***

***பிரிந்தவர்கள் மீண்டும் வரும்போதோ ஆய்ந்தே***
***விரும்பவேண்டும் நட்பைத்தான் இங்கு.***

---

## *54 பொச்சாவாமை*

*குறள் 531:*

***இறந்த வெகுளியின் தீதே சிறந்த***
***உவகை மகிழ்ச்சியிற் சோர்வு.***

***மகிழ்ச்சி  நிலையில் மயங்கும் மறதி***
***வெடிக்கும் சினத்தினும் தீது.***

*குறள் 532:*

***பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை***
***நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.***

***ஏழ்மை அறிவைக் கெடுக்கும்! மறதியோ***
***பார்போற்றும் நற்புகழ்க்கே கேடு.***

*குறள் 533:*

***பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்***
***தெப்பானூ லோர்க்குந் துணிவு.***

***எத்துறை  வல்லுநர்க்கும்   என்றும் மறதியால்***
***சற்றும் புகழில்லை சாற்று.***

*குறள் 534:*

***அச்ச முடையார்க் கரணில்லை ஆங்கில்லை***
***பொச்சாப் புடையார்க்கு நன்கு.***

***அஞ்சுவோர்க்கோ பாதுகாப்பால் எந்நப் பயனுமில்லை!***
***இங்கே மறதி உடையோர்க்கோ எந்தநிலை***
***வந்தாலும் நற்பயன் இல்.***

*குறள் 535:*

***முன்னுறக் காவா திழுக்கியான் தன்பிழை***
***பின்னூ றிரங்கி விடும்.***

***துன்பம் வருமுன் காக்கவேண்டும்! வந்தபின்***
***தன்பிழை  எண்ணுவான் நொந்து.***

*குறள் 536:*

***இழுக்காமை யார்மாட்டும் என்றும் வழுக்காமை***
***வாயின் அதுவொப்ப தில்.***

***மறதியற்ற பண்பு தொடர்ந்திருந்தால் நன்மை***
***அதுபோல வேறில்லை சாற்று.***

*குறள் 537:*

***அரியவென் றாகாத இல்லைபொச் சாவாக்***
***கருவியாற் போற்றிச் செயின்.***

***மறவாமை கொண்டோர்க்கோ செய்ய இயலாச்***
***செயலொன்று மில்லை உணர்.***

*குறள் 538:*

***புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா***
***திகழ்ந்தார்க் கெழுமையும் இல்.***

***புகழுக் குரியவற்றைச் செய்திட வேண்டும்!***
***மறப்போர்க்கோ இல்லை உயர்வு.***

*குறள் 539:*

***இகழ்ச்சியிற் கெட்டாரை உள்ளுக தாந்தம்***
***மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.***

***மகிழ்ச்சியில் இங்கே மறந்திடும் நேரம்***
***மறதியால் கெட்டோரை எண்ணு.***

*குறள் 540:*

***உள்ளிய தெய்தல் எளிதுமன் மற்றுந்தான்***
***உள்ளிய துள்ளப் பெறின்.***

***எண்ணியதை எண்ணியே வாழ்ந்தால் எண்ணியதை***
***எண்ணிய வாறடைவோம் இங்கு.***

---

## *55 செங்கோன்மை*

*குறள் 541:*

***ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டும்***
***தேர்ந்துசெய் வஃதே முறை.***

***குற்றத்தை ஆய்ந்து நடுநிலையைப் பின்பற்றி***
***நிற்பதே தீர்ப்பென்று சாற்று.***

*குறள் 542:*

***வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்***
***கோனோக்கி வாழுங் குடி.***

***உயிரினங்கள் வாழும்  மழைநோக்கி! மக்கள்***
***செழிப்புடன் வாழ்வதற்கு செங்கோல் அரசின்***
***வழிநோக்கி வாழ்ந்திருப்பார் பார்த்து.***

*குறள் 543:*

***அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்***
***நின்றது மன்னவன் கோல்.***

***அறநூல்கள் மற்றும் அறச்செயல்க ளுக்குப்***
***பொறுப்புதான் செங்கோ லரசு.***

*குறள் 544:*

***குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்***
***அடிதழீஇ நிற்கும் உலகு.***

***மக்களைக் காத்துவாழும் நல்லரசை வையகமே***
***சுற்றிநின்று வாழ்த்தும் உவந்து.***

*குறள் 545:*

***இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட***
***பெயலும் விளையுளுந் தொக்கு.***

***பருவமழை நல்விளைச்சல் இவ்விரண்டும் நீதி***
***வழுவாத ஆட்சி சிறப்பு.***

*குறள் 546:*

***வேலன்று வென்றி தருவது மன்னவன்***
***கோலதூஉங் கோடா தெனின்.***

***பகைவீழ்த்தும்  வேலல்ல வெற்றி! மக்கள்***
***அகம்வாழ்த்தும்  செங்கோல்தான் சொல்.***

*குறள் 547:*

***இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை***
***முறைகாக்கும் முட்டாச் செயின்.***

***உலகை அரசுகாக்கும்! நீதிமுறை ஆட்சி***
***அரசைத்தான் காக்குமென்று செப்பு.***

*குறள் 548:*

***எண்பதத்தான் ஓரா முறறசெய்யா மன்னவன்***
***தண்பதத்தான் தானே கெடும்.***

***முறைதவறி ஆளும் அரசனோ தானே***
***நிலைமாறி வீழ்ந்திடுவான் தாழ்ந்து.***

*குறள் 549:*

***குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்***
***வடுவன்று வேந்தன் தொழில்.***

***மக்களைக் காப்பது குற்றத்தைத் தண்டித்தல்***
***அக்கறை ஆட்சிப் பொறுப்பு.***

*குறள் 550:*

***கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்***
***களைகட் டதனொடு நேர்.***

***கொடியவரைத் தண்டித்தல் நெல்வயலில் உள்ள***
***களைபறித்துக் காப்பதுபோ லாம்.***

---

## *56 கொடுங்கோன்மை*

***குறள் 551:***

***கொலைமேற்கொண் டாரிற் கொடிதே அலைமேற்கொண்***
***டல்லவை செய்தொழுகும் வேந்து.***

***மக்களை வாட்டும் அரசு, கொலைத்தொழில்***
***வக்கிரத்தைக் காட்டிலும் கேடு.***

***குறள் 552:***

***வேலொடு நின்றான் இடுவென் றதுபோலும்***
***கோலொடு நின்றான் இரவு.***

***அரசு பொருளைப் பறிப்பதும் வேலால்***
***மிரட்டுகின்ற கொள்ளையனும் ஒன்று.***

***குறள் 553:***

***நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்***
***நாடொறும் நாடு கெடும்.***

***நாளும் நிகழ்வை கணிக்காமல் ஆள்பவர்***
***நாட்டை இழப்பார் விரைந்து.***

***குறள் 554:***

***கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்***
***சூழாது செய்யும் அரசு.***

***அரசின் அலட்சியம் மக்களையும் செல்வ***
***வளத்தையும் பாதிக்கும் பார்.***

*குறள் 555:*

***அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே***
***செல்வத்தைத் தேய்க்கும் படை.***

***ஆட்சிக் கொடுமையால் சிந்துகின்ற கண்ணீரோ***
***ஆட்சியைச் சீரழிக்கும் சொல்.***

*குறள் 556:*

***மன்னார்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்***
***மன்னாவாம் மன்னர்க் கொளி.***

***ஆட்சிப் புகழுக்குக் காரணம் நேர்மையே!***
***நேர்மையில்லை எப்புகழும் பாழ்.***

*குறள் 557:*

***துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்தன்***
***அளியின்மை வாழும் உயிர்க்கு.***

***மழையில்லை, துன்பம் உலகுக்கே! நேர்மை***
***தழைக்காத ஆட்சியோ மக்களுக்குத் துன்பம்!***
***களையாகும் அவ்வாட்சி தான்.***

*குறள் 558:*

***இன்மையின் இன்னா துடைமை முறைசெய்யா***
***மன்னவன் கோற்கீழ்ப் படின்.***

***ஏழ்மையில் வாழலாம்! செல்வந்த ராய்வாழ்தல்***
***பாழாம் கொடுங்கோலன் கீழ்.***

*குறள் 559:*

***முறைகோடி மன்னவன் செய்யின் உறைகோடி***
***ஒல்லாது வானம் பெயல்.***

***முறைதவறும் ஆட்சியில் வான்மழை பொய்க்கும்!***
***பருவம் தவறும் தொடர்ந்து.***

***குறள் 560:***

***ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்***
***காவலன் காவான் எனின்.***

***முறைதவறும் ஆட்சியில் ஆக்கமில்லை! சான்றோர்***
***அறநூல் மறப்பார் சொல்.***

---

*57 வெருவந்த செய்யாமை*
*(அஞ்சத்தக்கன செய்யாதிருத்தல்)*

***குறள் 561:***

***தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்***
***ஒத்தாங் கொறுப்பது வேந்து.***

***குற்றத்தை ஆய்ந்தறிந்து தண்டித்தே மீண்டுமக்***
***குற்றம் தடுத்தல் அரசு.***

***குறள் 562:***

***கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்கம்***
***நீங்காமை வேண்டு பவர்.***

***வேகத்தைக் காட்டி வரம்பினை மீறாமல்***
***நாடறிய மென்மையாய்த் தண்டனை தந்திருந்தால்***
***நீடுவாழும் அந்த அரசு.***

***குறள் 563:***

***வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயின்***
***ஒருவந்தம் ஒல்லைக் கெடும்.***

***குடிமக்கள் அஞ்சும் கொடுங்கோலர் ஆட்சி***
***நெறிகெட் டழியும் இடிந்து.***

*குறள் 564:*

***இறைகடியன் என்றுரைக்கும் இன்னாச்சொல் வேந்தன்***
***உறைகடுகி ஒல்லைக் கெடும்.***

***மக்கள் வெறுக்கும் கொடுங்கோலர் ஆட்சியோ***
***எக்கணமும் வீழும் அழிந்து.***

*குறள் 565:*

***அருஞ்செவ்வி இன்னா முகத்தான் பெருஞ்செல்வம்***
***பேஎய்கண் டன்ன துடைத்து.***

***காண வருவோரைப் பார்க்கத் தவிர்ப்பவன்***
***காண்போர் வெறுக்க கடுகடுக்கப் பேசுவோன்***
***பேணுகின்ற செல்வங்கள் வீண்.***

*குறள் 566:*

***கடுஞ்சொல்லன் கண்ணிலன் ஆயின் நெடுஞ்செல்வம்***
***நீடின்றி ஆங்கே கெடும்.***

***கடுஞ்சொல்லும் ஈரமற்ற உள்ளமுள்ள வேந்தன்***
***கொடுஞ்செல்வம் போகும் அழிந்து.***

*குறள் 567:*

***கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்தன்***
***அடுமுரண் தேய்க்கும் அரம்.***

***முறையற்ற தண்டனை மற்றும் கடுஞ்சொல்***
***நெறிமறந்த தீய அரசின் வலுவை***
***அழிக்கும் அரமாகும் சொல்.***

*குறள் 568:*

***இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்***
***சீறிற் சிறுகுந் திரு.***

***கலந்தேதான் பேசாமல் வேந்தன் கோப***
***வழிநடந்தால் என்றும் அழிவு.***

*குறள் 569:*
***செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்***
***வெருவந்து வெய்து கெடும்.***

***தற்காத்துக் கொள்ளாத வேந்தனுக்குப் போர்வந்தால்***
***எப்படியும் வீழ்வான் துவண்டு.***

*குறள் 570:*
***கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோல் அதுவல்ல***
***தில்லை நிலக்குப் பொறை.***

***கொடுங்கோல் அரசிங்கே கல்லாரை நம்பும்!***
***அதுவேதான் நாட்டின் சுமை.***

---

## *58 கண்ணோட்டம்*

## *(இரக்கம்)*

*குறள் 571:*

***கண்ணோட்டம் என்னுங் கழிபெருங் காரிகை***
***உண்மையான் உண்டிவ் வுலகு.***

***இரக்கமெனும் பண்போ இருப்பதால்தான் இந்த***
***உலகம் நிலைத்ததென்றே சொல்.***

*குறள் 572:*

***கண்ணோட்டத் துள்ள துலகியல் அஃதிலார்***
***உண்மை நிலக்குப் பொறை.***

***இரக்கம் இயக்குதே இவ்வுலகை! அந்த***
***இரக்கமற்றோர் பாரின் சுமை.***

*குறள் 573:*

***பண்ணென்னாம் பாடற் கியைபின்றேற் கண்ணென்னாங்***
***கண்ணோட்டம் இல்லாத கண்.***

***கண்ணோட்டம் இல்லாத கண்ணும் இசையோடு***
***ஒன்றாத பண்ணுமென்றும் வீண்.***

*குறள் 574:*

***உளபோல் முகத்தெவன் செய்யும் அளவினாற்***
***கண்ணோட்டம் இல்லாத கண்.***

***கண்ணோட்டம் இல்லாத கண்கள் முகத்திலே***
***உள்ளன! நன்மையென்ன கூறு.***

*குறள் 575:*

***கண்ணிற் கணிகலங் கண்ணோட்டம் அஃதின்றேற்***
***புண்ணென் றுணரப் படும்.***

***கண்ணோட்டம் கண்ணின் நகையாகும்! இல்லையெனில்***
***கண்ணல்ல வெற்றுப் புண்.***

*குறள் 576:*

***மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ***
***டியைடந்துகண் ணோடா தவர்.***

***கண்ணிருந்தும் கண்ணோட்டம் இல்லாதோர், மண்ணில்***
***ஒன்றியே நிற்கும் மரம்.***

*குறள் 577:*

***கண்ணோட்டம் இல்லவர் கண்ணிலர் கண்ணுடையார்***
***கண்ணோட்டம் இன்மையும் இல்.***

***கருணையுள்ளோர் மட்டுமே கண்ணுள்ளோர்! வாழ்வில்***
***கருணையற்றோர் கண்ணற்றோ ராம்.***

*குறள் 578:*

***கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்***
***குரிமை உடைத்திவ் வுலகு.***

***கடமையுடன் கண்ணோட்டம் நாள்தோறும்  கொண்டோர்க்( கு)***
***உடைமையாம் இந்த உலகு.***

*குறள் 579:*

***ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்***
***பொறுத்தாற்றும் பண்பே தலை.***

***புண்படுத்திப் பார்ப்போரைக் கண்ணோட்டம் கொண்டேதான்***
***பண்படுத்திப் பார்த்தல் சிறப்பு.***
*குறள் 580:*

***பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க***
***நாகரிகம் வேண்டு பவர்.***

***நண்பர்கள் நஞ்சனைய தீமையைச் செய்தாலும்***
***பண்பாளர் ஏற்பார் பொறுத்து.***

---

## *59 ஒற்றாடல்*

*குறள் 581:*

***ஒற்றும் உரைசான்ற நூலும் இவையிரண்டும்***
***தெற்றென்க மன்னவன் கண்.***

***ஒற்றரும் நீதி அறநூலும் வேந்தனின்***
***அக்கறை ஆட்சிக்குக் கண்.***

*குறள் 582:*

***எல்லார்க்கும் எல்லாம் நிகழ்பவை எஞ்ஞான்றும்***
***வல்லறிதல் வேந்தன் தொழில்.***

***எல்லோ ரிடத்திலும் எல்லா நிகழ்வையும்***
***ஒற்றரின் மூலம் அறிந்துகொள்தல் நல்லரசின்***
***அக்கறை என்றே உணர்.***

*குறள் 583:*

*ஒற்றினான் ஒற்றிப் பொருள்தெரியா மன்னவன்*
*கொற்றங் கொளக்கிடந்த தில்.*

*ஒற்றரின் மூலம் நிகழ்வறியா ஆட்சியாளர்*
*வெற்றி பெறுதல் அரிது.*

*குறள் 584:*

*வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்*
*கனைவரையும் ஆராய்வ தொற்று.*

*சுற்றம் பகைவர் பொதுமக்கள் என்றாய்ந்தே*
*ஒற்றுசொல்வார் ஒற்றராம் பார்.*

*குறள் 585:*

*கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்*
*உகாஅமை வல்லதே ஒற்று.*

*வேடமேற்று செல்வதும் சிக்கினால் அஞ்சாமல்*
*நாடுகாக்கும் நெஞ்சுறுதி ஒற்று.*

*குறள் 586:*

*துறந்தார் படிவத்த ராகி இறந்தாராய்ந்*
*தென்செயினுஞ் சோர்வில தொற்று.*

*ஒற்றாடச் சென்றவர் ஒன்றும் அறியார்போல்*
*ஒற்றாய்ந்தே, மாட்டினால் நாட்டின் ரகசியத்தை*
*எப்படியும் காத்தல் திறன்.*

*குறள் 587:*

***மறைந்தவை கேட்கவற் றாகி அறிந்தவை***
***ஐயப்பா டில்லதே ஒற்று.***

***சதிச்செயலைக் கேட்டறிந்தே உண்மை நிலையை***
***அறிந்துவந்து சொல்வதே ஒற்று.***

*குறள் 588:*

***ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்***
***ஒற்றினால் ஒற்றிக் கொளல்.***

***ஒற்றர் ஒருவரின் செய்தியை மற்றுமோர்***
***ஒற்றருடன் ஒப்பிடல் காப்பு.***

*குறள் 589:*

***ஒற்றொற் றுணராமை யாள்க உடன்மூவர்***
***சொற்றொக்க தேறப் படும்.***

***ஒற்றர் ஒருவர் அறியாமல் மூவரை***
***ஒன்றாக அனுப்பியே செய்திகளை ஒப்பிட்டே***
***உண்மை அறிதல் தெளிவு.***

*குறள் 590:*

***சிறப்பறிய ஒற்றின்கண் செய்யற்க செய்யிற்***
***புறப்படுத்தான் ஆகும் மறை.***

***மறைவாக ஒற்றரை வாழ்த்தவேண்டும் இங்கே!***
***மறைக்காமல் செய்தாலோ ஒற்றர் செயலைப்***
***பறைசாற்றி நின்றதைப்போ லாம்.***

---

## *60 ஊக்கமுடைமை*

*குறள் 591:*

***உடையர் எனப்படுவ தூக்கமஃ தில்லார்***
***உடைய துடையரோ மற்று.***

***ஊக்கம் உடையாரே எல்லாம் உடையராம்!***
***ஊக்கமற்றோர் ஒன்றுமற்றோர் சொல்.***

*குறள் 592:*

***உள்ள முடைமை உடைமை பொருளுடைமை***
***நில்லாது நீங்கி விடும்.***

***ஊக்கம் நிலைத்திருக்கும்! மற்ற பொருட்செல்வம்***
***நீங்கும் நிலைக்கா துணர்.***

*குறள் 593:*

***ஆக்கம் இழந்தேமென் றல்லாவார் ஊக்கம்***
***ஒருவந்தங் கைத்துடை யார்.***

***ஊக்க முடையவர்கள் செல்வம்  இழந்தாலும்***
***ஊக்க மிழக்கமாட்டார் இங்கு.***

*குறள் 594:*

***ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா***
***ஊக்க முடையா னுழை.***

***ஊக்கம் உடையவரைச் செல்வங்கள் தேடிவந்தே***
***போற்றி வணங்கும் விழைந்து.***

*குறள் 595:*

***வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்***
***உள்ளத் தனைய துயர்வு.***

***நீரின் உயரம் மலர்க்காம்  புயருமிங்கே!***
***வாழ்விலே உள்ளத்தின் ஊக்கத்திற் கேற்பத்தான்***
***நாளும் உயர்வு வரும்.***

*குறள் 596:*

***உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது***
***தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.***

***எண்ணம் உயர்வாய் இருக்கவேண்டும்!***
***கூடவில்லை***
***என்றாலும் சோர்வடைதல் தப்பு.***

*குறள் 597:*

***சிதைவிடத் தொல்கார் உரவோர் புதையம்பிற்***
***பட்டுப்பா டூன்றுங் களிறு.***

***போர்க்கள யானையை அம்புகள் தைத்தாலும்***
***சோர்வின்றி நிற்பதைப்போல் ஊக்கத்தைக் கைவிடாமல்***
***வாழவேண்டும் மானிடர் இங்கு.***

*குறள் 598:*

***உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து***
***வள்ளியம் என்னுஞ் செருக்கு.***

***அள்ளி வழங்குகின்ற உள்ளமற்றோர்***
***வள்ளலென்ற***
***நற்பெருமை கொள்ளவழி ஏது?***

*குறள் 599:*

***பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை***
***வெரூஉம் புலிதாக் குறின்.***

***புலியோ எதிர்வந்தால் யானையோ அஞ்சும்!***
***உருவிலில்லை ஊக்கம்! துணிவு.***

*குறள் 600:*

***உரமொருவற் குள்ள வெறுக்கையஃ தில்லார்***
***மரமக்க ளாதலே வேறு.***

***ஊக்கமே நெஞ்சுறுதி! ஊக்கமற்றோர் மக்கள்தான்***
***பார்வைக்கே! ஆனால் மரம்.***

---

## *61 மடியின்மை*

### *( சோம்பல் இல்லாமை)*

*குறள் 601:*

***குடியென்னுங் குன்றா விளக்கம் மடியென்னும்***
***மாசூர மாய்ந்து கெடும்.***

**பேரொளி கொண்ட குடிப்பெருமை**
**சோம்பலால்**
***காரிருள் சூழ்ந்து கெடும்.***

*குறள் 602:*

***மடியை மடியா ஒழுகல் குடியைக்***
***குடியாக வேண்டு பவர்.***

**குடும்பம் உயர்ந்திட சோம்பலின்றி ஊக்கம்**
***தொடுத்தே முயல்தல் சிறப்பு.***

*குறள் 603:*

***மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த***
***குடிமடியுந் தன்னினு முந்து.***

***அறிவின்றி அக்கறையும் இல்லாமல் வாழ்ந்தால்***
***குடியழியும் சோம்பேறி முன்.***

*குறள் 604:*

***குடிமடிந்து குற்றம் பெருகும் மடிமடிந்து***
***மாண்ட உஞற்றி லவர்க்கு.***

***சோம்பேறி வாழ்விலே குற்றம் பெருகும்!***
***சீரழிந்தே***
***தாழும் குடியின் புகழ்.***

*குறள் 605:*

***நெடுநீர் மறவி மடிதுயில் நான்கும்***
***கெடுநீரார் காமக் கலன்.***

***காலத்தைத் தாழ்த்தல்,மறதியுடன் சோம்பலும் தூக்கமென்ற***
***நாலும் அழிவின் படகு.***

*குறள் 606:*

***படியுடையார் பற்றமைந்தக் கண்ணும் மடியுடையார்***
***மாண்பயன் எய்தல் அரிது.***

***சான்றோர் தொடர்பிருந்தும் சோம்பலே***
***வாழ்வானால்***
***காண்பாரோ நற்பெருமை இங்கு?***

*குறள் 607:*

***இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட உஞற்றி லவர்.***

***முயற்சியின்றி சோம்பி அலைந்திருந்தால் நாளும்
இகழ்ச்சிக்கே ஆளாவார் சொல்.***

*குறள் 608:*

***மடிமை குடிமைக்கண் தங்கிற்றன் னென்னார்க்
கடிமை புகுத்தி விடும்.***

***குடும்பத் தலைவனோ சோம்பித் திரிந்தால்
பகைவர்க் கடிமைதான் கூறு.***

*குறள் 609:*

***குடியாண்மை யுள்வந்த குற்றம் ஒருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.***

***சோம்பலை விட்டுவிட்டால் வாழ்க்கை
குறைபாடு
நீங்கி நிறைவாகும் சொல்.***

*குறள் 610:*

***மடியிலா மன்னவன் எய்தும் அடியளந்தான்
தாஅய தெல்லாம் ஒருங்கு.***

***சோம்பலற்ற மன்னன் உலகளந்து தன்கொடைக்கீழ்
ஆள்வது போல்பயனாம் சொல்.***

## *62 ஆள்வினை உடைமை*

*குறள் 611:*

***அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்***
***பெருமை முயற்சி தரும்.***

***முடியாதே என்றே நினைக்காதே!  நம்மால்***
***முடியுமென்ற ஆற்றலே வித்து.***

*குறள் 612:*

***வினைக்கண் வினைகெடல் ஓம்பல் வினைக்குறை***
***தீர்ந்தாரின் தீர்ந்தன் றுலகு.***

***செய்யும் செயலை முழுவதும் செய்யவேண்டும்!***
***செய்யவில்லை என்றால் இழுக்கு.***

*குறள் 613:*

***தாளாண்மை என்னுந் தகைமைக்கண் தங்கிற்றே***
***வேளாண்மை என்னுஞ் செருக்கு.***

***உதவிசெய்யும் பண்போ விடாமுயற்சி என்னும்***
***கடமையில் உள்ளது சொல்.***

*குறள் 614:*

***தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை***
***வாளாண்மை போலக் கெடும்.***

***களத்திலே கோழைகள் சுற்றுகின்ற  வாளும்***
***முயற்சியே இன்றி உதவிசெய்வேன்***
***என்றே***
***உரைப்பதும்  எப்பயனும் இல்.***

*குறள் 615:*

***இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்***
***துன்பம் துடைத்தூன்றும் தூண்.***

***தன்னலமின்றி செய்யும் செயல்வீரன் தன்சுற்றத்***
***துன்பத்தைத் தாங்குகின்ற தூண்.***

*குறள் 616:*

***முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை***
***இன்மை புகுத்தி விடும்.***

***முயற்சி வளங்களைச் சேர்க்கும் நிலையாய்!***
***முயலாமை ஏழ்மை தரும்.***

*குறள் 617:*

***மடியுளாள் மாமுகடி என்ப மடியிலான்***
***தாளுளாள் தாமரையி னாள்.***

***முயற்சியின்றி வாழ்வோரோ சோம்பேறி***
***ஆவார்!***
***முயற்சியோ ஊக்கம் தரும்.***

*குறள் 618:*

***பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்***
***தாள்வினை இன்மை பழி.***

***புலன்குறை என்றும் குறையல்ல! நாமோ***
***முயற்சியற்ற பண்பே குறை.***

*குறள் 619:*

***தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.***

***இறைவனால் ஆகா தெனினும் முயற்சி
விதைத்தால் பயனுண்டு பார்.***

*குறள் 620:*

***ஊழையும் உப்பக்கங் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்.***

***முயற்சி இருந்தால் விதியையும் வென்று
தலைநிமிர்ந்து வாழலாம் செப்பு.***

---

## *63 இடுக்கண் அழியாமை*

*குறள் 621:*

***இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வ தஃதொப்ப தில்.***

***துன்பங்கள் வந்தால் கலங்காமல் சந்தித்தால்
அந்தநிலை வெற்றியே மெய்.***

*குறள் 622:*

***வெள்ளத் தனைய இடும்பை அறிவுடையான்
உள்ளத்தின் உள்ளக் கெடும்.***

***வெள்ளம்போல் துன்பமா? இங்கே அறிவுடையோர்
உள்ளத்தால் வெல்வதற்குச் சிந்தித்தால் ஓடிவிடும்!
உள்ளத் துணிவே துணை.***

*குறள் 623:*

***இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்***
***கிடும்பை படாஅ தவர்.***

***இன்னலைக் கண்டிங்கே அஞ்சாதோர் இன்னலுக்கே***
***இன்னலைத் தந்திடுவார் சொல்.***

*குறள் 624:*

***மடுத்தவா யெல்லாம் பகடன்னான் உற்ற***
***இடுக்கண் இடர்ப்பா டுடைத்து.***

***சுமையைச் சுமக்கும் எருதாய் முயன்றால்***
***சுமைத்துன்பம் துன்பப் படும்.***

*குறள் 625:*

***அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற***
***இடுக்கண் இடுக்கட் படும்.***

***தொடர்ந்துவரும் துன்பத்தால் அஞ்சாதோர் கண்டே***
***பறந்தோடும் துன்பம் விரைந்து.***

*குறள் 626:*

***அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்***
***றோம்புதல் தேற்றா தவர்.***

***வளமிருந்த போதிங்கே காக்காமல் ஏழ்மை***
***நிலையிலே ஏழையானோம்  என்றே வருந்தி***
***உளம்நொந்து போவாரோ இங்கு?***

*குறள் 627:*

***இலக்கம் உடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்***
***கையாறாக் கொள்ளாதா மேல்.***

***உடலுக்குத் துன்பம் இயல்பென்பார், துன்பம்***
***முடக்கினால் தாங்குவார் சாற்று.***

*குறள் 628:*

***இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்***
***துன்ப முறுதல் இலன்.***

***இன்பத்தில் துள்ளாதோர் வாழ்க்கையில் துன்பத்தை***
***என்றும் இயல்பென்பார் சொல்.***

*குறள் 629:*

***இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்***
***துன்ப முறுதல் இலன்.***

***இன்பத்தை ஏற்று மகிழாதோன் துன்பத்தைக்***
***கண்டே துவளமாட்டான் சொல்.***

*குறள் 630:*

***இன்னாமை இன்பம் எனக்கொளின் ஆகுந்தன்***
***ஒன்னார் விழையுஞ் சிறப்பு.***

***துன்பத்தை இன்பமாய் எண்ணுவோரை வன்பகைவர்***
***என்றும் மதிப்பார் விளம்பு.***

---

## *64 அமைச்சு*

*குறள் 631:*

***கருவியும் காலமும் செய்கையும் செய்யும்***
***அருவினையும் மாண்ட தமைச்சு.***

***செய்பொருள்கள், ஏற்றகாலம், செய்கின்ற செய்முறை,***
***செய்யும் செயல்கள் எண்ணிச் செயல்படும்***
***வல்லமை கொண்ட தமைச்சு.***

*குறள் 632:*

***வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு***

***அஞ்சாமை, நற்குடி, மக்களைக் காப்பது,
கற்றறிதல், நன்முயற்சி அய்ந்தும் உடையதே
வெற்றிக் குரிய அமைச்சு.***

*குறள் 633:*

***பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.***

***பகைத்துணை தன்னைப் பிரித்தலும், நல்லார்
உறவினைக் காத்தலும், உள்ளம் திருந்தி
திரும்புவோரை ஏற்ப தமைச்சு.***

*குறள் 634:*

***தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.***

***ஆய்ந்து தெளிதல், தெளிந்ததைச் செய்வதும்
காய்தல் உவத்தலின்றி தன்கருத்தைச் சொல்லுதலும்
நல்ல அமைச்சர்க் கழகு.***

*குறள் 635:*

***அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் தேர்ச்சித் துணை.***

***அறநெறி, சொல்லாற்றல், செய்யும் திறமை
நிறைந்தவரே தேர்ந்த துணை.***

*குறள் 636:*

***மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்***
***யாவுள முன்னிற் பவை.***

***நுண்ணறிவும் நூலறிவும் கொண்டவரின் ஆற்றல்முன்***
***வஞ்சகமும் சூழ்ச்சியும் தூசு.***

*குறள் 637:*

***செயற்கை அறிந்தக் கடைத்து முலகத்***
***தியற்கை அறிந்து செயல்.***

***நூலறிவைப் பெற்றும் இயற்கை அறிவாலே***
***நாட்டை வழிநடத்தல் நன்று.***

*குறள் 638:*

***அறிகொன் றறியான் எனினும் உறுதி***
***உழையிருந்தான் கூறல் கடன்.***

***தன்னால் அறியமாட்டார் சொன்னாலும் கேட்கமாட்டார்***
***அஞ்சாமல் சொல்லித் திருத்து.***

*குறள் 639:*

***பழுதெண்ணும் மந்திரியிற் பக்கத்துள் தெவ்வோர்***
***எழுபது கோடி உறும்.***

***பகைவர் எழுபது கோடிக் கிணையாம்***
***தவறான ஓரமைச்சர் இங்கு.***

*குறள் 640:*

***முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்***
***திறப்பா டிலாஅ தவர்.***

***முறையாய் அறிந்தும் செயல்திறன் அற்றோர்***
***அறைகுறையாய்ச் செய்வார் உணர்.***

---

## *65 சொல்வன்மை*

***குறள் 641:***

***நாநல மென்னும் நலனுடைமை அந்நலம்***
***யாநலத் துள்ளதூஉம் அன்று.***

***நாநயமே வாழ்வில் சிறப்பான செல்வமாகும்!***
***வேறுசெல்வம் இல்லையதற்( கு) ஈடு.***

***குறள் 642:***

***ஆக்கமுங் கேடும் அதனால் வருதலாற்***
***காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.***

***நன்மையும் தீமையும் சொற்களால் ஏற்படும்!***
***பண்பற்ற சொல்லைத் தவிர்.***

***குறள் 643:***

***கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்***
***வேட்ப மொழிவதாம் சொல்.***

***வேண்டியவர் நாடிவந்தும், வேண்டாதோர்***
***கேட்டிருக்க***
***வேண்டுமென்றும் பேசுவதே பேச்சு.***

***குறள் 644:***

***திறனறிந்து சொல்லுக சொல்லை அறனும்***
***பொருளும் அதனினூஉங் கில்.***

***திறனறிந்து சொல்வதே சொல்வன்மை! அந்த***
***அறம்பொருளுக் கில்லையே ஈடு.***

*குறள் 645:*

***சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை***
***வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து.***

***சொல்கின்ற சொல்லைவெல்ல வேறுசோல் இல்லையென***
***நன்கறிந்து சொல்லவேண்டும் பார்த்து.***

*குறள் 646:*

***வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்***
***மாட்சியின் மாசற்றார் கோள்.***

***மற்றவர்கள் கேட்குமாறு பேசுவதும், மற்றவரின்***
***நற்கருத்தை ஏற்கின்ற பக்குவமும் பெற்றவர்கள்***
***பண்பான சான்றோராம் சாற்று.***

*குறள் 647:*

***சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சா னவனை***
***இகல்வெல்லல் யார்க்கும் அரிது.***

***சொல்வன்மை, சோர்விலாமை, அஞ்சாமை கொண்டிருக்கும்***
***வல்லவரை வெல்தல் அரிது.***

*குறள் 648:*

***விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது***
***சொல்லுதல் வல்லார்ப் பெறின்.***

***சொல்வதைக் கோர்வையாக நேர்த்தியாக சொல்பவரின்***
***சொல்கேட்பார் மக்கள் விழைந்து.***

*குறள் 649:*

***பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற***
***சிலசொல்லல் தேற்றா தவர்.***

***சிலசொற்கள் குற்றமின்றிப் பேசுமாற்றல் அற்றோர்***
***பலசொற்கள் பேசுவார் சோர்ந்து.***

*குறள் 650:*

***இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற***
***துணர விரிந்துரையா தார்***

***கற்றதை  ஏற்குமாறு பேசத் தெரியாதோர்***
***முற்றும் மணமற்ற கொத்துமலர் போலாவார்!***
***கற்றும் பயனில்லை சாற்று.***

---

## *66 வினைத்தூய்மை*

*குறள் 651:*

***துணைநலம் ஆக்கந் தரூஉம் வினைநலம்***
***வேண்டிய எல்லாந் தரும்.***

***நல்ல துணையிருந்தால் ஊக்கம் பெருகிவரும்!***
***நற்செயல்கள் நன்மை தரும்.***

*குறள் 652:*

***என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு***
***நன்றி பயவா வினை.***

***நன்மை, புகழ்தராத எந்தச் செயலையும்***
***என்றும் புறக்கணித்தல் நன்று.***

*குறள் 653:*

***ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்குஞ் செய்வினை***
***ஆஅது மென்னு மவர்.***

***உயரவேண்டும் என்றெண்ணி வாழ்வோர் செயலில்***
***களங்கமின்றிப் பார்த்தல் சிறப்பு.***

*குறள் 654:*

***இடுக்கண் படினும் இளிவந்த செய்யார்***
***நடுக்கற்ற காட்சி யவர்.***

***தெளிவும் அறிவும் உடையவர்கள் என்றும்***
***இழிசெயல் செய்யார் உணர்.***

*குறள் 655:*

***எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்***
***மற்றன்ன செய்யாமை நன்று.***

***வருந்தவைக்கும் எச்செயலும் செய்யாதே! செய்தால்***
***மறுபடியும் செய்தல் தவிர்.***

*குறள் 656:*

***ஈன்றாள் பசிகாண்பான் ஆயினுஞ் செய்யற்க***
***சான்றோர் பழிக்கும் வினை.***

***துடிக்கின்ற தாயின் பசிதணிக்க, சான்றோர்***
***பழிக்கும் செயல்செய்யா தே.***

*குறள் 657:*

***பழிமலைந் தெய்திய ஆக்கத்திற் சான்றோர்***
***கழிநல் குரவே தலை.***

***பழிவழி வந்தசொத்தில் வாழ்வதினும் சான்றோர்க்***
***கிழிவான ஏழ்மையே மேல்.***

*குறள் 658:*

***கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்***
***முடிந்தாலும் பீழை தரும்.***

***தகாத செயல்களைச் செய்தால் செயல்கள்***
***தொடர்ச்சியாய்த் துன்பம் தரும்.***

*குறள் 659:*

***அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்***
***பிற்பயக்கும் நற்பா லவை.***

***அழவைத்துச் சேர்த்தால் அழவைத்தே போகும்!***
***உழைப்பாலே சேர்த்ததெல்லாம் நல்வழிச் செல்வம்!***
***பழியின்றி மீண்டும் வரும்.***

*குறள் 660:*

***சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமண்***
***கலத்துணீர் பெய்திரீஇ யற்று.***

***தீயவழிச் செல்வம் நிலைக்காது! பச்சைமண்***
***பானையில் நீரூற்றி சேமித்தல் போலாகும்!***
***நேர்வழிச் செல்வமே நன்று.***

---

## *67 வினைத்திட்பம்*

*குறள் 661:*

***வினைத்திட்பம் என்ப தொருவன் மனத்திட்பம்***
***மற்றைய எல்லாம் பிற.***

***செயலுறுதி என்றால் மனஉறுதி! மற்ற***
***நிலைகளோ வேறாகும் சொல்.***

*குறள் 662:*

***ஊறொரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்***
***ஆறென்பர் ஆய்ந்தவர் கோள்.***

***தடைகள் வருமுன் களைதலும், வந்த***
***பிறகோ தளராமல் சந்தித்தல் இந்த***
***இரண்டும் அறிவுடையார் பண்பு.***

*குறள் 663:*

***கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை இடைக்கொட்கின்***
***எற்றா விழுமந் தரும்.***

***செயலை முடித்துவிட்டுச் சொல்தல் வலிமை!***
***இடையில் தெரிந்தால் இடர்.***

*குறள் 664:*

***சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்***
***சொல்லிய வண்ணம் செயல்.***

***சொல்வ தெளிதுதான்! சொல்லியதைச் சொன்னவாறு***
***செய்தல் அரிதென் றுணர்.***

*குறள் 665:*

***வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்***
***ஊறெய்தி உள்ளப் படும்.***

***செயல்களால் சாதித்தோர் சாதனையின் வெற்றி***
***அரசுவரை எட்டும்! அனைவரும் போற்றி***
***வரவேற்பார் இங்கே புகழ்ந்து.***

*குறள் 666:*

***எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்***
***திண்ணியர் ஆகப் பெறின்.***

***எண்ணியதைச் செய்யும் உறுதி உடையவரால்***
***எண்ணிய வெற்றியுண்டு சொல்.***

*குறள் 667:*

***உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்***
***கச்சாணி யன்னார் உடைத்து.***

***உருவத்தைப் பார்த்தே இகழாதே நாளும்!***
***பெருந்தேர்க்குச் சிற்றாணி அச்சு.***

*குறள் 668:*

*கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது*
*தூக்கங் கடிந்து செயல்.*

*செய்யத் துணித்த செயலைத் தளராமல்*
*செய்து முடிப்பது நன்று.*

*குறள் 669:*

*துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி*
*இன்பம் பயக்கும் வினை.*

*துன்பமே வந்தாலும் இன்பமாகும் நற்செயலை*
*என்றும் துணிச்சலுடன் செய்.*

*குறள் 670:*

*எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்*
*வேண்டாரை வேண்டா துலகு.*

*எத்தகைய ஆற்றல் இருந்தும் செயலுறுதி*
*இல்லையென்றால் போற்றமாட்டார் இங்கு.*

---

## *68 வினைசெயல்வகை*

*குறள் 671:*

*சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு*
*தாழ்ச்சியுள் தங்குதல் தீது.*

*செயல்களைச் செய்யத் துணிந்தபின் கால*
*விரயத்தில் ஈடுபட்டால் தீது.*

*குறள் 672:*

***தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க***
***தூங்காது செய்யும் வினை.***

***காலத்தைத் தாழ்த்தாமல் செய்வதைத்  தாழ்த்தாமல்,***
***தாழ்த்துவதைத் தாழ்த்தியும் செய்.***

*குறள் 673:*

***ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே ஒல்லாக்கால்***
***செல்லும்வாய் நோக்கிச் செயல்.***

***இயன்றால் செயல்செய்! இயலவில்லை என்றால்***
***முயற்சியைச் சிந்தித்துச் செய்.***

*குறள் 674:*

***வினைபகை யென்றிரண்டின் எச்சம் நினையுங்கால்***
***தீயெச்சம் போலத் தெறும்.***

***செயலோ பகையோ அரைகுறையாய் விட்டால்***
***நெருப்பை அணைக்காமல் விட்டதுபோல்  இங்கே***
***பெருங்கேடு தன்னைத் தரும்.***

*குறள் 675:*

***பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்***
***இருள்தீர எண்ணிச் செயல்.***

***பொருள்கள் கருவியுடன் காலம் செயலும்***
***இடத்துடன் ஐந்தும் செயல்செய்யத் தேவை!***
***நடைபோட வைக்கும் நிமிர்ந்து.***

*குறள் 676:*

***முடிவும் இடையூறும் முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.***

***செயலை, தடையை, முடிவின் பயனைக்
கணித்தே செயல்களைச் செய்.***

*குறள் 677:*

***செய்வினை செய்வான் செயன்முறை அவ்வினை
உள்ளறிவான் உள்ளங் கொளல்.***

***அனுபவம் உள்ளவரைத் தேர்ந்தெடுத்துப் பேசி
செயலில் இறங்குதல் நன்று.***

*குறள் 678:*

***வினையான் வினையாக்கிக் கோடல் நனைகவுள்
யானையால் யானையாத் தற்று.***

***ஒருசெயலில் உள்ளபோதே மற்றொன்றைச் செய்தல்
ஒருயானை வைத்தேதான் மற்றொன்றை இங்கே
பிடிப்பது போலாம் உணர்.***

*குறள் 679:*

***நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை ஒட்டிக் கொளல்.***

***நண்பருக்கு நல்லது செய்வதைக் காட்டிலும்
வன்பகையை நட்பாக்கல் நன்று.***

*குறள் 680:*

***உறைசிறியார் உண்ணடுங்கல் அஞ்சிக் குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.***

***உடனிருப்போர் அஞ்சும் பகைவந்தால் நாமும்
அடங்கிப் பணிதல் அறிவு***

## *69 தூது*

***குறள் 681:***

***அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்***
***பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.***

***அன்பு, குடிப்பிறப்பு, ஆட்சியாளர் பாராட்டும்***
***பண்புகள் தூதர்க் கழகு.***

***குறள் 682:***

***அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்***
***கின்றி யமையாத மூன்று.***

***ஈடற்ற அன்பும், அறிவுடன்  சொல்லாற்றல்***
***தூதருக்கு முப்பண்பாம் கூறு.***

***குறள் 683:***

***நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்***
***வென்றி வினையுரைப்பான் பண்பு.***

***தன்நாட்டின் வெற்றிக்குத் தூதுரைக்கும் தூதருக்குப்***
***பண்பட்ட  வல்லமையே பண்பு.***

***குறள் 684:***

***அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்***
***செறிவுடையான் செல்க வினைக்கு.***

***அறிவுடன் தோற்றப் பொலிவும் படிப்பும்***
***நிறைந்தவர் தூதுக்கு நன்று.***

*குறள் 685:*

***தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி***
***நன்றி பயப்பதாந் தூது.***

***சொல்வதைச் சொல்லியும் நீக்குவதை நீக்கியும்***
***சொல்வதே தூதின் சிறப்பு.***

*குறள் 686:*

***கற்றுக்கண் அஞ்சான் செலச்சொல்லிக் காலத்தால்***
***தக்க தறிவதாந் தூது***

***கற்றதைச் சொல்லி எதற்குமே அஞ்சாமல்***
***சொல்கின்ற வீரமே தூது.***

*குறள் 687:*

***கடனறிந்து காலங் கருதி இடனறிந்***
***தெண்ணி உரைப்பான் தலை.***

***கடமையை, காலம், இடத்தை உணர்ந்தே***
***சிறப்பாகப் பேசுவதே தூது.***

*குறள் 688:*

***தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்***
***வாய்மை வழியுரைப்பான் பண்பு.***

***துணிவும், துணையும், ஒழுக்கமும் கொண்ட***
***மனப்பண்பே தூதர்க் கழகு.***

*குறள் 689:*

***விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்***
***வாய்சோரா வன்க ணவன்.***

***வாய்தவறி கூட இழிசொற்கள் கூறாமல்***
***ஆள்வோரின் நன்மைக்கும் நாட்டுக்கும் பாடுபடும்***
***தூயமனம் தூதர் சிறப்பு.***

*குறள் 690:*

***இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்***
***குறுதி பயப்பதாம் தூது.***

***தனக்கழிவு வந்தாலும்  அஞ்சாமல் வேந்தன்***
***இமையாதல் தூதரின் பண்பு.***

---

## *70 மன்னரைச் சேர்ந்து ஒழுகல்*

*குறள் 691:*

***அகலா தணுகாது தீக்காய்வார் போல்க***
***இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.***

***நெருப்பில் குளிர்காய்தல் போலத்தான் நாளும்***
***வரம்பிற்குள் வேண்டும்  தொடர்பு.***

*குறள் 692:*

***மன்னர் விழைப விழையாமை மன்னரான்***
***மன்னிய ஆக்கந் தரும்.***

***மன்னர் விரும்புவதைத் தானும் விரும்பாத***
***நன்னிலை என்றும் மதிப்பு.***

*குறள் 693:*

***போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்***
***தேற்றுதல் யார்க்கும் அரிது.***

***தவறுகள் நேராமல்  பார்க்கவேண்டும்! அய்யம்***
***உருவானால் தீர்த்தல் அரிது.***

*குறள் 694:*

***செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையும் அவித்தொழுகல்
ஆன்ற பெரியா ரகத்து.***

***பெரியவர்கள் முன்னே இரகசியம்  பேசிச்
சிரிப்பதை என்றும் தவிர்.***

*குறள் 695:*

***எப்பொருளும் ஓரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை.***

***மறைவாகப் பேசினால் கேட்பதும் என்ன
நடந்தது என்று வினவுதலும் தப்பு! அவரே
பகிர்ந்தால் தெரிந்துகொள்தல் நன்று.***

*குறள் 696:*

***குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.***

***மனநிலை, காலம் இவையறிந்தே ஏற்கும்
வினையறிந்து சொல்வது நன்று.***

*குறள் 697:*

***வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும்
கேட்பினும் சொல்லா விடல்.***

***பயனுள்ள செய்திசொல்! கேட்டாலும் எந்தப்
பயனற்ற  செய்தி தவிர்.***

*குறள் 698:*

***இளையர் இனமுறையர் என்றிகழார் நின்ற
ஒளியோ டொழுகப் படும்.***

***உறவு, இளையவர் என்பதை விட்டுப்
பதவியை எண்ணிப் பழகு.***

*குறள் 699:*

***கொளப்பட்டேம் என்றெண்ணிக் கொள்ளாத செய்யார்***
***துளக்கற்ற காட்சி யவர்.***

***வேண்டியவர் என்றே  அவரோ விரும்பாத***
***ஒன்றினைச் செய்தல் தவிர்.***

*குறள் 700:*

***பழையம் எனக்கருதிப் பண்பல்ல செய்யும்***
***கெழுதகைமை கேடு தரும்.***

***நீண்டநாள் நண்பரென்றே நாமோ உரிமையுடன்***
***தீங்கிழைத்தல் என்றுமே கேடு.***

---

## *71 குறிப்பறிதல்*

*குறள் 701:*

***கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்***
***மாறாநீர் வையக் கணி.***

***சொல்லாமல் இங்கே முகக்குறிப்பைச் சொல்பவர்***
***இவ்வுலகம் மெச்சும் நகை.***

*குறள் 702:*

***ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்***
***தெய்வத்தோ டொப்பக் கொளல்.***

***துல்லியமாய் உள்ளம் நினைப்பதைச் சொல்பவர்***
***தெய்வத்திற் கொப்பாவார் கூறு.***

*குறள் 703:*

*குறிப்பிற் குறிப்புணர் வாரை உறுப்பினுள்*
*யாது கொடுத்துங் கொளல்.*

*முகக்குறிப்பை வைத்தே அகக்குறிப்பைச் சொல்வோர்*
*திறனறிந்து தக்கவைத்தல் நன்று.*

*குறள் 704:*

*குறித்தது கூறாமைக் கொள்வாரோ டேனை*
*உறுப்போ ரனையரால் வேறு.*

*குறிப்பறிவோர் மற்றும் அறியாதோர் என்றால்*
*அறிவால்தான் என்போம்! உறுப்புகளால் அல்ல!*
*அறிவே மனிதன் திறன்.*

*குறள் 705:*

*குறிப்பிற் குறிப்புணரா வாயின் உறுப்பினுள்*
*என்ன பயத்தவோ கண்.*

*குறிப்பறிந்து சொல்லாதோன் கொண்டிருக்கும் கண்கள்*
*உறுப்பன்றி என்னபயன் கூறு?*

*குறள் 706:*

*அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்*
*கடுத்தது காட்டும் முகம்.*

*கண்ணாடி உள்ளதைக் காட்டுதல்போல் உள்ளத்தில்*
*உள்ளதைக் காட்டும் முகம்.*

*குறள் 707:*

*முகத்தின் முதுக்குறைந்த துண்டோ உவப்பினும்*
*காயினும் தான்முந் துறும்.*

*வெறுப்பு விருப்பை முகம்போல காட்டும்*
*அறிவுமிக்க தொன்றில்லை வேறு.*

*குறள் 708:*

***முகநோக்கி நிற்க அமையும் அகநோக்கி***
***உற்ற துணர்வார்ப் பெறின்.***

***அகத்தில் உள்ள குறிப்பறி வோரோ***
***முகம்நோக்கி நின்றால்போ தும்.***

*குறள் 709:*

***பகைமையும் கேண்மையும் கண்ணுரைக்கும் கண்ணின்***
***வகைமை உணர்வார்ப் பெறின்.***

***குறிப்பறியும் விற்பன்னர் பகையா? உறவா?***
***குறிப்பறிவார் கண்களைப் பார்த்து.***

*குறள் 710:*

***நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்காற்***
***கண்ணல்ல தில்லை பிற.***

***நுண்ணறி வாளருக்கோ உள்ளத்தை நன்களக்க***
***கண்கள் அளவுகோலாம் கூறு.***

---

## *72 அவையறிதல்*

*குறள் 711:*

***அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்***
***தொகையறிந்த தூய்மை யவர்.***

***சொற்களின் தன்மை, அறிஞர், அவையோரின்***
***பண்பறிந்து பேசுதல் நன்று.***

*குறள் 712:*

***இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லின்***
***நடைதெரிந்த நன்மை யவர்.***

***அவையின் நிலையறிந்து காலம் அறிந்தே***
***சுவையாகப் பேசவேண்டும் சொல்.***

*குறள் 713:*

***அவையறியார் சொல்லல்மேற் கொள்பவர் சொல்லின்***
***வகையறியார் வல்லதூஉம் இல்.***

***அவையின் இயல்பறியா பேச்சென்றால்***
***சொல்லின்***
***வகையும் திறனுமற்ற பேச்சு.***

*குறள் 714:*

***ஒளியார்முன் ஒள்ளிய ராதல் வெளியார்முன்***
***வான்சுதை வண்ணங் கொளல்.***

***அறிஞர்கள் முன்பு அறிவுடன் பேசு!***
***அறிவிலார்முன் பேசாமை நன்று.***

*குறள் 715:*

***நன்றென் றவற்றுள்ளும் நன்றே முதுவருள்***
***முந்து கிளவாச் செறிவு.***

***அறிஞர் அவையிலே முந்திநின்று பேசும்***
***அறியாமை விட்டே அடக்கத்தைக் காக்கும்***
***நெறியொன்றே நன்மை தரும்.***

*குறள் 716:*

***ஆற்றின் நிலைதளர்ந் தற்றே வியன்புலம்***
***ஏற்றுணர்வார் முன்னர் இழுக்கு.***

***அறிஞர் அவையில் பிழையான பேச்சோ***
***நெறியொழுக்கம் வீழ்ந்ததுபோ லாம்.***

*குறள் 717:*

***கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்***
***சொற்றெரிதல் முன்னர் இழுக்கு.***

***அறிஞரின் கல்வித் திறனுக்குச் சான்றோ***
***செறிவான மாசற்ற பேச்சு.***

*குறள் 718:*

***உணர்வ துடையார்முன் சொல்லல் வளர்வதன்***
***பாத்தியுள் நீர்சொரிந் தற்று.***

***பேச்சை உணர்வோர்முன் பேசுவது பாத்தியில்***
***நீரூற்றும் நற்பயன்போ லாம்.***

*குறள் 719:*

***புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்***
***நன்கு செலச்சொல்லு வார்.***

***நல்லோர் அவையிலே பேசும் திறன்படைத்தோர்***
***பொல்லாதோர் முன்தவிர்த்தல் நன்று.***

*குறள் 720:*

***அங்கணத்துள் உக்க அமிழ்தற்றால் தங்கணத்தர்***
***அல்லார்முன் கோட்டி கொளல்.***

***முரண்பட்டோர் கூட்டத்தில் பேசல், கழிவில்***
***அமுதைக் கலந்ததுபோ லாம்.***

## *73 அவையஞ்சாமை*

***குறள் 721:***

***வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்.***

***சொற்பொழி வாற்றலுள்ளோர் பேச்சில் தனைமறந்தும்
குற்றமற்ற சொல்சொல்லார் கூறு.***

***குறள் 722:***

***கற்றாருள் கற்றார் எனப்படுவர் கற்றார்முன்
கற்ற செலச்சொல்லு வார்.***

***கற்றார்முன் கற்றவற்றை ஏற்குமாறு சொல்பவர்
கற்றாரை விஞ்சுபவ ராம்.***

***குறள் 723:***

***பகையகத்துச் சாவார் எளியர் அரியர்
அவையகத் தஞ்சா தவர்.***

***போர்க்களத்திற் கஞ்சார் பலராவார்! பேச்சரங்கில்
பேசுவதற் கஞ்சார் சிலர்.***

***குறள் 724:***

***கற்றார்முன் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருள் மிக்க கொளல்.***

***கற்றவர்முன் கற்றதைச் சொல்லியும் மேற்கொண்டு
கற்றறிந்து கொள்தலும் நன்று.***

***குறள் 725:***
***ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.***

***அவையிலே கேள்வியைச் சந்திக்கும் ஆற்றலுக்குத்
தர்க்கநூல் கற்பது நன்று.***

*குறள் 726:*

***வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடென்***
***நுண்ணவை அஞ்சு பவர்க்கு.***

***போர்க்களத்தில் அஞ்சுவோர்க்கு வாளேன்? அவையஞ்சும்***
***பேர்களுக்கு நூலறிவு ஏன்?***

*குறள் 727:*

***பகையகத்துப் பேடிகை ஒள்வாள் அவையகத்***
***தஞ்சு மவன்கற்ற நூல்.***

***பகைக்கஞ்சும் கோழையின் கைவாளும்***
***கற்றோர்***
***அவைக்கஞ்சும் நூலறிவும் ஒன்று.***

*குறள் 728:*

***பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்***
***நன்கு செலச்சொல்லா தார்.***

***நல்லவையில் சொல்லத் திறனற்றோர்***
***கற்றிருந்தும்***
***எந்தப் பயனுமில்லை சொல்.***

*குறள் 729:*

***கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்தும்***
***நல்லா ரவையஞ்சு வார்.***

***கற்றிருந்தும் நல்லார்முன் பேசப் பயப்படுவோர்***
***கற்காத மானிடர்க்கும் கீழ்.***

***குறள் 730:***

***உளரெனினும் இல்லாரொ டொப்பர் களனஞ்சிக்***
***கற்ற செலச்சொல்லா தார்.***

***கற்றும் அவைக்கேற்பச் சொல்லாதோர் வாழ்ந்திருந்தும்***
***சற்றுமிங்கே வாழாதார்க் கொப்பு.***

---

## *74 நாடு*

***குறள் 731:***

***தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்***
***செல்வருஞ் சேர்வது நாடு.***

***விளைச்சல், நெறியாளர், செல்வந்தர்***
***முறையாய்***
***அமைந்த அமைப்புதான் நாடு.***

***குறள் 732:***

***பெரும்பொருளாற் பெட்டக்க தாகி அருங்கேட்டால்***
***ஆற்ற விளைவது நாடு.***

***வளங்கள், விரும்புகின்ற சூழல், விளைச்சல்***
***நிலைத்திருக்க வாழ்வதே நாடு.***

***குறள் 733:***

***பொறையொருங்கு மேல்வருங்கால் தாங்கி இறைவற்***
***கிறையொருங்கு நேர்வது நாடு.***

***புதிய சுமைகளைத் தாங்கி வரிகள்***
***அரசுக்( கு)***
***அளிக்கும் வளமுடைத்து நாடு.***

*குறள் 734:*

***உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்***
***சேரா தியல்வது நாடு.***

***பசியும் பகையும் பிணியுமற்ற நாடே***
***அகங்குளிர வாழ்கின்ற நாடு.***

*குறள் 735:*

***பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்***
***கொல்குறும்பும் இல்லது நாடு.***

***குழுப்பகை உட்பகை மற்றும் துரோகம்***
***இழைப்பவர் அற்றதே நாடு.***

*குறள் 736:*

***கேடறியாக் கெட்ட இடத்தும் வளங்குன்றா***
***நாடென்ப நாட்டின் தலை.***

***பகைவரால் சீரழிந்த போதும் வளங்கள்***
***குறையாத நாடுதான் நாடு.***

*குறள் 737:*

***இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்***
***வல்லரணும் நாட்டிற் குறுப்பு.***

***ஆழியும் ஆறும் மலையரணும் வான்மழையும்***
***ஈடில்லா நாட்டிற் குறுப்பு.***

*குறள் 738:*

***பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்***
***அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.***

***நோயின்மை, செல்வம், விளைச்சல், மகிழ்ச்சியும்***
***பாதுகாப்பும் நாட்டிற் கழகு.***

***குறள் 739:***

***நாடென்ப நாடா வளத்தன நாடல்ல***
***நாட வளந்தரு நாடு.***

***இயற்கை வளம்நிறைந்த நாடுதான் நாடு!***
***வருந்தி உழைப்பதல்ல சாற்று.***

***குறள் 740:***

***ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே***
***வேந்தமை வில்லாத நாடு.***

***எல்லா வளமிருந்தும் நல்லாட்சி யற்றநாடு***
***ஒன்றுமில்லா நாடென்று சாற்று***

---

## *75 அரண்*

***குறள் 741:***

***ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற்***
***போற்று பவர்க்கும் பொருள்.***

***படையெடுத்துப் போரிடவும், தாக்கும்***
***பகையைத்***
***தடுப்பதற்கும் காப்பே அரண்.***

***குறள் 742:***

***மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்***
***காடும் உடைய தரண்.***

***நீரும் நிலமும் மலையும் நிழற்காடும்***
***சேர்ந்ததே நாட்டுக் கரண்.***

*குறள் 743:*

***உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்***
***அமைவரண் என்றுரைக்கும் நூல்.***

***உயரம், அகலம், உறுதி, அருமை***
***அரணுக் கிலக்கணம் சாற்று.***

*குறள் 744:*

***சிறுகாப்பிற் பேரிடத்த தாகி உறுபகை***
***ஊக்கம் அழிப்ப தரண்.***

***காக்கும் இடம்சிறிதாய் உட்புறம் பேரிடமாய்***
***தாக்கும் பகையஞ்சும் கோலத்தை ஏந்துகின்ற***
***காட்சியைக் கொண்ட தரண்.***

*குறள் 745:*

***கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி அகத்தார்***
***நிலைக்கெளிதாம் நீர தரண்.***

***பகைவர்க் கரிதாய், உணவுளதாய்,***
***உள்ளே***
***படைகளுக்கும் பாதுகாப்பாய் உள்ள***
***வசதிகள் கொண்ட தரண்.***

*குறள் 746:*

***எல்லாப் பொருளும் உடைத்தா யிடத்துதவும்***
***நல்லா ளுடைய தரண்.***

***போர்ப்பகையைச் சந்திக்க ஏற்ற பொருள்வகைகள்,***
***ஆள்வலிமை கொண்ட தரண்.***

*குறள் 747:*

*முற்றியும் முற்றா தெறிந்தும் அறைப்படுத்தும்*
*பற்றற் கரிய தரண்.*

*முற்றுகை இட்டோ, இடாமலோ எப்பகையும்*
*பற்றற் கரிய தரண்.*

*குறள் 748:*

*முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்*
*பற்றியார் வெல்வ தரண்.*

*முற்றுகை இட்டாலும் உள்ளிருந்து போர்ப்பகையை*
*வெல்வதற் கேற்ற தரண்.*

*குறள் 749:*

*முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து*
*வீறெய்தி மாண்ட தரண்.*

*உள்ளிருந்து போர்ப்பகையைச் சந்தித்து வெற்றிகொள்ளும்*
*தற்காப்பைக் கொண்ட தரண்.*

*குறள் 750:*

*எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி*
*இல்லார்கண் இல்ல தரண்.*

*எல்லாச் சிறப்பிருந்தும் கோட்டைக்குள் வீரராக*
*இல்லையென்றால் என்னபயன்? சொல்.*

---

## *76 பொருள் செயல்வகை*

*குறள் 751:*

*பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்*
*பொருளல்ல தில்லை பொருள்.*

*மதிக்கத் தகாதவரைக் கூட மனிதன்*
*மதிப்பளிக்க வைத்தல் பொருள்.*

*குறள் 752:*

***இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை***
***எல்லாரும் செய்வர் சிறப்பு.***

***பணமில்லை என்றால் இகழ்வார்! வாழ்வில்***
***பணமிருந்தால் செய்வார் சிறப்பு.***

*குறள் 753:*

***பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்***
***எண்ணிய தேயத்துச் சென்று.***

***பொருளோ ஒளிவிளக்காம்! எவ்விடத்தும் சென்றே***
***இருளினை நீக்கும் உணர்.***

*குறள் 754:*

***அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து***
***தீதின்றி வந்த பொருள்.***

***அறவழியில் ஈட்டிய செல்வமோ இன்பம்,***
***அறத்தை வழங்குமென்று சாற்று.***

*குறள் 755:*

***அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்***
***புல்லார் புரள விடல்.***

***அருளையும் அன்பையும் மீறிவந்த செல்வம்***
***பெருஞ்செல்வம் என்றாலும் நீக்கு.***

*குறள் 756:*

***உறுபொருளும் உல்கு பொருளுந்தன் ஒன்னார்த்***
***தெறுபொருளும் வேந்தன் பொருள்.***

***சுங்கப் பொருளும் வரிப்பொருளும்  தெவ்வர்கள்***
***தந்தபொருள் ஆட்சிக் குரித்து.***

*குறள் 757:*

***அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்***
***செல்வச் செவிலியால் உண்டு.***

***அன்பென்னும் தாயின் அருள்குழந்தை தான்வளரும்***
***செல்வச் செவிலியால் தான்.***

*குறள் 758:*

***குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்***
***றுண்டாகச் செய்வான் வினை.***

***கைப்பொருள் கொண்டு செயல்செய்தல் யானைப்போர்***
***குன்றேறி பார்ப்பதுபோ லாம்.***

*குறள் 759:*

***செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்***
***எஃகதனிற் கூரிய தில்.***

***உழைத்துப் பொருள்சேர்க்கும் பண்பான வாழ்வில்!***
***பகைச்செருக்கின் வேரறுக்கும் ஆயுதம் இங்கே***
***பொருளின்றி வேறில்லை யே.***

*குறள் 760:*

***ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்***
***ஏனை இரண்டும் ஒருங்கு.***

***பொருள்களை நேர்வழியில் சேர்த்தால் அறமும்***
***மகிழ்வளிக்கும் இன்பமும் சேரும் எளிதாய்!***
***அகங்குளிர வாழலாம் சாற்று.***

---

## *77 படைமாட்சி*

***குறள் 761:***

***உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்***
***வெறுக்கையுள் எல்லாம் தலை.***

***எல்லாப் படைகளுடன் எந்தத் தடைகளையும்***
***வெல்லும் படைகொண்ட வேந்தனுக்கோ அச்செல்வம்***
***செல்வத்துள் எல்லாம் சிறப்பு.***

***குறள் 762:***

***உலைவிடத் தூறஞ்சா வன்கண் தொலைவிடத்துத்***
***தொல்படைக் கல்லால் அரிது.***

***படைவலிமை குன்றினாலும் அஞ்சாமல் நிற்கும்***
***பெருமையோ என்றும் படைப்பயிற்சி ஏற்ற***
***அருமையான வீரருக்கே உண்டு.***

***குறள் 763:***

***ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை***
***நாகம் உயிர்ப்பக் கெடும்.***

***கடல்போல் எலிகள் முழங்கினாலும் நாகம்***
***படமெடுத்தால் ஓடிவிடும் சாற்று.***

***குறள் 764:***

***அழிவின் றறைபோகா தாகி வழிவந்த***
***வன்க ணதுவே படை.***

***வெல்ல முடியாத சூழ்ச்சியை ஏற்காத***
***நற்படையே மெய்ப்படை யாம்.***

*குறள் 765:*

***கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்நிற்கும்
ஆற்ற லதுவே படை.***

***உயிர்போகும் என்றாலும் போரிடும் வீரம்
வலிமைக்குச் சான்றாகும் சாற்று.***

*குறள் 766:*

***மறமானம் மாண்ட வழிச்செலவு தேற்றம்
எனநான்கே ஏமம் படைக்கு.***

***வீரமும் மானமும் நன்னடத்தை போர்த்தெளிவும்
சேர்ந்த படையே சிறப்பு.***

*குறள் 767:*

***தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்கும் தன்மை அறிந்து.***

***போரில் முதல்படையை வெற்றிகொண்டால் போர்வெற்றி
காணும் படைவலிமை யால்.***

*குறள் 768:*

***அடல்தகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும்.***

***படைத்திறன் தாங்குமாற்றல் இல்லை எனினும்
படைத்தோற்றம்  கூட்டும் சிறப்பு.***

*குறள் 769:*

***சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும்***
***இல்லாயின் வெல்லும் படை.***

***படைக்குறைவு, ஏழ்மை, வெறுப்பற்ற சூழல்***
***படைவெற்றி காணும் உணர்.***

*குறள் 770:*

***நிலைமக்கள் சால உடைத்தெனினும் தானை***
***தலைமக்கள் இல்வழி இல்.***

***படைவீரர் உண்டு! படைத்தலைமை இன்றேல்***
***படைகளால் என்னபயன் சொல்?***

---

## *78 படைச்செருக்கு*

*குறள் 771:*

***என்னைமுன் நில்லன்மின் தெவ்விர் பலரென்னை***
***முன்னின்று கல்நின் றவர்.***

***என்மன்னர் முன்வந்தே போர்செய்தல் நல்லதல்ல!***
***வந்தால் நடுகல்தான் சொல்.***

*குறள் 772:*

***கான முயலெய்த அம்பினில் யானை***
***பிழைத்தவேல் ஏந்தல் இனிது.***

***முயலொன்றை வீழ்த்துவதைக் காட்டிலும் யானை***
***தவறிய வேலிங்கே மேல்.***

*குறள் 773:*

***பேராண்மை என்ப தறுகனொன் றுற்றக்கால்***
***ஊராண்மை மற்றதன் எஃகு.***

***பகைவருக் கஞ்சாமை ஆண்மை! அந்தப்***
***பகைவர் துயர்தீர்த்தல் பேராண்மை என்பர்!***
***பகைவரையும் காத்தலே பண்பு.***

*குறள் 774:*

***கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்***
***மெய்வேல் பறியா நகும்.***

***கைவேலை யானைமேல் வீசிவிட்டே தன்னுடலில்***
***தைத்தவேல் பார்த்தான் நகைத்து.***

*குறள் 775:*

***விழித்தகண் வேல்கொண் டெறிய அழித்திமைப்பின்***
***ஓட்டன்றோ வன்க ணவர்க்கு.***

***பகைவரின் வேல்வரும் நேரம், இமைத்தால்***
***புறமுதுகிட் டோடியதற் கொப்பு.***

*குறள் 776:*

***விழுப்புண் படாதநாள் எல்லாம் வழுக்கினுள்***
***வைக்குந்தன் நாளை எடுத்து.***

***போரில் விழுப்புண்கள் அற்றநாளை எண்ணி***
***வீரனோ வீணென்பான் சாற்று.***

*குறள் 777:*

***சுழலும் இசைவேண்டி வேண்டா உயிரார்***
***கழல்யாப்புக் காரிகை நீர்த்து.***

***புகழ்நிலைக்க எண்ணி உயிர்விடும் வீரர்***
***கழலணிதல் என்றும் அழகு.***

*குறள் 778:*

***உறினுயிர் அஞ்சா மறவர் இறைவன்***
***செறினுஞ்சீர் குன்றல் இலர்.***

***போர்க்களத்திற் கஞ்சாதோன்  வேந்தன் சினந்தாலும்***
***வீரமாய் முன்செல்வான் சொல்.***

*குறள் 779:*

***இழைத்த திகவாமைச் சாவாரை யாரே***
***பிழைத்த தொறுக்கிற் பவர்.***

***சூளுரைத்த வண்ணமே போர்க்களத்தில் மாய்ந்தோரை***
***யாரும் இழித்துரைப்பா ரோ?***

*குறள் 780:*

***புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா***
***டிரந்துகோட் டக்க துடைத்து.***

***காத்தவன் கண்கலங்க போர்க்களச் சாவினை***
***கேட்டுப் பெறுதல் புகழ்.***

---

## *79 நட்பு*

*குறள் 781:*

***செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல்***
***வினைக்கரிய யாவுள காப்பு.***

***நட்பை வளர்ப்பதுபோல் நற்செயல் இங்கில்லை!***
***அத்தகைய காப்பில்லை வேறு.***

*குறள் 782:*

***நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்***
***பின்னீர பேதையார் நட்பு.***

***வளர்பிறைபோல்  மேலோரின் நட்பு! தேயும்***
***தளர்பிறைபோல் கீழோரின் நட்பு.***

*குறள் 783:*

***நவில்தொறும் நூனயம் போலும் பயில்தொறும்***
***பண்புடை யாளர் தொடர்பு.***

***படிக்கப் படிக்க மகிழ்ச்சிதரும் நூல்போல்***
***பழகப் பழக மகிழ்ச்சிதரும் சான்றோர்***
***தொடர்புதான் நாளும் வளர்ந்து.***

*குறள் 784:*

***நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்***
***மேற்சென் றிடித்தற் பொருட்டு.***

***சிரித்து மகிழ்வது நட்பல்ல! தப்பை***
***இடித்துரைத்துக் காப்பதே நட்பு.***

*குறள் 785:*

***புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்***
***நட்பாங் கிழமை தரும்.***

***முன்பே தெரிந்திருக்க வேண்டாம்!உணர்வுகளால்***
***ஒன்றிய தன்மையே நட்பு.***

*குறள் 786:*

***முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்***
***தகநக நட்பது நட்பு.***

***முகச்சிரிப்பின் வேடமல்ல நட்புதான்! அன்பால்***
***அகம்மலரும் மெய்க்கோலம்  நட்பு.***

*குறள் 787:*

***அழிவி னவைநீக்கி ஆறுய்த் தழிவின்கண்***
***அல்லல் உழப்பதாம் நட்பு.***

***தீங்கைத்  தடுத்தேதான் நல்வழி காட்டியும்***
***வாட்டுகின்ற துன்பத்தில் உற்றதுணை யாகியும்***
***காக்கின்ற பண்புதான் நட்பு.***

*குறள் 788:*

***உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே***
***இடுக்கண் களைவதாம் நட்பு.***

***உடைநழுவும் போது கரம்காப்ப தைப்போல்***
***படும்துன்பம் காப்பதே நட்பு.***

*குறள் 789:*
***நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி***
***ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.***

***மாறுபாடு கொள்ளாமல் நண்பனுக்குப் பக்கபல***
***மாகிவாழ்தல் நட்பின் சிறப்பு.***

*குறள் 790:*

***இனையர் இவரெமக் கின்னம்யாம் என்று***
***புனையினும் புல்லென்னும் நட்பு.***

***நண்பர்கள் மாறிமாறி பண்பைப் புகழ்ந்துரைத்தால்***
***நட்பின் பெருமைக் கிழுக்கு.***

## *80 நட்பாராய்தல்*

*குறள் 791:*

***நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்***
***வீடில்லை நட்பாள் பவர்க்கு.***

***ஆராய்ந்து பார்க்காமல் நட்பினை ஏற்பதுபோல்***
***கேடுகள் வேறில்லை சாற்று.***

*குறள் 792:*

***ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை***
***தான்சாம் துயரம் தரும்.***

***ஆராய்ந் தறியாத  நட்பிலே வேரோடும்***
***சாவுக் கிணையான கேடு.***

*குறள் 793:*

***குணனும் குடிமையும் குற்றமும் குன்றா***
***இனனும் அறிந்தியாக்க நட்பு.***

***பண்பு, குடும்பத்தின் பின்னணி, குற்றங்கள்,***
***சுற்றமறிந்து நட்பினைக் கொள்.***

*குறள் 794:*

***குடிப்பிறந்து தன்கண் பழிநாணு வானைக்***
***கொடுத்தும் கொளல்வேண்டும் நட்பு.***

***பழிக்கஞ்சி  தீயசெயல்  செய்யாதோர் நட்பை***
***விலைகொடுத் தேனும் வளர்.***

*குறள் 795:*
***அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய***
***வல்லார்நட் பாய்ந்து கொளல்.***

***தவறெனின் கண்டித் தழவைப்போர் நட்பை***
***உயர்வென எண்ணியேற்றுக் கொள்.***

*குறள் 796:*

***கேட்டினும் உண்டோர் உறுதி கிளைஞரை***
***நீட்டி அளப்பதோர் கோல்.***

***கேட்டிலும் நன்மையுண்டு! நண்பரின் மெய்த்தோற்றம்***
***காட்டும் அளவுகோ லஃது.***

*குறள் 797:*

***ஊதியம் என்ப தொருவற்குப் பேதையார்***
***கேண்மை ஒரீஇ விடல்.***

***கீழ்மக்கள் நட்பைத் தவிர்ப்பதே நல்லது!***
***வாழ்க்கையின் நற்பயனாம் சாற்று.***

*குறள் 798:*

***உள்ளற்க உள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க***
***அல்லற்கண் ஆற்றறுப்பார் நட்பு.***

***ஊக்கம் சிதைக்கும் செயல்வேண்டாம்! துன்பத்தில்***
***போக்குகாட்டும் நட்பை விலக்கு.***

*குறள் 799:*

***கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை***
***உள்ளினும் உள்ளஞ் சுடும்.***

***துன்பத்தில் கைவிட்டுச் சென்றவரைச் சாம்போதும்***
***எண்ணினால் உள்ளம் சுடும்.***

*குறள் 800:*

***மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும***
***ஒருவுக ஒப்பிலார் நட்பு.***

***மாசற்றோர் நட்பை வளர்க்கவேண்டும்! மாசுள்ள***
***நீசரின் நட்பை விலக்கு.***

## *81 பழைமை*

***குறள் 801:***

***பழைமை எனப்படுவ தியாதெனின் யாதும்***
***கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.***

***பழகிய  நண்பர்கள் நட்புறவைக் காத்தல்***
***பழைமை எனப்படும் சாற்று.***

***குறள் 802:***

***நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்***
***குப்பாதல் சான்றோர் கடன்.***

***உரிமையே நட்பின் உறுப்பாகும்! சான்றோர்***
***மகிழ்தல் கடமையென்று சாற்று.***

***குறள் 803:***

***பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை***
***செய்தாங் கமையாக் கடை.***

***நண்பர் உரிமையுடன் செய்ததை ஏற்காத***
***நட்பினால் என்னபயன் கூறு?***

***குறள் 804:***

***விழைதகையான் வேண்டி இருப்பர் கெழுதகையாற்***
***கேளாது நட்டார் செயின்.***

***கேட்காமல் நண்பன் உரிமையில் செய்தாலும்***
***நாட்டமுடன் ஏற்பார் உவந்து.***

*குறள் 805:*

***பேதைமை ஒன்றோ பெருங்கிழமை என்றுணர்க
நோதக்க நட்டார் செயின்.***

***உரிமைதான் என்றோ அறியாமை என்றோ
கருதவேண்டும் நட்பில் வருந்துமாறு செய்தால் !
பெருந்தன்மைப் பண்புதான் நட்பு.***

*குறள் 806:*

***எல்லைக்கண் நின்றார் துறவார் தெலைவிடத்தும்
தொல்லைக்கண் நின்றார் தொடர்பு.***

***நட்புடன் எல்லையில் வாழ்வோர் கெடுதிகள்
நட்பினால் வந்தாலும் நட்பைத் துறக்காமல்
எப்படியும் ஏற்பார் தொடர்ந்து.***

*குறள் 807:*

***அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.***

***நண்பர் அழிவையே செய்தாலும் நட்பையெண்ணி
அன்பை விலக்கமாட்டார் செப்பு.***

*குறள் 808:*

***கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்கம் நட்டார் செயின்.***

***மற்றவர்கள் சொல்லியும் நம்பாத நண்பருக்குக்
குற்றத்தைச் செய்தால் அப்பிழை செய்தவர்க்கு
அந்தநாள் நன்னாளாம் கூறு.***

*குறள் 809:*

***கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை***
***விடாஅர் விழையும் உலகு.***

***தொய்வின்றி நன்கு பழகிவரும் நட்பினை***
***இவ்வுலகம் போற்றும் புகழ்ந்து.***

*குறள் 810:*

***விழையார் விழையப் படுப பழையார்கண்***
***பண்பின் தலைப்பிரியா தார்.***

***நண்பர் பிழைசெய்த போதும்  பகையின்றி***
***நட்பைத் தொடர்பவரைப் பார்த்துப் பகைவரும்***
***முற்றும் விரும்புவார் கூறு.***

---

## *82 தீ நட்பு*

*குறள் 811:*

***பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை***
***பெருகலிற் குன்றல் இனிது.***

***பரபரப் பான உறவெல்லாம் பொய்யே!***
***வளர்வதினும் தேய்தலே நன்று.***

*குறள் 812:*

***உறினட் டறினொரூஉம் ஒப்பிலார் கேண்மை***
***பெறினும் இழப்பினும் என்.***

***தேவையா? ஒட்டுவார்! இல்லையா? வெட்டுவார்!***
***தேவையில்லை இத்தகைய நட்பு.***

*குறள் 813:*

***உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது***
***கொள்வாரும் கள்வரும் நேர்.***

***கள்வர், விலைமாது, பயன்பார்க்கும் தன்னல***
***நண்பர்கள் மூவரும் ஒன்று.***

*குறள் 814:*

***அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா அன்னார்***
***தமரின் தனிமை தலை.***

***போரில் கவிழ்க்கும் குதிரையன்ன நண்பரோ***
***தீது! தனிமையே நன்று.***

*குறள் 815:*

***செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை***
***எய்தலின் எய்தாமை நன்று.***

***நல்லது செய்தாலும் பாதுகாக்கும் உள்ளமற்ற***
***நட்பை விலக்குதல்  நன்று.***

*குறள் 816:*

***பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்***
***ஏதின்மை கோடி உறும்.***

***பேதையின் நட்பைக் காட்டிலும் பண்பான***
***சான்றோர் பகைமனம்  மேல்.***

*குறள் 817:*

***நகைவகைய ராகிய நட்பின் பகைவரால்***
***பத்தடுத்த கோடி உறும்.***

***சிரித்துக் கெடுக்கின்ற நட்பிங்கே இன்பம்***
***அளிப்பதைக் காட்டிலும் வன்பகையின் கோடிகோடித் துன்பமே***
***எவ்வளவோ மேல்.***

*குறள் 818:*

***ஒல்லும் கருமம் உடற்று பவர்கேண்மை***
***சொல்லாடார் சோர விடல்.***

***நம்மால் முடிவதைக் கூட முடியாமல்***
***செய்துவிடும் நட்பைத் தவிர்.***

*குறள் 819:*

***கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு***
***சொல்வேறு பட்டார் தொடர்பு.***

***சொல்லும் செயலும் முரண்படும் நண்பரால்***
***தொல்லை கனவிலும் தான்.***

*குறள் 820:*

***எனைத்துங் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ***
***மன்றிற் பழிப்பார் தொடர்பு.***

***வீட்டில் புகழ்ந்துரைத்து நாட்டில் பலர்முன்னே***
***தூற்றுவோர் நட்பை விலக்கு.***

---

## *83 கூடா நட்பு*

*குறள் 821:*

***சீரிடங் காணின் எறிதற்குப் பட்டடை***
***நேரா நிரந்தவர் நட்பு.***

***நட்பிலே  வேடமேந்தும் மாந்தர்கள் வாய்ப்புவந்தால்***
***வெட்டுகின்ற பட்டடைக் கல்.***

*குறள் 822:*

***இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்***
***மனம்போல வேறு படும்.***

***நண்பர்போல் நாளும் நடித்துப் பழகுவோர்***
***கள்ளமனம்  கொண்டவிலை மாது.***

*குறள் 823:*

***பலநல்ல கற்றக் கடைத்து மனநல்லர்***
***ஆகுதல் மாணார்க் கரிது.***

***நல்லநூல்கள்  கற்றும் பகைக்குணம் கொண்டவர்கள்***
***நல்லவ ராதல் அரிது.***

*குறள் 824:*

***முகத்தின் இனிய நகாஅ அகத்தின்னா***
***வஞ்சரை அஞ்சப் படும்.***

***முகத்தில் சிரிப்பும் அகத்திலே வஞ்சம்***
***உடையோ ரிடம்பழக அஞ்சு.***

*குறள் 825:*

***மனத்தின் அமையா தவரை எனைத்தொன்றும்***
***சொல்லினால் தேறற்பாற் றன்று.***

***உள்ளத்தால் நட்பின்றி  உள்ளவரின் சொற்களை***
***நம்புதல் என்றுமே தீது.***

*குறள் 826:*

***நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்***
***ஒல்லை உணரப் படும்.***

***பகைவரோ நண்பரைப்போல் பேசினாலும் சொல்லின்***
***சிறுமை வெளிப்படும் இங்கு.***

*குறள் 827:*

***சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்***
***தீங்கு குறித்தமை யான்.***

***பகைவரின் சொல்வணக்கம் வில்வணக்கம் போல***
***கெடுதி விளைவிக்கும் காண்.***

*குறள் 828:*

***தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்***
***அழுதகண் ணீரும் அனைத்து.***

***பகைவணங்கும் கைகளுக்குள் ஆயுதம் உண்டு!***
***இமைநனைக்கும் கண்ணீரின் பின்னே சதியின்***
***அமைப்பிருக்கும் என்றே உணர்.***

*குறள் 829:*

***மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து***
***நட்பினுட் சாப்புல்லற் பாற்று.***

***புறத்தில் புகழ்ந்தே அகத்தில் இகழும்***
***பகைவரிடம் அப்படியே நாமும் உளத்தே***
***தவிர்த்திடுவோம் நட்பை நடித்து.***

*குறள் 830:*

***பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்***
***டகநட் பொரீஇ விடல்.***

***பகைவரே நண்பராக நேர்ந்தால் முகத்தில்***
***படரலாம் நட்புதான்! உள்ளம் அதையும்***
***விடுவது என்றுமே நன்று.***

---

## *84 பேதைமை*

***குறள் 831:***

***பேதைமை என்பதொன் றியாதெனின் ஏதங்கொண்***
***டூதியம் போக விடல்.***

***தீமையை ஏற்றேதான் நன்மையைக் கைவிடுதல்***
***பேதைமை என்றே உணர்.***

***குறள் 832:***

***பேதைமையுள் எல்லாம் பேதைமை காதன்மை***
***கையல்ல தன்கண் செயல்.***

***தன்னால் இயலாத ஒன்றினைச் செய்வதே***
***பேதைமையுள் பேதைமையாம் சாற்று.***

***குறள் 833:***

***நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்***
***பேணாமை பேதை தொழில்.***

***தீமைக்கு நாணாமை ஏற்றதை நாடாமை***
***பாமணக்கும் அன்பின்மை காப்பதைக் காவாமை***
***பேதை இயல்பாகும் சாற்று.***

***குறள் 834:***

***ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்***
***பேதையிற் பேதையார் இல்.***

***கற்றும் உணர்ந்தும் பிறர்க்குரைத்தும்***
***கற்றதைப்பின்***
***பற்றாமை பேதையா ராம்.***

*குறள் 835:*

***ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்***
***தான்புக் கழுந்தும் அளறு.***

***இப்பிறவி வாழ்வில் ஏழு தலைமுறைத்***
***துன்பங்கள் பேதைக்கே உண்டு.***

*குறள் 836:*

***பொய்படும் ஒள்றோ புனைபூணும் கையறியாப்***
***பேதை வினைமேற் கொளின்.***

***செய்வதைச் செய்யத் தெரியாமல்***
***பேதையோ***
***செய்துவிட்டுக் கெட்டழிவான் சாற்று.***

*குறள் 837:*

***ஏதிலார் ஆரத் தமர்பசிப்பர் பேதை***
***பெருஞ்செல்வம் உற்றக் கடை.***

***பேதையின் செல்வத்தால் மற்றவர்க்கே நன்மையாம்!***
***வாடுவார் சுற்றம் துடித்து.***

*குறள் 838:*

***மையல் ஒருவன் களித்தற்றாற் பேதைதன்***
***கையொன் றுடைமை பெறின்.***

***பேதைக்குச் செல்வம் கிடைத்துவிட்டால்***
***பித்தனோ***
***போதையில் துள்ளுதல்போல் தான்.***

*குறள் 839:*
***பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண்***
***பீழை தருவதொன் றில்.***

***அறிவிலியின் நட்போ இனிமைதான்! அந்தப்***
***பிரிவிலே துன்பமில்லை கூறு.***

*குறள் 840:*

***கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்றாற் சான்றோர்***
***குழாஅத்துப் பேதை புகல்.***

***காலைப் படுக்கையில் வைத்ததுபோல் பேதையோ***
***சான்றோர் அவைநுழைத லாம்.***

---

*85 புல்லறிவாண்மை*

*குறள் 841:*

***அறிவின்மை அன்மையுள் இன்மை பிறிதின்மை***
***இன்மையா வையா துலகு.***

***இல்லாமை என்றால் அறிவில்லா தன்மைதான்!***
***இல்லாமை அல்ல பிற.***

*குறள் 842:*

***அறிவிலான் நெஞ்சுவந் தீதல் பிறிதியாதும்***
***இல்லை பெறுவான் தவம்.***

***பொருளை அறிவிலார் தந்து மகிழ்ந்தால்***
***பொருள்பெற்றோர் பெற்ற பேறு.***

*குறள் 843:*

***அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை***
***செறுவார்க்கும் செய்தல் அரிது.***

***அறிவிலி ஏற்படுத்திக் கொள்கின்ற துன்பம்***
***செறுபகையும் ஏற்படுத் தாது.***

*குறள் 844:*
***வெண்மை எனப்படுவ தியாதெனின் ஒண்மை***
***உடையம்யாம் என்னும் செருக்கு.***

***தன்னையே தானே அறிவுடையோன் என்றெண்ணும்***
***தன்மை அறியாமை யாம்.***

*குறள் 845:*

***கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற***
***வல்லதூஉம் ஐயம் தரும்.***

***கல்லாத ஒன்றையும் கற்றது போல்நடித்தால்***
***கற்றதையும் நம்பா துலகு.***

*குறள் 846:*

***அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயின்***
***குற்றம் மறையா வழி.***

***தன்குற்றம் நீக்காமல் மேனியை ஆடையால்***
***இங்கே மறைத்தல் இழிவு.***

*குறள் 847:*

***அருமறை சோரும் அறிவிலான் செய்யும்***
***பெருமிறை தானே தனக்கு.***

***அறவுரையை ஏற்காத புல்லறி வாளன்***
***இடரில் துடிப்பான் வலிந்து.***

*குறள் 848:*

***ஏவவுஞ் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்***
***போஒம் அளவுமோர் நோய்.***

***சொன்னாலும் கேட்கமாட்டான்! தன்னாலும் செய்யமாட்டான்!***
***என்றுமிந்தத் தன்மையே நோய்.***

*குறள் 849:*
***காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்***
***கண்டானாம் தான்கண்ட வாறு.***

***தானறிந்த ஒன்றே சரியென்போர் மற்றவர்கள்***
***தாமறிந்த ஒன்றினைச் சொன்னாலும் ஏற்கமாட்டார்!***
***வீணாகும் அம்முயற்சி தான்.***

*குறள் 850:*

***உலகத்தார் உண்டென்ப தில்லென்பான் வையத்***
***தலகையா வைக்கப் படும்.***

***இவ்வுலகம் உண்டென்று சொல்வதை இல்லையென்பார்***
***புல்லறி வாளராவார்! சாற்று.***

---

## *86 இகல்*

*குறள் 851:*

***இகலென்ப எல்லா உயிர்க்கும் பகலென்னும்***
***பண்பின்மை பாரிக்கும் நோய்.***

***இணக்கம் சுணக்கமானால் ஏற்படும் நோயே***
***மனவேறு பாடாகும் செப்பு.***

*குறள் 852:*

***பகல்கருதிப் பற்றா செயினும் இகல்கருதி***
***இன்னாசெய் யாமை தலை.***

***வெறுப்புடன் தீங்குசெய்த போதிலும்***
***துன்பம்***
***துரும்பளவும் செய்யாமை பண்பு.***

*குறள் 853:*

***இகலென்னும் எவ்வநோய் நீக்கின் தவலில்லாத்***
***தாவில் விளக்கம் தரும்.***

***வேறுபாடு நோய்தன்னை நீக்கிவிட்டால் நீடுபுகழ்***
***வாழ்க்கையில் எப்படியும் உண்டு.***

*குறள் 854:*

***இன்பத்துள் இன்பம் பயக்கும் இகலென்னும்***
***துன்பத்துள் துன்பங் கெடின்.***

***வேறுபாடே துன்பந்தான்! அத்துன்பத்தை நீக்கினால்***
***ஈடற்ற இன்பமே வாழ்வு.***

*குறள் 855:*

***இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே***
***மிகலூக்கும் தன்மை யவர்.***

***உள்ளத்தில் வேறுபாடு தோன்றினால் நீக்குவோரை***
***வெல்ல முடிந்தவர் யார்?***

*குறள் 856:*

***இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை***
***தவலும் கெடலும் நணித்து.***

***மாறுபாடு நல்லதென்றே எண்ணுவோர் வாழ்க்கையோ***
***கேடுசூழக் கெட்டுவிடும் சொல்.***

*குறள் 857:*

***மிகல்மேவல் மெய்ப்பொருள் காணார் இகல்மேவல்***
***இன்னா அறிவி னவர்.***

***மாறுபாட்டை ஏற்கும் அறிவிலிகள் மெய்ப்பொருள்***
***மேன்மையை ஏற்கமாட்டார் இங்கு.***

*குறள் 858:*

***இகலிற் கெதிர்சாய்தல் ஆக்கம் அதனை***
***மிகலூக்கின் ஊக்குமாங் கேடு.***

***மனத்திலே மாறுபாட்டை நீக்கினால் ஆக்கம்!***
***மனத்தில் வளர்த்தாலோ கேடு.***

***குறள் 859:***

***இகல்காணான் ஆக்கம் வருங்கால் அதனை***
***மிகல்காணும் கேடு தரற்கு.***

***நன்மைகள் வாழ்க்கையில்  வரும்போது மாறுபாட்டை***
***எண்ணமாட்டார்! கேடுகள் சூழும் பொழுதிலே***
***எண்ணுவார் வேறுபாட்டைத் தான்.***

***குறள் 860:***

***இகலானாம் இன்னாத எல்லாம் நகலானாம்***
***நன்னயம் என்னும் செருக்கு.***

***மாறுபாடு துன்பம் அளிக்கும்! இணக்கமான***
***சூழல் பெருமகிழ்ச்சி தான்.***

---

## *87 பகைமாட்சி*

***குறள் 861:***

***வலியார்க்கு மாறேற்றல் ஓம்புக ஓம்பா***
***மெலியார்மேல் மேக பகை.***

***வலிமை படைத்தவரா போர்செய்ய வேண்டாம்!***
***வலிமையற்றோர் என்றால் எதிர்.***

***குறள் 862:***

***அன்பிலன் ஆன்ற துணையிலன் தான்றுவ்வான்***
***என்பரியும் ஏதிலான் துப்பு.***

***அன்பின்றி, தக்க வலுவின்றி, ஆற்றலின்றி***
***உள்ளோர் பகைவெல்தல் ஏது?***

*குறள் 863:*

***அஞ்சும் அறியான் அமைவிலன் ஈகலான்***
***தஞ்சம் எளியன் பகைக்கு.***

***அஞ்சுவதற் கஞ்சாமல் ஒற்றுமையாய் வாழாமல்***
***நெஞ்சில் இரக்கமும் இல்லாமல் வாழ்பவனை***
***வெம்பகை வெல்தல் எளிது.***

*குறள் 864:*

***நீங்கான் வெகுளி நிறையிலன் எஞ்ஞான்றும்***
***யாங்கணும் யார்க்கும் எளிது.***

***கோபத்தைக் கைவிடாத, காப்பதைக் காக்காமல்***
***ஆள்வோரை வெல்தல் எளிது.***

*குறள் 865:*

***வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்***
***பண்பிலன் பற்றார்க் கினிது.***

***நல்வழியில் செல்லாமல் நல்லதைச் செய்யாமல்***
***எப்பழிக்கும் அஞ்சாமல் பண்பின்றி வாழ்பவனை***
***எப்பகையும் வெல்தல் எளிது.***

*குறள் 866:*

***காணாச் சினத்தான் கழிபெருங் காமத்தான்***
***பேணாமை பேணப் படும்.***

***எப்போதும் சீறுவோனை பேராசைக் கொண்டவனைச்***
***சுற்றும் பகைவெல்லும் சொல்.***

*குறள் 867:*

***கொடுத்துங் கொளல்வேண்டும் மன்ற அடுத்திருந்து***
***மாணாத செய்வான் பகை.***

***உடனிருந்தே தாறுமாறாய்ச் செய்வோர்***
***பகையைப்***
***பொருள்கொடுத்தும் பெற்றுக்கொள் இங்கு.***

*குறள் 868:*

***குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்***
***கினனிலனாம் ஏமாப் புடைத்து.***

***பண்புமின்றி, குற்றம் பலபுரிந்தோர் எத்துணையும்***
***இன்றியே சீரழிவார் தோற்று.***

*குறள் 869:*

***செறுவார்க்குச் சேணிகவா இன்பம் அறிவிலா***
***அஞ்சும் பகைவர்ப் பெறின்.***

***அறிவிலியாய் கோழையாய் இங்கே பகைவர்***
***அமைந்துவிட்டால் என்றும் எதிரணிக்கு வெற்றி***
***நிரந்தரமாய் மாறிடும் செப்பு.***

*குறள் 870:*

***கல்லான் வெகுளும் சிறுபொருள் எஞ்ஞான்றும்***
***ஒல்லானை ஒல்லா தொளி.***

***கற்கா தவனைப் பகைக்கும் செயல்செய்ய***
***முற்படாத மாந்தரிடம் எந்தப் புகழ்மகுடம்***
***தங்கித் தழைக்குமென்று சாற்று?***

---

## *88 பகைத்திறம் தெரிதல்*

***குறள் 871:***

***பகையென்னும் பண்பி லதனை ஒருவன்***
***நகையேயும் வேண்டற்பாற் றன்று.***

***பகையுணர்வை இங்கே விளையாட்டாய்க் கூட***
***புறத்திலே காட்டுதல் தப்பு.***

***குறள் 872:***

***வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க***
***சொல்லேர் உழவர் பகை.***

***வில்லேந்தும் வீரர் பகைகொண்ட போதிலும்***
***சொல்லேந்தும் சான்றோர் பகையைத் தவிர்க்கவேண்டும்!***
***சொல்லின் வலிமை உயர்வு.***

***குறள் 873:***

***ஏமுற் றவரினும் ஏழை தமியனாய்ப்***
***பல்லார் பகைகொள் பவன்.***

***தன்னந் தனியே பகைக்குவித்துப் பார்ப்பவனை***
***என்னசொல்ல? மூடனென்றே சொல்.***

***குறள் 874:***

***பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்***
***தகைமைக்கண் தங்கிற் றுலகு.***

***பகையையும் நட்பாக்கும் பண்பை மதித்தே***
***அகிலமே போற்றும் உணர்.***

*குறள் 875:*

***தன்துணை இன்றால் பகையிரண்டால் தானொருவன்***
***இன்துணையாக் கொள்கவற்றின் ஒன்று.***

***தனக்குத் துணையற்றோர் தங்கள் பகைவர்***
***அணியிரண்டாய் வாழ்ந்தால் ஒன்றைத்***
***துணையாய்த்***
***தனக்கென மாற்றுதல் நன்று.***

*குறள் 876:*

***தேறினுந் தேறா விடினும் அழிவின்கண்***
***தேறான் பகாஅன் விடல்.***

***தனக்கொரு துன்பம் வரும்போது நெருங்கிப்***
***பழகாமல் விட்டு விலகாமல் இங்கே***
***பகைகொண்டு வாழ்தல் சிறப்பு.***

*குறள் 877:*

***நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க***
***மென்மை பகைவர் அகத்து.***

***நண்பரிடம் துன்பத்தைச் சொல்லாதே! நம்குறையை***
***நம்பகைமுன் காட்டாதே நீ.***

*குறள் 878:*

***வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்***
***பகைவர்கண் பட்ட செருக்கு.***

***வழியுணர்ந்து தன்வலியை, தற்காப்பைக் காக்கும்***
***தெளிவின்முன் வன்பகை தூசு.***

*குறள் 879:*

***இளைதாக முள்மரம் கொல்க களையுநர்***
***கைகொல்லும் காழ்த்த இடத்து.***

***முளையிலேயே முள்மரத்தை வெட்டவேண்டும்! என்றும்***
***பகையை வளரும்முன் வீழ்த்து.***

*குறள் 880:*

***உயிர்ப்ப உளரல்லர் மன்ற செயிர்ப்பவர்***
***செம்மல் சிதைக்கலா தார்.***

***பகைவர் செருக்கை அழிக்காதோர், மூச்சு***
***விடுவதற்குள் காண்பார் அழிவு.***

---

## *89 உட்பகை*

*குறள் 881:*

***நிழல்நீரும் இன்னாத இன்னா தமர்நீரும்***
***இன்னாவாம் இன்னா செயின்.***

***நீரும் நிழலும் கெடுதிசெய்தால் தீமையே!***
***சேர்ந்திருக்கும் உற்றார் உறவினரின் பண்பிலே***
***வேரோடும் உட்பகையும் தீது.***

*குறள் 882:*

***வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக***
***கேள்போல் பகைவர் தொடர்பு.***

***வாள்போல் தெரியும் பகைக்கஞ்சத் தேவையில்லை!***
***தோழமையில் உட்பகைக் கஞ்சு.***

*குறள் 883:*

***உட்பகை அஞ்சித்தற் காக்க உலைவிடத்து***
***மட்பகையின் மாணத் தெறும்.***

***உட்பகைக்கோ அஞ்சித்தான் காக்கவேண்டும்! இல்லையேல்***
***மட்கலத்தைச் சீரழிக்கும் வாள்போல்***
***அழித்துவிடும்!***
***உட்பகை வேரறுக்கும் வாள்.***

*குறள் 884:*

***மனமாணா உட்பகை தோன்றின் இனமாணா***
***ஏதம் பலவும் தரும்.***

***நண்பராய்த் தோன்றினாலும் உட்பகையைத் தேங்கவிட்டால்***
***என்றுமே நட்பிற்குக் கேடு.***

*குறள் 885:*

***உறல்முறையான் உட்பகை தோன்றின் இறல்முறையான்***
***ஏதம் பலவும் தரும்.***

***உறவுகளின் உள்ளத்தில் உட்பகை என்றால்***
***இறக்குமட்டும் துன்பந்தான் சொல்.***

*குறள் 886:*

***ஒன்றாமை ஒன்றியார் கட்படின் எஞ்ஞான்றும்***
***பொன்றாமை ஒன்றல் அரிது.***

***ஒன்றாய் இருந்தோரின் உட்பகை குமுறினால்***
***என்றும் அழிவுதான் சொல்.***

*குறள் 887:*

***செப்பின் புணர்ச்சிபோற் கூடினும் கூடாதே***
***உட்பகை உற்ற குடி.***

***பொருந்திய மூடிபோலத் தோன்றினாலும் உள்ளே***
***பொருந்தாதே உட்பகையைத் தேக்கும் உறவு!***
***வருந்தவைத்துப் பார்க்கும் வெடித்து.***

*குறள் 888:*

***அரம்பொருத பொன்போலத் தேயும் உரம்பொரு***
***துட்பகை உற்ற குடி.***

***உட்பகை உள்ள குடும்பம் அரம்தேய்க்க***
***முற்றும் அழியும் இரும்பு.***

*குறள் 889:*

***எட்பக வன்ன சிறுமைத்தே ஆயினும்***
***உட்பகை உள்ளதாங் கேடு.***

***எள்ளின் பிளவாய்ச் சிறிதெனினும், உட்பகை***
***துள்ளவைக்கும் மாபெரும் கேடு.***

*குறள் 890:*

***உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருள்***
***பாம்போ டுடனுறைந் தற்று.***

***உடன்பாடே இல்லாமல் சேர்ந்திருக்கும் வாழ்க்கை***
***குடிசைக்குள் பாம்புடன் போல்***

---

## *90 பெரியாரைப் பிழையாமை*

***குறள் 891:***

***ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்***
***போற்றலுள் எல்லாம் தலை.***

***வல்லவரின் ஆற்றலைத் தூற்றாமல் உள்ளதே***
***நல்லவரைக் காக்கும் நெறி.***

***குறள் 892:***

***பெரியாரைப் பேணா தொழுகிற் பெரியாரால்***
***பேரா இடும்பை தரும்.***

***பெரியாரை வாழ்வில் மதிக்கவேண்டும்!***
***இல்லை,***
***பெரியாரால்  துன்பந்தான் சொல்..***

***குறள் 893:***

***கெடல்வேண்டிற் கேளாது செய்க அடல்வேண்டின்***
***ஆற்று பவர்கண் இழுக்கு.***

***பெரியாரைக் கேட்காமல் செய்தால் கெடுதி!***
***மதியாமல் செய்தால் அழிவு.***

***□ □ நச்□சி.ஆர்.***

***குறள் 894:***

***கூற்றத்தைக் கையால் விளித்தற்றால் ஆற்றுவார்க்***
***காற்றாதார் இன்னா செயல்.***

***ஆற்றலற்றோர் ஆற்றல் படைத்தவர்க்குத்  தீங்கிழைத்தால்***
***ஏற்பார் அழிவை வலிந்து.***

*குறள் 895:*

*யாண்டுச்சென் றியாண்டும் உளராகார் வெந்துப்பின்*
*வேந்து செறப்பட் டவர்.*

*பேரரசின்  கோபத்திற் காளானோர்*
*எங்குசென்ற*
*போதிலும் வாழ்தல் அரிது.*

*குறள் 896:*

*எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்*
*பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.*

*தீயால் சுடப்பட்டோர் தப்பலாம்! மூத்தோரைக்*
*காயப் படுத்தல் அழிவு.*

*குறள் 897:*

*வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னாம்*
*தகைமாண்ட தக்கார் செறின்.*

*பெரியார் சினந்தால், பெருஞ்செல்வம்*
*கொண்டோர்*
*வளங்களால் என்னபயன் செப்பு?*

*குறள் 898:*

*குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு*
*நின்றன்னார் மாய்வர் நிலத்து.*

*குணக்குன்றாய் வாழ்பவரைச் சீரழிப்ப தற்கு*
*நினைத்தாலே போதும் மலைபோல செல்வம்*
*படைத்தோர்க்கோ பேரழிவு உண்டு.*

***குறள் 899:***

***ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.***

***பண்பார்ந்த சான்றோர் சினப்பட்டால் எவ்வரசும்
கண்முன்னே வீழ்ந்து படும்.***

***குறள் 900:***

***இறந்தமைந்த சார்புடையர் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.***

***பண்பாளர் கோபத்திற் காளானால் செல்வந்தர்
என்றாலும் வாழ்தல் அரிது.***

---

## *91 பெண்வழிச்சேறல்*

***குறள் 901:***

***மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளும் அது.***

***கடமையைக் கண்ணாய்க் கருதுவோர் இல்லாள்
சிறைக்குள்ளே வாழமாட்டார் கூறு.***

***குறள் 902:***

***பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.***

***கொள்கைக் கொடியேந்தும்  வீரனோ பெண்பின்னே
செல்வது வெட்கம் தரும்.***

*குறள் 903:*

***இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்***
***நல்லாருள் நாணுத் தரும்.***

***மனைவிக்கே அஞ்சுபவன்  நல்லார்முன் வெட்கித்***
***தலைகுனிந்து வாழ்வான் விளம்பு.***

*குறள் 904:*

***மனையாளை யஞ்சும் மறுமையி லாளன்***
***வினையாண்மை வீறெய்த லின்று.***

***மனைவியுடன் இல்லறத்திற் கஞ்சுபவன்***
***செய்யும்***
***செயல்திறனை ஏற்கமாட்டார் இங்கு.***

*குறள் 905:*

***இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்றும்***
***நல்லார்க்கு நல்ல செயல்.***

***இல்லாளுக்  கஞ்சி நடப்பவர்கள், அஞ்சுவார்***
***நல்லார்க்கு நன்மைசெய்யத் தான்.***

*குறள் 906:*

***இமையாரின் வாழினும் பாடிலரே யில்லாள்***
***அமையார்தோ ளஞ்சு பவர்.***

***உயர்ந்தவர்போல் வாழ்ந்தாலும் பேரழகு இல்லாள்***
***வயமானால் தூற்றுவார் கூறு.***

*குறள் 907:*

***பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்***
***பெண்ணே பெருமை உடைத்து.***

***அடங்கி நடக்கின்ற ஆண்மைக்கு, நாணம்,***
***மடம்மிகுந்த பெண்மையே மேல்.***

*குறள் 908:*

***நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்***
***பெட்டாங் கொழுகு பவர்.***

***பெண்மயக்கம் கொண்டவர்கள் நல்லதும் செய்யமாட்டார்***
***நண்பரையும் பார்க்கமாட்டார் கூறு.***

*குறள் 909:*

***அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்***
***பெண்ணேவல் செய்வார்கண் இல்.***

***பெண்ணுக் கடிமையாய் வாழ்வோர் அறச்செயலோ***
***மற்றவையோ செய்யமாட்டார் கூறு.***

*குறள் 910:*

***எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்***
***பெண்சேர்ந்தாம் பேதைமை இல்.***

***நெஞ்சுறுதி, சிந்தனை கொண்டவர்கள் பெண்களின்***
***பின்செல்ல மாட்டார் உணர்.***

---

## *92 வரைவின் மகளிர்*

*குறள் 911:*

***அன்பின் விழையார் பொருள்விழையும் ஆய்தொடியார்***
***இன்சொல் இழுக்குத் தரும்.***

***அன்பின்றி நம்பொருளை நாடும் பொதுமகளிர்***
***இன்சொற்கள் துன்பம் தரும்.***

*குறள் 912:*

***பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்***
***நயன்தூக்கி நள்ளா விடல்.***

***என்னலாபம் என்றே கணித்துப் பழகிடும்***
***பெண்களை நம்பவேண்டாம் இங்கு.***

*குறள் 913:*

***பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்***
***ஏதில் பிணந்தழீஇ அற்று.***

***பொருளைக் குறிவைத்தே பொய்யாய்த்   தழுவல்,***
***இருளில் பிணந்தழுவல் போல்.***

*குறள் 914:*

***பொருட்பொருளார் புன்னலந் தோயார் அருட்பொருள்***
***ஆயும் அறிவி னவர்.***

***அருள்விரும்பும் சான்றோர் பொருள்விரும்பும் பெண்ணை***
***இழிவாய்க் கருதுவர் காண்.***

*குறள் 915:*

***பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்***
***மாண்ட அறிவி னவர்.***

***அறிவார்ந்த சான்றோர் பொதுமகளை நாடி***
***நெறிதவற மாட்டார் உணர்.***

*குறள் 916:*

***தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்***
***புன்னலம் பாரிப்பார் தோள்.***

***புகழ்நாடும் சான்றோர் இருமனப் பெண்ணின்***
***முறையற்ற தோள்விரும்பார் கூறு.***

*குறள் 917:*

*நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்*
*பேணிப் புணர்பவர் தோள்.*

*இருமனப்  பெண்தோளை சஞ்சலம் கொண்டோர்*
*தழுவிக் களித்திருப்பார் சாற்று.*

*குறள் 918:*

*ஆயும் அறிவினர் அல்லார்க் கணங்கென்ப*
*மாய மகளிர் முயக்கு.*

*பொதுமகள் வஞ்சக எண்ணத்தில் வீழ்ந்த*
*அறிவிலிக்கு ஏற்பட்ட மாயமகள் மோக*
*மயக்கமெனக் கூறும் உலகு.*

*குறள் 919:*

*வரைவிலா மாணிழையார் மென்தோள் புரையிலாப்*
*பூரியர்கள் ஆழும் அளறு.*

*இருமனப் பெண்டிரின் தோள்கள் இழிந்தோர்*
*உழன்று புரள்கின்ற சேறு.*

*குறள் 920:*

*இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்*
*திருநீக்கப் பட்டார் தொடர்பு.*

*பொதுமகளிர் சூதாட்டம் மற்றும் மதுகுடித்தல்*
*அறவளத்தை நீக்கும் தொடர்பு.*

---

## *93 கள்ளுண்ணாமை*

*குறள் 921:*

***உட்கப் படாஅர் ஒளியிழப்பர் எஞ்ஞான்றும்***
***கட்காதல் கொண்டொழுகு வார்.***

***போதைக் கடிமையெனில்  மாற்றாரும் அஞ்சமாட்டார்!***
***யாரும் மதிக்கமாட்டார் சொல்.***

*குறள் 922:*

***உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரான்***
***எண்ணப் படவேண்டா தார்.***

***மதுவினத்தைத் தீண்டாதே! சான்றோர்***
***மதிப்பைப்***
***புறக்கணிப்போர் நாடலாம் தீது.***

*குறள் 923:*

***ஈன்றாள் முகத்தேயும் இன்னாதால் என்மற்றுச்***
***சான்றோர் முகத்துக் களி.***

***குடிவெறி கொண்டவனைத் தாய்சகிக்க  மாட்டாள்!***
***சகிப்பாரா சான்றோர்? விளம்பு.***

*குறள் 924:*

***நாணென்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்ளென்னும்***
***பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.***

***மதுமயக்கம் கொண்டவரை  நாணமென்னும்  மங்கை***
***வெறுத்தே விலகிடுவாள் சாற்று.***

*குறள் 925:*

***கையறி யாமை உடைத்தே பொருள்கொடுத்து***
***மெய்யறி யாமை கொளல்.***

***பொருள்கொடுத்துப் போதை மயக்கத்தை வாங்கும்***
***கொடுமை அறியாமை வித்து.***

*குறள் 926:*

***துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்***
***நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.***

***தூங்குவோர்க்கும் செத்தவர்க்கும் வேறுபாடு இல்லையிங்கே!***
***கேடுகெட்ட போதை மதுகுடிப்போர், ஏற்றதும்***
***கூடறுக்கும் நஞ்சுண்போர் ஒன்று.***

*குறள் 927:*

***உள்ளொற்றி உள்ளூர் நகப்படுவர் எஞ்ஞான்றும்***
***கள்ளொற்றிக் கண்சாய் பவர்.***

***மறைந்து குடித்தாலும் கண்மயக்கம் கண்டே***
***நகைத்திடுவார் ஊரார்தான் சொல்.***

*குறள் 928:*

***களித்தறியேன் என்பது கைவிடுக நெஞ்சத்***
***தொளித்ததூஉம் ஆங்கே மிகும்.***

***மதுவருந்தேன் என்றேதான் பொய்சொல்தல் வேண்டா!***
***மதுமயக்கம் காட்டிவிடும் மெய்.***

*குறள் 929:*

***களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்***
***குளித்தானைத் தீத்துரீஇ அற்று.***

***போதை வெறியனை வாழ்வில்  திருத்துவதும்***
***நீருக்குள் சென்றவனைத் தீப்பந்தம் ஏந்தியே***
***நீருக்குள் தேடுவதும் ஒன்று.***

*குறள் 930:*

***கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கால்***
***உள்ளான்கொல் உண்டதன் சோர்வு.***

***குடிகாரன் தள்ளாடி வீழ்வதைப் பார்த்தே***
***குடிக்காதோன் கேடுண ரான்?***

---

*94 சூது*

*குறள் 931:*

***வேண்டற்க வென்றிடினும் சூதினை வென்றதூஉம்***
***தூண்டிற்பொன் மீன்விழுங்கி அற்று.***

***வெற்றியே தந்தாலும் சூதை விரும்பாதே!***
***தொண்டையில் தூண்டில் இரைவிரும்பி முள்சிக்கித்***
***தத்தளிக்கும் மீன்நிலைதான் சாற்று.***

*குறள் 932:*

***ஒன்றெய்தி நூறிழக்கும் சூதர்க்கும் உண்டாங்கொல்***
***நன்றெய்தி வாழ்வதோர் ஆறு.***

***ஒருவெற்றி வந்த கவர்ச்சியில் நூறை***
***இழப்பவர்கள் வாழ்வாரோ கூறு?***

*குறள் 933:*

*உருளாயம் ஓவாது கூறிற் பொருளாயம்*
*போஒய்ப் புறமே படும்.*

*காயுருட்டிச் சூதாடிச்  சேர்த்த பொருளெல்லாம்*
*தேய்ந்தே மறைந்துவிடும் செப்பு.*

*குறள் 934:*

*சிறுமை பலசெய்து சீரழிக்கும் சூதின்*
*வறுமை தருவதொன் றில்.*

*துன்பத்தைத் தந்து புகழையும் சீரழித்து*
*வன்கொடுமை பந்தாடும் ஏழ்மையைச் சூதைப்போல்*
*தந்திட வேறில்லை சாற்று.*

*குறள் 935:*

*கவறும் கழகமும் கையும் தருக்கி*
*இவறியார் இல்லாகி யார்.*

*சூதாட்டக் கூடத்தை, காயைப் பொய்த்திறனை*
*நாடியவர் என்ன இருந்தாலும் இல்லாமல்*
*ஆகிடுவார் வாழ்க்கையில் இங்கு.*

*குறள் 936:*

*அகடாரார் அல்லல் உழப்பர்சூ தென்னும்*
*முகடியான் மூடப்பட் டார்.*

*சூது வலையிலே சிக்கியோர் உண்ணாமல்*
*வேதனையில் வாடுவார் சாற்று.*

*குறள் 937:*

***பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும்***
***கழகத்துக் காலை புகின்.***

***சூதாடும் கூடத்தில் காலம் கழிப்பவரின்***
***சேர்த்துவைத்த செல்வமும் நற்பண்பும் என்றென்றும்***
***பாழாகும் நாசமாகும் சாற்று.***

*குறள் 938:*

***பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ அருள்கெடுத்***
***தல்லல் உழப்பிக்கும் சூது.***

***பொய்சொல்ல வைக்கும் அருள்மனத்தை மாற்றிவிடும்***
***துன்பத்தில் தள்ளிவிடும் சூது.***

*குறள் 939:*

***உடைசெல்வம் ஊணொளி கல்வியென் றைந்தும்***
***அடையாவாம் ஆயங் கொளின்.***

***புகழ்வாழ்க்கை, கல்வியுடன் செல்வம் உணவை***
***உடையை  இழக்கவைக்கும் சூது.***

*குறள் 940:*

***இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்***
***உழத்தொறூஉம் காதற் றுயிர்.***

***பொருளை இழக்கவரும் சூதாட்ட ஆசையும்***
***பெருந்துன்பம் வந்தால் உயிராசை கொள்தல்***
***இரண்டுமே ஒன்றுதான் பார்.***

## *95 மருந்து*

*குறள் 941:*

***மிகினும் குறையினும் நோய்செய்யும் நூலோர்***
***வளிமுதலா எண்ணிய மூன்று.***

***பித்தம், சிலேத்துமம், வாதம் எனமூன்றும்***
***கற்றவர் கூறும் அளவில் குறைந்தாலோ***
***சற்று மிகுந்தாலோ நோய்.***

*குறள் 942:*

***மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய***
***தற்றது போற்றி உணின்.***

***உண்டது நன்கு செரித்தபின்  உண்ணவேண்டும்!***
***உண்டால் தவிர்ப்போம் மருந்து.***

*குறள் 943:*

***அற்றால் அளவறிந் துண்க அஃதுடம்பு***
***பொற்றான் நெடிதுய்க்கும் ஆறு.***

***உணவு செரித்தபின் உண்ணும் அளவை***
***அறிந்துண்டால்  நீடிக்கும் வாழ்வு.***

*குறள் 944:*

***அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல***
***துய்க்க துவரப் பசித்து.***

***உண்டது செரித்தபின் ஏற்கும் உணவையே***
***உண்ணவேண்டும் நன்கு பசித்து.***

*குறள் 945:*

***மாறுபா டில்லாத உண்டி மறுத்துண்ணின்***
***ஊறுபா டில்லை உயிர்க்கு.***

***உடலேற்கும் என்றாலும் எல்லைக்குள் உண்டால்***
***உடலுக்குத் தொல்லையில்லை சாற்று.***

*குறள் 946:*

***இழிவறிந் துண்பான்கண் இன்பம்போல் நிற்கும்***
***கழிபேர் இரையான்கண் நோய்.***

***அளவறிந்தே உண்போர் நலமுடன் வாழ்வார்!***
***அளவின்றி என்றாலே நோய்.***

*குறள் 947:*

***தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்***
***நோயள வின்றிப் படும்.***

***பசியள(வு) அறியாமல் ஏகமாய் உண்டால்***
***அதிகமாய் நோய்கள் வரும்.***

*குறள் 948:*

***நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்***
***வாய்நாடி வாய்ப்பச் செயல்.***

***நோயென்ன? காரணங்கள் என்னென்ன? தீர்வென்ன?***
***ஆய்ந்தே சிகிச்சைசெய்தல் நன்று.***

*குறள் 949:*
***உற்றான் அளவும் பிணியளவும் காலமும்***
***கற்றான் கருதிச் செயல்.***

***நோயாளிக் குள்ள வயதுடன், நோய்த்தன்மை,***
***ஆய்ந்து மருத்துவம் கற்றவர் நேரத்தைத்***
***தேர்ந்து சிகிச்சைதந்தால் நன்று.***

*குறள் 950:*

***உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்***
***றப்பானாற் கூற்றே மருந்து.***

***மருத்துவர், நோயாளி, உற்றதுணை மற்றும்***
***மருந்தென நான்கினைக் கொண்டதே நோயின்***
***மருத்துவம் பார்க்கும் முறை.***

---

*96 குடிமை*

*குறள் 951:*

***இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்***
***செப்பமும் நாணும் ஒருங்கு.***

***நடுநிலை மற்றும் அடக்கம்,சிறந்த***
***குடும்பத்தார் பண்புக ளாம்.***

*குறள் 952:*

***ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்***
***இழுக்கார் குடிப்பிறந் தார்.***

***ஒழுக்கமும் நாணமும் உண்மையும் நல்ல***
***குடிபிறந்தார் போற்றும் நெறி.***

*குறள் 953:*

***நகையீகை அன்சொல் இகழாமை நான்கும்***
***வகையென்ப வாய்மைக் குடிக்கு.***

***முகமலர்ச்சி,ஈகை, இனிமையுடன் சேர்ந்த***
***இகழாமை நற்குடியார் பண்பு.***

*குறள் 954:*

*அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்*
*குன்றுவ செய்தல் இலர்.*

*கோடி கொடுத்தாலும் நல்லோர் குடிப்புகழ்*
*கேடுற ஏற்கமாட்டார் சொல்.*

*குறள் 955:*

*வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி*
*பண்பின் தலைப்பிரிதல் இன்று.*

*பழம்பெருமை மாண்புடன் வாழ்வோர் வறுமை*
*பிழிந்தெடுத்த போதும் கொடைப்பண்பை என்றும்*
*இழக்காமல்  காப்பார் சொல்.*

*குறள் 956:*

*சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற*
*குலம்பற்றி வாழ்துமென் பார்.*

*களங்கமற்றோர் என்பவர் வஞ்சகம் செய்யும்*
*நிலையெடுக்க மாட்டார் விளம்பு.*

*குறள் 957:*

*குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்*
*மதிக்கண் மறுப்போல் உயர்ந்து.*

*நற்குடி சார்ந்தோரின் குற்றம் நிலவிலே*
*உள்ள களங்கம்போல் ஊரில் தெரிந்துவிடும்!*
*குற்றமின்றி வாழ்தல் உயர்வு.*

*குறள் 958:*

***நலத்தின்கண் நாரின்மை தோன்றின் அவனைக்***
***குலத்தின்கண் ஐயப் படும்.***

***அன்பென்னும் பண்பின்றி வாழ்பவனின்***
***நற்குடும்பப்***
***பின்னனியை எள்ளுவர் இங்கு.***

*குறள் 959:*

***நிலத்திற் கிடந்தமை கால்காட்டும் காட்டும்***
***குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.***

***விளைந்த பயிரோ நிலமுரைக்கும்! வாய்ச்சொல்***
***பிறந்த குடிசொல்லும் செப்பு.***

*குறள் 960:*

***நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்***
***வேண்டுக யார்க்கும் பணிவு.***

***நாணமெனும் பண்பால் நலம்விளையும்!நற்குடும்ப***
***வான்புகழ் பண்பே பணிவு.***

---

## *97 மானம்*

*குறள் 961:*

***இன்றி அமையாச் சிறப்பின ஆயினும்***
***குன்ற வருப விடல்.***

***செய்தாக வேண்டுமென்ற போதிலும் தன்பெருமை***
***குன்றுவதைச் செய்யமாட்டார் இங்கு.***

*குறள் 962:*

***சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு***
***பேராண்மை வேண்டு பவர்.***

***புகழ்வேண்டும் என்றே குடும்பப் பெருமை***
***தடம்புரளச் செய்யும் செயலைத் தவிர்ப்பார்!***
***குடிப்பெருமை மானமே மூச்சு.***

*குறள் 963:*

***பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய***
***சுருக்கத்து வேண்டும் உயர்வு.***

***உயர்ந்த நிலையில் பணிவு, சரியும்***
***நிலையில் பெருந்தன்மை நன்று.***

*குறள் 964:*

***தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்***
***நிலையின் இழிந்தக் கடை.***

***பெரியோர் தரந்தாழ்ந்தே மானம் இழந்தால்***
***தரையில் விழுந்த முடியாய் மதிப்பார்!***
***உயர்தரப் பண்பே மதிப்பு.***

*குறள் 965:*

***குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ***
***குன்றி அனைய செயின்.***

***குணக்குன்றாய் உள்ளோர் இழிசெயல் தன்னை***
***மணியளவு செய்தாலும் தாழ்வார் நிலையில்!***
***குணப்பிறழ்வு வாழ்வின் சரிவு.***

*குறள் 966:*

*புகழின்றால் புத்தேணாட் டுய்யாதால் என்மற்*
*றிகழ்வார்பின் சென்று நிலை.*

*இகழ்ச்சியை ஏற்றும் மரியாதை விட்டும்*
*புகழ்வருமா? என்னபயன் சொல்.*

*குறள் 967:*

*ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே*
*கெட்டான் எனப்படுதல் நன்று.*

*மதியார்பின் சென்றேதான் வாழ்வதை விட்டே*
*அழிவினை ஏற்பது மேல்.*

*குறள் 968:*

*மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை*
*பீடழிய வந்த இடத்து.*

*சாவா மருந்தில்லை! நம்பெருமை விட்டேதான்*
*வாழ்தல் இழிவென்றே சொல்.*

*குறள் 969:*
*மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்*
*உயிர்நீப்பர் மானம் வரின்.*

*முடிகள் உதிர்ந்தால் கவரிமா சாகும்!*
*மதிப்பிழந்தே மானம் இழந்தால் உயர்ந்தோர்*
*உயிர்நோக வாழமாட்டார் இங்கு.*

*குறள் 970:*
*இளிவரின் வாழாத மானம் உடையார்*
*ஒளிதொழு தேத்தும் உலகு.*

*மானம் இழக்கும்  இழிநிலையில் வாழாதோர்*
*சான்றாண்மை போற்றும் உலகு.*

---

## *98 பெருமை*

*குறள் 971:*

***ஒளியொருவற் குள்ள வெறுக்கை இளியொருவற்***
***கஃதிறந்து வாழ்தும் எனல்.***

***வாழ்வின் ஒளியாகும் ஊக்கம்! ஊக்கமின்றி***
***வாழ்தலே என்றும் இழிவு.***

*குறள் 972:*

***பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா***
***செய்தொழில் வேற்றுமை யான்.***

***பிறப்பால் சமந்தான்!  தொழிலின் திறத்தால்***
***சிறப்புகள் வேறுபடும் சாற்று.***

*குறள் 973:*

***மேலிருந்துத் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்***
***கீழல்லார் கீழல் லவர்.***

***மேல்நிலையில் பண்பற்றோர் தாழ்ந்தவரே! பண்புள்ளோர்***
***கீழ்நிலை என்றாலும் வாழ்வில் உயர்ந்தவரே!***
***மேல்கீழ் அளவுகோல் பண்பு.***

*குறள் 974:*

***ஒருமை மகளிரே போலப் பெருமையும்***
***தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.***

***நெறிபிறழா வாழ்க்கையை வாழ்வோர்க்குக் கற்பில்***
***நெறிபிழாப் பெண்பெருமை உண்டு.***

*குறள் 975:*

***பெருமை யுடையவர் ஆற்றுவார் ஆற்றின்***
***அருமை யுடைய செயல்.***

***பெருந்தடை வந்தும் செயலை முடிப்போர்***
***பெருமைக் குரியோராம் சாற்று.***

*குறள் 976:*

***சிறியார் உணர்ச்சியுள் இல்லை பெரியாரைப்***
***பேணிக்கொள் வேமென்னும் நோக்கு.***

***பெரியோரின் மாண்பினைக் காக்கும்***
***உணர்ச்சி***
***சிறியோர்  மனத்திலில்லை சொல்.***

*குறள் 977:*

***இறப்பே புரிந்த தொழிற்றாம் சிறப்புதான்***
***சீரல் லவர்கண் படின்.***

***சிறப்புகள் எல்லாம் தகுதியற்றோர் கொண்டால்***
***செருக்குடன் வாழ்வ தியல்பு.***

*குறள் 978:*

***பணியுமாம் என்றும் பெருமை சிறுமை***
***அணியுமாம் தன்னை வியந்து.***

***பெருமை உடையோர் பணிவுடன் வாழ்வார்!***
***செருக்குடன் தன்னை வியந்தேதான் வாழ்வார்***
***சிறுமை உடையோர்தான் செப்பு.***

*குறள் 979:*

***பெருமை பெருமிதம் இன்மை சிறுமை***
***பெருமிதம் ஊர்ந்து விடல்.***

***செருக்கின்றி வாழ்தல் பெருமை! சிறுமை***
***செருக்கெனும் ஆணவந்தான் சாற்று.***

*குறள் 980:*

***அற்றம் மறைக்கும் பெருமை சிறுமைதான்***
***குற்றமே கூறி விடும்.***

***பிறர்குறை கூறாமல் வாழ்தல் பெருமை!***
***சிறுமை, குறைகூறும் பண்பு.***

---

## *99 சான்றாண்மை*

*குறள் 981:*

***கடனென்ப நல்லவை யெல்லாம் கடனறிந்து***
***சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.***

***நல்லவை  எல்லாமே சான்றோர் கடமையென்பார்!***
***உள்ளத்தால் ஏற்பார் உவந்து.***

*குறள் 982:*

***குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்***
***எந்நலத் துள்ளதூஉ மன்று.***

***நல்ல குணங்களே சான்றோர்க் கழகாகும்!***
***மற்றவை அல்ல அழகு.***

*குறள் 983:*

***அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொ***
***டைந்துசால் பூன்றிய தூண்.***

***அன்புடன் நாணமும் ஈகையும் கண்ணோட்டம்***
***உண்மை எனஐந்தும் சான்றாண்மைப் பண்புகளை***
***நின்று நிலைக்கவக்கும் தூண்.***

*குறள் 984:*

***கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை***
***சொல்லா நலத்தது சால்பு.***

***கொல்லாமை நல்லறமாம்! மாற்றார் குறையைச்***
***சொல்லாமை சான்றாண்மைப் பண்பு.***

*குறள் 985:*

***ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அதுசான்றோர்***
***மாற்றாரை மாற்றும் படை.***

***செயல்வீரர் ஆற்றல் பணிவாம்! அதுவே***
***பகவரை மாற்றும் படை.***

*குறள் 986:*

***சால்பிற்குக் கட்டளை யாதெனின் தோல்வி***
***துலையல்லார் கண்ணும் கொளல்.***

***யாரிடமும் தோல்வியை ஏற்கின்ற பக்குவமே***
***சால்பின் உரைகல்லாம் சாற்று.***

*குறள் 987:*

***இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு.***

***இன்னல்கள் செய்தவர்க்கு நன்மைகள் செய்யாத
பண்பால் பயனென்ன சான்றாண்மை கொண்டவர்க்கு?
பண்படுத்தும் ஆண்மையே சால்பு.***

*குறள் 988:*

***இன்மை ஒருவற் கிளிவன்று சால்பென்னும்
திண்மையுண் டாகப் பெறின்.***

***சான்றாண்மை என்னும் உறுதி இருப்பவர்க்கு
ஏழ்மை இழிவல்ல சாற்று.***

*குறள் 989:*

***ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.***

***ஊழிவந்து தாக்கினாலும் தான்மாறார்
சான்றாண்மை
ஆழி எனப்படுவார் தான்.***

*குறள் 990:*

***சான்றவர் சான்றாண்மை குன்றின் இருநிலத்தான்
தாங்காது மன்னோ பொறை.***

***சான்றோரின் பண்பு குறைந்தால் உலகமோ
தாங்காது தன்பாரந் தான்.***

## *100 பண்புடைமை*

*குறள் 991:*

***எண்பதத்தால் எய்தல் எளிதென்ப யார்மாட்டும்***
***பண்புடைமை என்னும் வழக்கு.***

***தன்னுடன் யாரும் பழகிப் பேசுதல்***
***இங்கே எளிமையெனில் அத்தகைய***
***நல்வழியே***
***பண்புடைமை யாகும் உணர்.***

*குறள் 992:*

***அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்***
***பண்புடைமை என்னும் வழக்கு.***

***அன்பாய்ப் பழகுதல், நற்குடி வாழ்க்கை,***
***பண்புடைமை என்பதற்குச் சான்று.***

*குறள் 993:*

***உறுப்பொத்தல் மக்களொப் பன்றால் வெறுத்தக்க***
***பண்பொத்தல் ஒப்பதாம் ஒப்பு.***

***உறுப்புகளால் ஒத்திருத்தல் மாந்தரல்ல! பண்பால்***
***ஒருமித்தல் மாந்தராம் சொல்.***

*குறள் 994:*

***நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்***
***பண்புள ராட்டும் உலகு.***

***நேர்மை அறங்களைப் போற்றிப் பயன்படுவார்***
***பண்பைப் புகழும் உலகு.***

*குறள் 995:*

***நகையுள்ளும் இன்னா திகழ்ச்சி பகையுள்ளும்***
***பண்புள பாடறிவார் மாட்டு.***

***விளையாட்டாய்க் கூட இகழாதோர் மாற்றார்***
***உளம்நோகப் பேசமாட்டார் கூறு.***

*குறள் 996:*

***பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்***
***மண்புக்கு மாய்வது மன்.***

***பண்புடையார் உள்ளதால் இவ்வுலகம் உள்ளது!***
***இன்றேல் புதைந்திடும் கீழ்.***

*குறள் 997:*

***அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்***
***மக்கட்பண் பில்லா தவர்.***

***அரம்போல கூர்மை அறிவிருந்தும் பண்பை***
***இழந்தோர் மரத்திற்கே ஒப்பு.***

*குறள் 998:*
***நண்பாற்றார் ஆகி நயமில செய்வார்க்கும்***
***பண்பாற்றார் ஆதல் கடை.***

***நட்பின்றி தீமையே செய்வோ ரிடத்திலும்***
***பண்பின்றி வாழ்தல் இழுக்கு.***

*குறள் 999:*
***நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்***
***பகலும்பாற் பட்டன் றிருள்.***

***நட்பாய்ப் பழகத் தெரியாமல் வாழ்பவர்க்குப்***
***பட்டப் பகலிலும் இவ்வுலகம் காரிருள்போல்***
***முற்றும் தெரியும் உணர்.***

*குறள் 1000:*

***பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்***
***கலந்தீமை யால்திரிந் தற்று.***

***பண்பிலார் செல்வமோ பாத்திரம் கெட்டதால்***
***வெண்பால் திரிந்ததுபோ லாம்.***

---

## *101 நன்றியில் செல்வம்*

*குறள் 1001:*

***வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்***
***செத்தான் செயக்கிடந்த தில்.***

***பெருஞ்செல்வம் சேர்த்தும் அனுபவிக் காமல்***
***இறப்பதில் என்னபயன் செப்பு?***

*குறள் 1002:*

***பொருளானாம் எல்லாமென் றீயா திவறும்***
***மருளானாம் மாணாப் பிறப்பு.***

***பொருள்களால் எல்லாம் முடியுமென்றே எண்ணித்***
***தராதோன் பிறவி, இழிவு.***

*குறள் 1003:*

***ஈட்டம் இவறி இசைவேண்டா ஆடவர்***
***தோற்றம் நிலக்குப் பொறை.***

***புகழைப் புறக்கணித்துச் செல்வத்தைச் சேர்ப்போர்***
***பிறப்பே நிலத்தின் சுமை.***

*குறள் 1004:*
***எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ ஒருவரால்***
***நச்சப் படாஅ தவன்.***

***எவரும் விரும்பாதோர் வாழ்ந்த பிறகு***
***எதுமிஞ்சும் என்றெண்ணு வார்?***

*குறள் 1005:*

***கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய***
***கோடியுண் டாயினும் இல்.***

***கொடுத்து மகிழாதோர் கோடிகோடி செல்வம்***
***சிறைப்படுத்தி என்னபயன் சொல்?***

*குறள் 1006:*

***ஏதம் பெருஞ்செல்வம் தான்துவ்வான் தக்கார்க்கொன்***
***றீத லியல்பிலா தான்.***

***தானும் அனுபவிக் காமல் பிறருக்கும்***
***ஈயாமல் செல்வத்தைக் காப்பவர் வாழ்விலே***
***நோயாவார் செல்வத்திற் கே.***

*குறள் 1007:*

***அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வம் மிகநலம்***
***பெற்றாள் தமியள்மூத் தற்று.***

***வறியோர்க் குதவாத செல்வமோ மங்கை***
***தனித்திருந்து மூப்படைதல்  போல்.***

*குறள் 1008:*

***நச்சுப் படாதவன் செல்வம் நடுவூருள்***
***நச்சு மரம்பழுத் தற்று.***

***ஊரார் வெறுப்பவனின் செல்வங்கள் நச்சுமரம்***
***ஊர்நடுவே காய்த்ததுபோ லாம்.***

*குறள் 1009:*

***அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய***
***ஒண்பொருள் கொள்வார் பிறர்.***

***அன்பை, அறவழியைத் தாண்டிக் குவித்தசெல்வம்***
***என்றுமே கொள்வார் பிறர்.***

*குறள் 1010:*

***சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி***
***வறங்கூர்ந் தனைய துடைத்து.***

***செல்வந்தர்க் கேற்படும் ஏழ்மை மழைமேகம்***
***பொய்ப்பதைப் போன்ற நிலை.***

---

## *102 நாணுடைமை*

*குறள் 1011:*

***கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்***
***நல்லவர் நாணுப் பிற.***

***இழிசெயல் செய்ததற்கு நாணுதலும்***
***மங்கை***
***இயல்பாக நாணுதலும் வேறு.***

*குறள் 1012:*

***ஊணுடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறல்ல***
***நாணுடைமை மாந்தர் சிறப்பு.***

***உடையுணவு எல்லாம் பொதுவாகும்! மாந்தர்***
***சிறப்பியல்பே நாணம் உணர்.***

*குறள் 1013:*

***ஊனைக் குறித்த உயிரெல்லாம் நாணென்னும்***
***நன்மை குறித்தது சால்பு.***

***இன்னுயிரும் ஊனும் இணைந்ததுபோல்***
***சான்றாண்மைப்***
***பண்புடன் நாணமும் இங்கு.***

*குறள் 1014:*

***அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்***
***பிணியன்றோ பீடு நடை.***

***சான்றோர்க் கணிகலனே நாணந்தான்! நாணமின்றிப்***
***பீடுநடை போடுவது நோய்.***

*குறள் 1015:*

***பிறர்பழியும் தம்பழியும் நாணுவார் நாணுக்***
***குறைபதி என்னும் உலகு.***

***பிறரின் பழிக்கும் தனது பழிக்கும்***
***பதறியே நாணுபவர் நாணமென்னும் பண்பின்***
***உறைவிட மாவார் உணர்.***

*குறள் 1016:*

***நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்***
***பேணலர் மேலா யவர்.***

***பெரியவர்கள் பாதுகாப்பாய் நாணத்தை ஏற்பார்!***
***உலகத்தை ஏற்கமாட்டார் சாற்று.***

*குறள் 1017:*

***நாணால் உயிரைத் துறப்பர் உயிர்ப்பொருட்டால்***
***நாண்துறவார் நாணாள் பவர்.***

***உயிர்காக்க நாணத்தைக் கைவிட மாட்டார்!***
***உயிர்விடுவார் மானத்தைக் காத்து.***

*குறள் 1018:*

***பிறர்நாணத் தக்கது தானாணா னாயின்***
***அறநாணத் தக்க துடைத்து.***

***பழிகளுக்கு நாணாமல் வாழ்பவரை விட்டே***
***விலகும் அறம்நாணித் தான்.***

*குறள் 1019:*

***குலஞ்சுடும் கொள்கை பிழைப்பின் நலஞ்சுடும்***
***நாணின்மை நின்றக் கடை.***

***கொள்கை பிறழ்ந்தால் குடிக்கழிவு! நாணமற்ற***
***தன்மையோ நன்மைக்குக் கேடு.***

*குறள் 1020:*
***நாணகத் தில்லார் இயக்கம் மரப்பாவை***
***நாணால் உயிர்மருட்டி அற்று.***

***உள்ளத்தில் நாணமற்றோர் வாழ்வும் மரப்பொம்மை***
***பொம்மலாட்டக் காட்சியும் ஒன்று.***

---

## *103 குடிசெயல் வகை*

*குறள் 1021:*

***கருமம் செயவொருவன் கைதூவேன் என்னும்***
***பெருமையிற் பீடுடைய தில்.***

***வீட்டையும் நாட்டையும் போற்றுகின்ற சூளுரைக்கு***
***வேறு பெருமையுண்டோ? சொல்.***

*குறள் 1022:*

***ஆள்வினையும் ஆன்ற அறிவும் எனவிரண்டின்***
***நீள்வினையான் நீளும் குடி.***

***முயற்சி அறிவுடன் பேருழைப்பால் நாளும்***
***உயர்வது வீடுடன் நாடு.***

*குறள் 1023:*

***குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்***
***மடிதற்றுத் தான்முந் துறும்.***

***குடிமக்கள் வாழ உழைத்தால் இயற்கை***
***வரிந்துகட்டி வந்துதவும் செப்பு.***

*குறள் 1024:*

***சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியைத்***
***தாழா துஞற்று பவர்க்கு.***

***குடியை உயர்த்தும் உழைப்பிற்கு ஆற்றல்***
***மதித்துவரும் தானாய் விரைந்து.***

*குறள் 1025:*

***குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்***
***சுற்றமாச் சுற்றும் உலகு.***

***நாட்டு நலனிலே அக்கறை கொண்டோரை***
***நாட்டுமக்கள் சுற்றமென்பார் சூழ்ந்து.***

*குறள் 1026:*

***நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த***
***இல்லாண்மை ஆக்கிக் கொளல்.***

***தன்குடியைக்  காக்கின்ற ஆற்றலின் தன்மையே***
***என்றுமிங்கே ஆளுமையாம் சொல்.***

*குறள் 1027:*

***அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்***
***ஆற்றுவார் மேற்றே பொறை.***

***போரின் சுமையோ வீரருக்கே! இல்லறத்தைத்***
***தாங்குவோர்க்கே வீட்டுச் சுமை.***

*குறள் 1028:*

***குடிசெய்வார்க் கில்லை பருவம் மடிசெய்து***
***மானங் கருதக் கெடும்.***

***கடமைக்குக் காலநேரம் இல்லை! சோம்பல்***
***சுணக்கம் குடிக்கே அழிவு.***

*குறள் 1029:*

***இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ குடும்பத்தைக்***
***குற்ற மறைப்பான் உடம்பு.***

***குடும்பச் சுமைதாங்கி துன்பத்தைத் தாங்க***
***உடம்பிங்கே கொள்கலனோ? கூறு.***

*குறள் 1030:*

***இடுக்கண்கால் கொன்றிட வீழும் அடுத்தூன்றும்***
***நல்லாள் இலாத குடி.***

***துன்பத்தைச் சந்திக்க ஆளற்ற வீடிங்கே***
***துன்பத்தால் சீரழியும் வீழ்ந்து.***

## *104 உழவு*

*குறள் 1031:*

***சுழன்றும்ஏர்ப் பின்ன துலகம் அதனால்***
***உழந்தும் உழவே தலை.***

***தொழில்கள் செழித்தாலும் இந்த உலகம்***
***உழவால்தான் வாழ்கிறது! துன்பங்கள் ஏற்றும்***
***உழவே சிறந்த தொழில்.***

*குறள் 1032:*

***உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா***
***தெழுவாரை எல்லாம் பொறுத்து.***

***தொழில்கள் எதுவெனினும் அன்னார் பசியை***
***உழவே தணித்தேதான் காப்பதால் இந்த***
***உலகுக்கச் சாணி உழவு.***

*குறள் 1033:*

***உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்***
***தொழுதுண்டு பின்செல் பவர்.***

***உழுதுண்டு வாழ்வோர் உழவர்! அவரைத்***
***தொழுதுண்டு வாழ்வார் பிறர்.***

*குறள் 1034:*

***பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்***
***அலகுடை நீழ லவர்.***

***உழவர் உழைப்பால் வளமான நாட்டைப்***
***பலரும் விரும்பி அவர்குடைக் கீழே***
***நிழலில் வருவார் விழைந்து.***

*குறள் 1035:*

*இரவார் இரப்பார்க்கொன் றீவர் கரவாது*
*கைசெய்தூண் மாலை யவர்.*

*யாரிடமும் கேட்கமாட்டார் கேட்டால் கொடுத்திடுவார்*
*ஊராரைக் காக்கும் உழவு.*

*குறள் 1036:*

*உழவினார் கைம்மடங்கின் இல்லை விழைவதூஉம்*
*விட்டேமென் பார்க்கும் நிலை.*

*பற்றுகளைக்  கைவிட்டோர் கூட உழவர்கள்*
*பொறகையை நம்பிவாழ்வார் செப்பு.*

*குறள் 1037:*

*தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்*
*வேண்டாது சாலப் படும்*

*புழுதி ஒருபலம் காற்பலம் ஆக*
*உழுதால் எருவோ ஒருபிடி  இன்றிச்*
*செழித்து வளரும் பயிர்.*

*குறள் 1038:*

*ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்*
*நீரினும் நன்றதன் காப்பு.*

*உழுவதினும் இங்கே உரமிடுதல் நன்று!*
*களையெடுத்தல் நீர்பாய்ச்சல் காட்டிலும் நாளும்*
*பயிர்காத்தல் சாலவும் நன்று.*

*குறள் 1039:*
*செல்லான் கிழவன் இருப்பின் நிலம்புலந்*
*தில்லாளின் ஊடி விடும்.*

*நிலத்தை உழவன்  கவனியாது வாழ்ந்தால்*
*மனைவிபோல் ஊடும் நிலம்.*

*குறள் 1040:*

***இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்***
***நிலமென்னும் நல்லாள் நகும்.***

***நிலமிருந்தும் ஒன்றுமில்லை என்றிருந்தால் அந்த***
***நிலமகளே பார்ப்பாள் நகைத்து.***

---

## *105 நல்குரவு*

## *(வறுமையின் சிறுமை)*

*குறள் 1041:*

***இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்***
***இன்மையே இன்னா தது.***

***ஏழ்மையைக் காட்டிலும் ஏழ்மை எதுவென்றால்***
***ஏழ்மைதான் என்றுரைப்பார் செப்பு.***

*குறள் 1042:*

***இன்மை எனவொரு பாவி மறுமையும்***
***இம்மையும் இன்றி வரும்.***

***ஏழ்மை வளைத்துவிட்டால் இப்போதும் எப்போதும்***
***வாழ்க்கையில் இன்பமில்லை செப்பு.***

*குறள் 1043:*

***தொல்வரவும் தோலும் கெடுக்கும் தொகையாக***
***நல்குர வென்னும் நசை.***

***ஏழ்மையில் பேராசை வந்தால் பெருமையும்***
***வாழ்வின் புகழுமென்றும் பாழ்.***

*குறள் 1044:*

***இற்பிறந்தார் கண்ணேயும் இன்மை இளிவந்த***
***சொற்பிறக்கும் சோர்வு தரும்.***

***நற்குடியில் வந்தோர்க்கோ ஏழ்மை நிலைவந்தால்***
***சொற்பிறழ்வைச் சோர்வு தரும்.***

*குறள் 1045:*

***நல்குர வென்னும் இடும்பையுள் பல்குரைத்***
***துன்பங்கள் சென்று படும்.***

***ஏழ்மைத் துயருக்குள் பல்வேறு துன்பங்கள்***
***கோலோச்சிக் கொக்கரிக்கும் சொல்.***

*குறள் 1046:*

***நற்பொருள் நன்குணர்ந்து சொல்லினும் நல்கூர்ந்தார்***
***சொற்பொருள் சோர்வு படும்.***

***என்னதான் நல்லது சொன்னாலும் ஏழைகள்***
***சொன்னால் புறக்கணிப்பார் சொல்.***

*குறள் 1047:*

***அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்***
***பிறன்போல நோக்கப் படும்.***

***ஏழ்மைப் பிடியில் அறம்பிறழ்ந்தால்***
***அன்னியனாய்த்***
***தாயும் வெறுப்பாள் உணர்.***

*குறள் 1048:*

***இன்றும் வருவது கொல்லோ நெருநலும்***
***கொன்றது போலும் நிரப்பு.***

***நேற்றென்னைக் கொன்றது போன்ற வறுமைவந்து***
***பற்றுமோ இன்றும்? விளம்பு.***

***குறள் 1049:***

***நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்***
***யாதொன்றும் கண்பா டரிது.***

***நெருப்புக்குள் தூங்கலாம்! ஏழ்மைத் துடிப்பில்***
***வருமோதான் தூக்கம்? உரை.***

***குறள் 1050:***

***துப்புர வில்லார் துவரத் துறவாமை***
***உப்பிற்கும் காடிக்கும் கூற்று.***

***ஏழை   துறவாமை, உப்புக்கும் கஞ்சிக்கும்***
***கேட்கும் நிலைக்காக வோ?***

---

## *106 இரவு*

### *(பிறரிடம் கேட்டுப் பெறும் நிலை)*

***குறள் 1051:***

***இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்***
***அவர்பழி தம்பழி அன்று.***

***கொடுக்க முடிந்தவர்கள் கேட்பவ ருக்குக்***
***கொடுக்கவில்லை என்றால் பழியோ அவர்க்கே!***
***இரந்தவர்க் கல்ல உணர்.***

***குறள் 1052:***

***இன்பம் ஒருவற் கிரத்தல் இரந்தவை***
***துன்பம் உறாஅ வரின்.***

***தருவோர் மனமுவந்து தந்தால் மகிழ்ச்சி!***
***இரப்பதும் இன்பந்தான் சொல்.***

*குறள் 1053:*

*கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்*
*றிரப்புமோர் ஏஎர் உடைத்து.*

*திறந்த மனதும் கடமை உணர்வும்*
*உறவாடும் மாந்தரிடம் சென்றே இரத்தல்*
*பெருமைக் குரியதே செப்பு.*

*குறள் 1054:*

*இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்*
*கனவிலும் தேற்றாதார் மாட்டு.*

*கனவிலும் உள்ளதைக்  கூறுவோரை நாடி*
*இரத்தலும் ஈதலே செப்பு.*

*குறள் 1055:*

*கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்*
*றிரப்பவர் மேற்கொள் வது.*

*ஒளிவு மறைவற்றோர் உள்ளதால் சென்றே*
*இரக்கின்றார் நம்பிக்கை யோடு.*

*குறள் 1056:*

*கரப்பிடும்பை யில்லாரைக் காணின் நிரப்பிடும்பை*
*யெல்லா மொருங்கு கெடும்*

*உள்ளதை இங்கே மறைக்கின்ற நோயற்றோர்*
*உள்ளதால் இல்லாமை நோயழியும் சொல்.*

***குறள் 1057:***

***இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ளம்***
***உள்ளுள் உவப்ப துடைத்து.***

***இகழாமல்  கொடுப்போர் கொடுத்தால் இரப்போர்***
***அகம்மகிழ்வார் நன்றியுடன் தான்.***

***குறள் 1058:***

***இரப்பாரை யில்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்***
***மரப்பாவை சென்றுவந் தற்று.***

***இரப்பவர்கள் இல்லா உலகம் வெறும்***
***மரப்பொம்மை வந்துபோதல் போல்.***

***குறள் 1059:***

***ஈவார்கண் என்னுண்டாம் தோற்றம் இரந்துகோள்***
***மேவார் இலாஅக் கடை.***

***இரப்பவர்கள் கேட்காத வாழ்க்கையில் நாளும்***
***கொடுப்பவர்க்கு நற்புகழ் ஏது?***

***குறள் 1060:***

***இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை***
***தானேயும் சாலும் கரி.***

***இரப்போர் சினம்கொள்ளல் தப்பு! வறுமை***
***சுரப்பதே கோபத்தின் சான்று.***

---

## *107 இரவச்சம்*

### *(கேட்டுப்பெறும் நிலைக்கு அஞ்சுதல்)*

*குறள் 1061:*

***கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்***
***இரவாமை கோடி உறும்.***

***இரக்கமனம் உள்ளோரை நாடித்தான் சென்றே***
***இரவாமை கோடிநன்மை யாம்.***

*குறள் 1062:*

***இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து***
***கெடுக உலகியற்றி யான்.***

***இரந்துதான் வாழவேண்டும் என்றால் படைத்தோன்***
***திரிந்தேதான் கெட்டழிதல் மேல்.***

*குறள் 1063:*

***இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்***
***வன்மையின் வன்பாட்ட தில்.***

***வறுமையை நாமோ இரந்துதீர்ப்போம் என்ற***
***கொடுமையைப் போல்வேறுண் டோ?***

*குறள் 1064:*

***இடமெல்லாம் கொள்ளாத் தகைத்தே இடமில்லாக்***
***காலும் இரவொல்லாச் சால்பு.***

***வாழவழி இல்லாத போதும் இரவாமல்***
***வாழும் பெருமை பெரிது.***

*குறள் 1065:*

***தெண்ணீர் அடுபுற்கை ஆயினும் தாள்தந்த***
***துண்ணலின் ஊங்கினிய தில்.***

***கஞ்சி எனினும் உழைத்த உழைப்பினால்***
***உண்பதே சாலச் சிறப்பு.***

*குறள் 1066:*

***ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்***
***கிரவின் இளிவந்த தில்.***

***பசுகுடிக்கத் தண்ணீர் இரந்தாலும் அஃதோ***
***இழிவாகும் நாவிற் குணர்.***

*குறள் 1067:*

***இரப்பான் இரப்பாரை எல்லாம் இரப்பிற்***
***கரப்பார் இரவன்மின் என்று.***

***இல்லையென்று சொல்வா ரிடத்திலே கேட்கவேண்டாம்***
***என்றேதான் கெஞ்சுகிறேன் இங்கு.***

*குறள் 1068:*

***இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்***
***பார்தாக்கப் பக்கு விடும்.***

***தரமறுக்கும் கல்நெஞ்சம் மீதோ இரத்தல்***
***கலம்மோதி சேதமாகும் சொல்.***

*குறள் 1069:*

***இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள***
***உள்ளதூஉம் இன்றிக் கெடும்.***

***இரத்தலை எண்ணினால் உள்ளம் உருகும்!***
***மறுத்தால் உடைந்திடும் நெஞ்சு.***

*குறள் 1070:*

***கரப்பவர்க் கியாங்கொளிக்கும் கொல்லோ இரப்பவர்***
***சொல்லாடப் போஒம் உயிர்.***

***கேட்டும் தரவில்லை என்றால் உயிர்த்துடிக்கும்!***
***தூற்றும் உயிரெங்கு போம்?***

---

## *108 கயமை -- பொருட்பால் நிறைவு*

*குறள் 1071:*

***மக்களே போல்வர் கயவர் அவரன்ன***
***ஒப்பாரி யாங்கண்ட தில்.***

***உருவில் மனிதர்! குணத்தில் கயவர்!***
***இருவகைப் பண்புகள் ஓருரு வத்தில்***
***இருத்தல் மனிதரிடந் தான்.***

*குறள் 1072:*

***நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்***
***நெஞ்சத் தவலம் இலர்.***

***இப்படித்தான் வாழ கவலைகொள்வார் நல்லவர்கள்!***
***எப்படியும் எந்தக் கவலையும் இல்லாமல்***
***வாழ்வோர் கயவர்கள் இங்கு.***

*குறள் 1073:*

***தேவ ரனையர் கயவர் அவருந்தாம்***
***மேவன செய்தொழுக லான்.***

***விரும்பியதைச் செய்திங்கே வாழ்வதில் தேவர்,***
***கயவர்கள் ஒன்றாவர் சொல்.***

*குறள் 1074:*

***அகப்பட்டி ஆவாரைக் காணின் அவரின்***
***மிகப்பட்டுச் செம்மாக்கும் கீழ்.***

***கீழோரைக் காட்டிலும் கீழோரைக் கண்டால்***
***கீழோர் செருக்கடைவார் செப்பு.***

*குறள் 1075:*

***அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்***
***அவாவுண்டேல் உண்டாம் சிறிது.***

***தண்டனைக் கஞ்சி ஒழுக்கத்தைப் பேணுவார்!***
***தங்களாசை இங்கே நிறைவேறும் என்றாலோ***
***இங்கொழுங்கை ஏற்பார் நடித்து.***

*குறள் 1076:*

***அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட***
***மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.***

***இரகசியம் சொன்னதும் மற்றவர்க்குச் சொல்லும்***
***கயவர் பறைபோன்றோர் சொல்.***

*குறள் 1077:*

***ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்***
***கூன்கையர் அல்லா தவர்க்கு.***

***கயவர் கயவர்க் குதவுவார்! ஏழைக்***
***குதவிட நீட்டமாட்டார் கை.***

*குறள் 1078:*

***சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல***
***கொல்லப் பயன்படும் கீழ்.***

***சொன்னதும் ஈவார்கள் சான்றோர்! கரும்பைப்போல்***
***நன்கு பிழிந்தால் தருவார் கயவர்கள்!***
***பண்பற்ற கீழ்மைக் குணம்.***

*குறள் 1079:*

***உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்***
***வடுக்காண வற்றாகும் கீழ்.***

***மற்றவர் உண்டால் உடுத்தால் பொறாமையில்***
***குற்றமாய்ப் பார்ப்பார் கயவர்.***

*குறள் 1080:*

***எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்***
***விற்றற் குரியர் விரைந்து.***

***தங்களைக் காப்பதற்குத் தங்களையே விற்கவும்***
***முன்வருவார் கீழோர்தான் செப்பு.***

---

# குறள்களுக்கு குறள்வடிவில் விளக்கம்

# இன்பத்துப்பால்




***மதுரை பாபாராஜ்***

*அதிகாரம் 31*

***புலவி நுணுக்கத்தில் தலைமகள்,***
***தலைமகனை விட அறிவார்ந்தவள்***
***என்பதை வெகு நுட்பமாக***
***வள்ளுவர் விளக்குகிறார்!***

***தீத்தாரப்பன்***

---

*VOVஇராமசாமி*
*:*
***திருக்குறள்... வெண்பா உரை...நிறைவு***
***செய்துள்ளார் திரு. பாபாராஜ் அவர்கள்.***

***இது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணம்.***

***திருக்குறள் உரைவளத்தால் சிறக்கும்***
***தருணங்களில் இது மிகவும் சிறந்தது.***

***ஔவையார் பாடிய மூதுரை போன்ற***
***எளிதாகப் புரிகிற வெண்பா வடிவம் கொண்டது***
***திரு. பாபா ராஜ் ஐயா வின் உரை.***

***அவருக்கு இனிய வாழ்த்துக்கள்.***

***துறைதோறும் தமிழுக்குத் தொண்டு***
***செய்தோரில் பாபா ராஜ் அவர்கள்***
***செய்த தொண்டு அளப்பரிய தொண்டு!***
***வாழ்க அவர் புகழ்!***

---

***VOVCR:***
***உண்மைதான்..***
***அளப்பரியது பாபா பணி.***

***வெண்பாக்கள்***
***எளிமை..***
***அதுவே அவரது வலிமை***
***நெஞ்சார்ந்த வாழ்த்துகள் பாபா***

---

***அருளுடையீர் வணக்கம்***
***எண்ணிய எண்ணியாங்கு முடித்த***
***வெண்பாப் பாவலர்***
***மதுரை பாபாராஜ் அவர்களுக்கு***
***வாழ்த்துகள்***

***-கு. மோகனராசு***

---

***அருமை பாபா…***
***அயராத தங்கள் தமிழ்த் தொண்டு***
***மிகவும் வியப்புக்குரியது…***
***மேன்மேலும் சிறக்க வணங்கி வாழ்த்துகிறேன்…□□***

***VOV IR Balakrishnan***

---

***காமத்துப்பால் விளக்கம்***

***தேனும் கரும்பும் சேர்ந்தாற்***

***போல் தித்திக்கிறது.***

***கணியன் கிருஷ்ணன்***

***தென்காசி***

***—-------------------------------------------------------------***

## *இன்பத்துப்பால் தொடக்கம்*

### *109 தகையணங்குறுத்தல்*
### *(தலைவியின் அழகைத் தலைவன் தனக்குள் சொல்தல்)*

*குறள் 1081:*

***அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை***
***மாதர்கொல் மாலுமென் நெஞ்சு.***

***அழகோ! கலைமயிலோ? காதில்***
***குழைகள்***
***அசைகின்ற மங்கையோ? நெஞ்சம் மயங்கி***
***மலைக்கிறதே கண்ணாரக் கண்டு.***

*குறள் 1082:*

***நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு***
***தானைக்கொண் டன்ன துடைத்து.***

***நோக்கினாள்! நோக்கினேன்! நோக்கினாள்! சேனையுடன்***
***தாக்கவந்த கோலம்போல் தான்.***

*குறள் 1083:*

***பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்***
***பெண்டகையால் பேரமர்க் கட்டு.***

***கூற்றுவனைப் பார்த்ததில்லை! பெண்வடிவில் வேல்விழிகள்***
***ஏந்தியதைப் பார்த்தறிந்தேன் நான்.***

*குறள் 1084:*

***கண்டார் உயிருண்ணும் தோற்றத்தால் பெண்டகைப்***
***பேதைக் கமர்த்தன கண்.***

***பெண்ணின் இயல்புக்கு மாறாக கண்களோ***
***இன்னுயிரைத் தாக்குவதேன் கூறு.***

*குறள் 1085:*

***கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்***
***நோக்கமிம் மூன்றும் உடைத்து***

***கூற்றமோ? கண்களோ ?பெண்மானோ?***
***கேள்விமூன்றைக்***
***கேட்கிறதே பெண்பார்வை பார்த்து.***

*குறள் 1086:*

***கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்***
***செய்யல மன்னிவள் கண்.***

***கொடும்புருவம்  நேராய் இருந்தால் நடுக்கிப்***
***படுத்தாதே துன்பத்தில் கண்.***

*குறள் 1087:*

***கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்***
***படாஅ முலைமேல் துகில்.***

***தேன்மகள் மார்பகம்மேல் ஆடை, மதம்பிடித்த***
***யானை முகப்படாம் போல்.***

*குறள் 1088:*

***ஒண்ணுதற் கோஒ உடைந்ததே ஞாட்பினுள்***
***நண்ணாரும் உட்குமென் பீடு.***

***போர்ப்பகையை அச்சுறுத்தும் ஆற்றலோ தோற்றதே***
***தேரழகி நெற்றிக்கு முன்.***

*குறள் 1089:*

***பிணையேர் மடநோக்கும் நாணும் உடையாட்***
***கணியெவனோ ஏதில தந்து.***

***பெண்மானின் பார்வையுடன் நாணம் இயற்கையணி***
***இங்கிருக்கப் பொன்னணிகள் ஏன்?***

*குறள் 1090:*

***உண்டார்க ணல்லது அடுநறாக் காமம்போல்***
***கண்டார் மகிழ்செய்தல் இன்று.***

***உண்டால் மயக்கம் கொடுப்பது கள்தானே!***
***கண்டால் மயக்கும்பெண் அன்பு.***

---

## *110 குறிப்பறிதல்*

### *(தலைவியின் குறிப்பைத் தலைவன் அறிதல்)*

*குறள் 1091:*

***இருநோக் கிவளுண்கண் உள்ள தொருநோக்கு***
***நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.***

***பூவிழியாள் நோக்கிரண்டு! காதல்நோய் ஒன்றுதரும்!***
***நோய்க்கு மருந்தளிக்கும் ஒன்று.***

*குறள் 1092:*

***கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்***
***செம்பாகம் அன்று பெரிது.***

***கடைக்கண் பார்வையோ பாதியல்ல, காதல்***
***சிறையின் பெரும்பாதி யாம்.***

*குறள் 1093:*

***நோக்கினாள் நோக்கி இறைஞ்சினாள் அஃதவள்***
***யாப்பினுள் அட்டிய நீர்.***

***நோக்கினாள்! பார்த்தேன் தலைகுனிந்தாள்! அன்பென்னும்***
***பாத்தியில் ஊற்றியநீர் சாற்று.***

*குறள் 1094:*

***யானோக்கும் காலை நிலனோக்கும் நோக்காக்கால்***
***தானோக்கி மெல்ல நகும்.***

***நான்பார்க்கும் போது நிலத்தை அளக்கின்றாள்!***
***பார்க்காத போதென்னைப் பார்த்தே மனதிற்குள்***
***கோர்க்கின்றாள் முத்துநகை யை.***

*குறள் 1095:*

***குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்***
***சிறக்கணித்தாள் போல நகும்.***

***என்னையோ பார்க்காமல்  கண்ணைச் சுருக்கிவைத்தே***
***என்னைத்தான் பார்ப்பாள் மகிழ்ந்து.***

*குறள் 1096:*

***உறாஅ தவர்போற் சொலினும் செறாஅர்சொல்***
***ஒல்லை உணரப் படும்.***

***என்னைச் சினந்தே அயலார்போல் பேசுகின்றாள்!***
***அன்பை உணர்த்தும் குறிப்பு.***

*குறள் 1097:*

***செறாஅச் சிறுசொல்லும் செற்றார்போல் நோக்கும்***
***உறாஅர்போன் றுற்றார் குறிப்பு.***

***அனல்மொழி மற்றும் அனல்விழி எல்லாம்***
***மனக்காதல் தூதின் குறிப்பு.***

*குறள் 1098:*

***அசையியற் குண்டாண்டோர் ஏஎர்யான் நோக்கப்***
***பசையினள் பைய நகும்.***

***பார்ப்பேன்! குறும்பாய்ச் சிரிப்பாள்! அடடா!***
***நேரிழையாள் ஏந்தும் அழகு.***

*குறள் 1099:*

***ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்***
***காதலார் கண்ணே உள.***

***முன்பின் தெரியாதோர் பேசுதல்போல் காதலர்***
***கண்களின் தூதோ இயல்பு.***

*குறள் 1100:*

***கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்***
***என்ன பயனும் இல.***

***பாயும்கண்  காதல் மொழியை உரைத்தபின்***
***வாய்ச்சொல்லால் என்னபயன் செப்பு?***

---

## *111. புணர்ச்சி பழகுதல்*

## *(இன்பத்தை வியத்தல்)*

*குறள் 1101:*

***கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்***
***ஒண்தொடி கண்ணே உள.***

***பார்ப்பது கேட்பது உண்பது  தீண்டலும்***
***மோந்துபார்த்தல் ஐம்புலன் இன்பம், வளையல்கள்***
***பாடுமிவள் ஏந்துகின் றாள்.***

*குறள் 1102:*

***பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை***
***தன்னோய்க்குத் தானே மருந்து.***

***பாரிலுள்ள நோய்க்கு மருந்துண்டு! காதலெனும்***
***நோய்க்கோ இவளே மருந்து.***

*குறள் 1103:*

*தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிதுகொல்*
*தாமரைக் கண்ணான் உலகு.*

*தாமரைக் கண்ணான்உலகளிக்கும் இன்பமெல்லாம்*
*பூமகள் தோளில் துயில்கொள்ளும் இன்பத்திற்*
*கீடாமோ? தேனகமே சொல்.*

*குறள் 1104:*

*நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்*
*தீயாண்டுப் பெற்றாள் இவள்.*

*நெருங்கு குளிர்வாள்! விலகு சுடுவாள்!*
*இருவகைத் தீபெற்ற தெங்கு?*

*குறள் 1105:*

*வேட்ட பொழுதின் அவையவை போலுமே*
*தோட்டார் கதுப்பினாள் தோள்.*

*விரும்பும் பொருள்கள் விரும்பிய போது*
*தருமின்பம் போல இவள்தோ ளிரண்டும்*
*தருகிற தின்பம் வளர்ந்து.*

*குறள் 1106:*

*உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்*
*கமிழ்தின் இயன்றன தோள்.*

*இவளை அணைத்தால் உயிரோ தளிர்க்கும்!*
*இவள்தோள் அமிழ்தமோ? கூறு.*

*குறள் 1107:*

***தம்மில் இருந்து தமதுபாத் துண்டற்றால்***
***அம்மா அரிவை முயக்கு.***

***பகுத்துண்ணும் இன்பம், தலைவி தழுவிப்***
***பகுத்திடும் இன்பத்திற் கொப்பு.***

*குறள் 1108:*

***வீழும் இருவர்க் கினிதே வளியிடை***
***போழப் படாஅ முயக்கு.***

***காற்று புகமுடி யாமல் தழுவுதல்***
***ஊற்றெடுக்கும் காதலுக்குச் சான்று.***

*குறள் 1109:*
***ஊடல் உணர்தல் புணர்தல் இவைகாமம்***
***கூடியார் பெற்ற பயன்.***

***ஊடலும் நாடலும் கூடலும் காதலரின்***
***ஈடற்ற இன்பத்தின் ஊற்று.***

*குறள் 1110:*
***அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்***
***செறிதோறும் சேயிழை மாட்டு.***

***நூலைப் படிக்கப் படிக்க அறியாமை***
***நீங்குதல்போல் மங்கையின் காதலில் கூடினால்***
***காண்போமே புத்தின்பந் தான்.***

---

## *12 நலம்புனைந்துரைத்தல்*

## *( தலைவியின் அழகைத் தலைவன் பாராட்டுதல்)*

*குறள் 1111:*

*நன்னீரை வாழி அனிச்சமே நின்னினும்
மென்னீரள் யாம்வீழ் பவள்.*

*அனிச்சமே! நீயென்றும் மென்மைதான்! ஆனால்
தலைவிமுன் உன்மென்மை தூசு.*

*குறள் 1112:*

*மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.*

*மலர்கண்டு தள்ளாடும் நெஞ்சே! தலைவி
விழிகளே மற்றவர் பார்த்து மயங்கும்
மலர்களென்று பார்க்கின்றா யோ?*

*குறள் 1113:*

*முறிமேனி முத்தம் முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.*

*மாமை நிறமேனி,முத்தொளிப் பற்களுடன்
மூங்கிலன்ன தோள்கள், நறுமணம், வேல்வழி
ஏந்திவரும் ஏந்திழையாள் தான்.*

*குறள் 1114:*

*காணின் குவளை கவிழ்ந்து நிலனோக்கும்
மாணிழை கண்ணொவ்வேம் என்று.*

*குவளைமலர் காதலியின் கண்களைக் கண்டால்
இவள்கண்கள் போலத்தான் நாமில்லை என்றே
நிலம்நோக்கி வெட்கப் படும்.*

*குறள் 1115:*

*அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு*
*நல்ல படாஅ பறை*

*அனிச்சம்பூ பூக்காம்பை நீக்காமல் மாது*
*தலையிலே வைத்தாள் இடையொடிந்து வீழ*
*பறையொலி மங்கலம் போச்சு!*

*குறள் 1116:*

*மதியும் மடந்தை முகனும் அறியா*
*பதியின் கலங்கிய மீன்.*

*மங்கை முகத்திற்கும் அந்த நிலவிற்கும்*
*விண்மீன்கள் வேறுபாடு காணாமல் தத்தளித்தே*
*அங்குமிங்கும் பாய்கிறது பார்.*

*குறள் 1117:*

*அறுவாய் நிறைந்த அவிர்மதிக்குப் போல*
*மறுவுண்டோ மாதர் முகத்து.*

*நிலவில் தெரியும் களங்கம் தலைவி*
*முகத்திலுண்டோ? பார்த்தேதான்  சொல்.*

*குறள் 1118:*

*மாதர் முகம்போல் ஒளிவிட வல்லையேல்*
*காதலை வாழி மதி.*

*என்காதல் வேண்டுமா? மாதின் முகம்போல*
*வெண்ணிலவே! தண்ணொளி வீசு.*

*குறள் 1119:*

*மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்*
*பலர்காணத் தோன்றல் மதி.*

*மாதரசி என்னவளின் பால்முகத்தை ஒத்திருந்தால்*
*பாரறிய வெண்ணிலவே தோன்று.*

*குறள் 1120:*

*அனிச்சமும் அன்னத்தின் தூவியு மாதர்*
*அடிக்கு நெருஞ்சிப் பழம்.*

*அனிச்சம்பூ, அன்னச் சிறகுகளின் மென்மை*
*மனவியின் காலடி மென்மைக்கு முள்ளாம்,*
*நெருஞ்சிக் கிணையாம் செப்பு.*

---

## *113 காதற் சிறப்புரைத்தல்*

*குறள் 1121:*

*பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி*
*வாலெயி றூறிய நீர்.*

*அவளது பற்களில் ஊறிவரும் நீரோ*
*சுவைப்பாலும்  தேனுமென்றும் செப்பு.*

*குறள் 1122:*

*உடம்பொ டுயிரிடை என்னமற் றன்ன*
*மடந்தையொ டெம்மிடை நட்பு.*

*எங்கள் உறவோ உயிரும் உடம்பும்போல்*
*ஒன்றி இருக்கும் நிலை.*

*குறள் 1123:*

***கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழும்***
***திருநுதற் கில்லை யிடம்.***

***கண்மணிப் பாவையே போய்விடு! என்னவள்***
***தங்க இடம்வேண்டும் செல்.***

*குறள் 1124:*

***வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்***
***அதற்கன்னள் நீங்கும் இடத்து.***

***மாதரசி கூடினால் இன்னுயிர் சேர்ந்ததுபோல்!***
***நீங்கினால் சாதலைப் போல்.***

*குறள் 1125:*

***உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்***
***ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.***

***என்னவள் பண்பை  மறப்பதில்லை!***
***என்றுமறந்தேன்?***
***அன்பகத்தை நான்நினைக்க? செப்பு.***

*குறள் 1126:*

***கண்ணுள்ளிற் போகார் இமைப்பிற் பருவரார்***
***நுண்ணியர்எம் காத லவர்.***

***என்னவர் கண்விட்டு நீங்கமாட்டார்! கண்ணிமைத்தால்***
***புண்படார்! நுட்பமான அன்பு.***

*குறள் 1127:*

***கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணும்***
***எழுதேம் கரப்பாக் கறிந்து.***

***கண்ணுள்ளே அன்பருள்ளார்! மையிட்டால் போய்விடுவார்!***
***கண்மை போடமாட்டேன் நான்.***

*குறள் 1128:*

***நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்டல்***
***அஞ்சுதும் வேபாக் கறிந்து.***

***நெஞ்சில் இருக்கின்ற காதலரைச் சுட்டுவிடும்***
***என்றேதான் சூடாக உண்ண மறுக்கின்றேன்!***
***என்னவரைப் புண்படுத்தல் தீது.***

*குறள் 1129:*

***இமைப்பிற் கரப்பாக் கறிவல் அனைத்திற்கே***
***ஏதிலர் என்னுமிவ் வூர்.***

***இமைத்தால் மறைந்திடுவார்! இமைக்க மறுத்தேன்!***
***இதற்கவரை நோகிறதே ஊர்!***

*குறள் 1130:*

***உவந்துறைவர் உள்ளத்துள் என்றும் இகந்துறைவர்***
***ஏதிலர் என்னுமிவ் வூர்.***

***இதயத்தில் வாழ்கின்றார்! ஊரார் அவரைப்***
***பிரிந்துவிட்டார்  என்கிறாரே ஏன்?***

---

## *114 நாணுந்துறவுரைத்தல்*
## *( இருவரும் நாணம் நீங்கிய நிலை)*

*குறள் 1131:*

***காமம் உழந்து வருந்தினார்க் கேம***
***மடலல்ல தில்லை வலி.***

***காதல் கனியவில்லை என்றால் மடலூர்தல்***
***காதலர்க்கு என்றும் துணை.***

*குறள் 1132:*

***நோனா உடம்பும் உயிரும் மடலேறும்***
***நாணினை நீக்கி நிறுத்து.***

***நிறைவேறாக் காதல் ! உயிரும் உடலும்***
***மடலேறும் நாணத்தை விட்டு.***

*குறள் 1133:*

***நாணொடு நல்லாண்மை பண்டுடையேன் இன்றுடையேன்***
***காமுற்றார் ஏறும் மடல்.***

***நாணமும் ஆண்மையும் பெற்றிருந்தேன்!***
***இன்றோநான்***
***காதலால் பெற்றேன் மடல்.***

*குறள் 1134:*

***காமக் கடும்புனல் உய்க்குமே நாணொடு***
***நல்லாண்மை என்னும் புணை.***

***காதலெனும் வெள்ளமோ நாணமெனும் ஆண்மையெனும்***
***தோணிகளைச் சாய்த்துவிடும் சாற்று.***

*குறள் 1135:*

***தொடலைக் குறுந்தொடி தந்தாள் மடலொடு***
***மாலை உழக்கும் துயர்.***

***மாலைத் துயரளிக்கும் காதலையும் வெற்றிகொள்ளும்***
***வேலை மடலூர்தல் என்பதையும் தந்தாளே***
***காதலிதான் இங்கோ எனக்கு.***

*குறள் 1136:*

*மடலூர்தல் யாமத்தும் உள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்.*

*நள்ளிரவில் கூட மடலூர்தல் எண்ணுகிறேன்!
உள்ளத்துக்  காதலால் நான்.*

*குறள் 1137:*

*கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.*

*கடலன்ன காதல்நோய் கொண்டாலும் மங்கை
மடலேறும் துன்பம் பொறுக்கும் பெருமை
உடைத்தவள் என்பதை வாழ்த்து.*

*குறள் 1138:*

*நிறையரியர் மன்னளியர் என்னாது காமம்
மறையிறந்து மன்று படும்.*

*வெள்ளந்தி என்றெல்லாம் எண்ணாமல்  காதலோ
இவ்வூர் தெரியவைக்கும் சாற்று.*

*குறள் 1139:*

*அறிகிலார் எல்லாரும் என்றேயென் காமம்
மறுகின் மறுகும் மருண்டு.*

*தெரியவில்லை யாருக்கும் காதலென்றே இங்கே
தெருவெல்லாம் சுற்றுதோ சொல்.*

*குறள் 1140:*
*யாம்கண்ணிற் காண நகுப அறிவில்லார்
யாம்பட்ட தாம்படா ஆறு.*

*காதல்நோய் என்ன? அறியாதோர் தானிங்கே
காதல் துயர்பட்டோர் கண்டே நகைப்பார்!
காதலை ஊரறியார்! சாற்று.*

## *115 அலர் அறிவுறுத்தல்*

***குறள் 1141:***

***அலரெழ ஆருயிர் நிற்கும் அதனைப்***
***பலரறியார் பாக்கியத் தால்.***

***எங்களது காதலை ஊரார்கள் பேசுவதால்***
***என்னுயிர் போகவில்லை யே.***

***குறள் 1142:***

***மலரன்ன கண்ணாள் அருமை அறியா***
***தலரெமக் கீந்ததிவ் வூர்.***

***மலர்க்கண் நாயகியின் காதலறி யாமல்***
***அலரால் உதவுதே ஊர்.***

***குறள் 1143:***

***உறாஅதோ ஊரறிந்த கௌவை அதனைப்***
***பெறாஅது பெற்றன்ன நீர்த்து.***

***காதலைப் பேசுவாரா என்றிருந்தோம்! பேசுகின்றார்!***
***காதல் கனிவதற்கு வாய்ப்பு.***

***குறள் 1144:***

***கவ்வையாற் கவ்விது காமம் அதுவின்றேல்***
***தவ்வென்னும் தன்மை இழந்து.***

***பேசுகின்றார் ஊரார்! வளர்கிறது காதல்தான்!***
***பேசவில்லை என்றால் இழப்பு.***

*குறள் 1145:*

***களித்தொறும் கள்ளுண்டல் வேட்டற்றால் காமம்***
***வெளிப்படுந் தோறும் இனிது.***

***கள்ளைக் குடிக்க குடிக்க விரும்புவார்!***
***எல்லோரும் காதலைப் பேசும் பொழுதெல்லாம்***
***உள்ளம் மகிழ்கிறது கேட்டு.***

*குறள் 1146:*

***கண்டது மன்னும் ஒருநாள் அலர்மன்னும்***
***திங்களைப் பாம்புகொண் டற்று.***

***எங்களது சந்திப்போ  கொஞ்சநேரம்! ஊர்ப்பேச்சோ***
***திங்களைப் பாம்புகொண்ட தைப்போல ஊர்முழுதும்***
***சென்றதே செய்தி விரைந்து.***

*குறள் 1147:*

***ஊரவர் கௌவை எருவாக அன்னைசொல்***
***நீராக நீளுமிந் நோய்.***

***ஊர்ப்பேச்( சு) உரமாக தாய்ச்சொல் நீராக***
***காதல் வளர்கிறதே சாற்று.***

*குறள் 1148:*

***நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்***
***காமம் நுதுப்பேம் எனல்.***

***அலர்மூலம் காதலைத் தாழிடலும் இங்கே***
***வளர்நெருப்பில் நெய்யிடலும் ஒன்று.***

*குறள் 1149:*

***அலர்நாண ஒல்வதோ அஞ்சலோம் பென்றார்***
***பலர்நாண நீத்தக் கடை.***

***பலர்நாண உன்னைப் பிரியேன்நான் என்றார்!***
***அலருக்கேன் அஞ்சவேண்டும் நான்?***

*குறள் 1150:*

***தாம்வேண்டின் நல்குவர் காதலர் யாம்வேண்டும்***
***கௌவை எடுக்குமிவ் வூர்.***

***ஊரார் அலரெடுத்தார்! காதலர் ஏற்பதற்கோ***
***ஊருதவ வாய்த்தது வாய்ப்பு.***

---

## *116. பிரிவு ஆற்றாமை*
## *(பிரிவிற்காக வருந்துதல்)*

*குறள் 1151:*

***செல்லாமை உண்டேல் எனக்குரை மற்றுநின்***
***வல்வரவு வாழ்வார்க் குரை***

***பிரிந்துசென்றால் என்னிடம் சொல்லாதே! நீயோ***
***திரும்பி வரும்போது யாரிருப்பார் இங்கே?***
***அவரிடம் சொல்லிவிட்டுச் செல்.***

*குறள் 1152:*

***இன்கண் உடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்***
***புன்கண் உடைத்தால் புணர்வு.***

***அவருடைய பார்வை மகிழ்ச்சிதான்! ஆனால்***
***அவர்பிரிவோ அஞ்சவைக்கும் சாற்று.***

*குறள் 1153:*

*அரிதரோ தேற்றம் அறிவுடையார் கண்ணும்*
*பிரிவோ ரிடத்துண்மை யான்.*

*பிரிவுத் துயரறிந்தும் செல்லமுற் பட்டால்*
*அவரன்பை என்னசொல்ல நான்?*

*குறள் 1154:*

*அளித்தஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்தசொல்*
*தேறியார்க் குண்டோ தவறு.*

*பிரியமாட்டேன்! தேற்றினார்! நம்பினேன் நான்தான்!*
*அதுதானோ என்தவறு சொல்?*

*குறள் 1155:*

*ஓம்பின் அமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்*
*நீங்கின் அரிதால் புணர்வு.*

*என்னுயிரைக் காக்க பிரிவைத் தவிர்க்கவேண்டும்!*
*சென்றாலோ கூடல் அரிது.*

*குறள் 1156:*

*பிரிவுரைக்கும் வன்கண்ணர் ஆயின் அரிதவர்*
*நல்குவர் என்னும் நசை.*

*பிரிவுரைக்கும் கல்நெஞ்சர் வந்துமீண்டும் அன்பில்*
*திளைக்கவைப்பார் என்பது வீண்.*

*குறள் 1157:*

*துறைவன் துறந்தமை தூற்றாகொல் முன்கை*
*இறைஇறவா நின்ற வளை.*

*என்னைத் தலைவன்  பிரிவதை வளையல்கள்*
*முன்கழன்றே சொல்கிறதோ இங்கு?*

*குறள் 1158:*

***இன்னா தினன்இல்லூர் வாழ்தல் அதனினும்
இன்னா தினியார்ப் பிரிவு.***

***உறவற்றோர் ஊர்வாழ்தல் துன்பம்! தலைவன்
பிரிவோ உறுத்துகின்ற முள்.***

*குறள் 1159:*

***தொடிற்சுடின் அல்லது காமநோய் போல
விடிற்சுடல் ஆற்றுமோ தீ.***

***நெருப்பினைத் தொட்டால் சுடுகிறது! காதல்
பிரிவில் சுடுகிறதேன் சொல்?***

*குறள் 1160:*

***அரிதாற்றி அல்லல்நோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்இருந்து வாழ்வார் பலர்.***

***தலைவன் பிரிவைப் பொறுத்துவாழ்வோர் உண்டு!
அலையில் துரும்பானேன் நான்!***

---

## *117 படர்மெலிந்திரங்கல்*
## *(துன்பத்தால் மெலிந்து புலம்பல்)*

*குறள் 1161:*

***மறைப்பேன்மன் யானிஃதோ நோயை தறைப்பவர்க்
கூற்றுநீர் போல மிகும்.***

***இறைக்க இறைக்கவே ஊறிவரும் ஊற்று!
மறைக்க மறைக்க வெளிவரும் காதல்!
தடைகள் தடையல்ல சாற்று.***

*குறள் 1162:*

***கரத்தலும் ஆற்றேன்இந் நோயைநோய் செய்தார்க்***
***குரைத்தலும் நாணுத் தரும்.***

***துன்பத்தை என்னால் மறைக்க முடியவில்லை!***
***அன்பரிடம் சொல்வதற்கோ நாணம் தடுக்கிறது!***
***என்னென்பேன் என்னிலை சொல்.***

*குறள் 1163:*

***காமமும் நாணும் உயிர்காவாத் தூங்குமென்***
***நோனா உடம்பின் அகத்து.***

***காதலும் நாணமும் காவடித் தண்டுபோல்***
***ஊசலாட்டம் கொள்கிறது பார்.***

*குறள் 1164:*

***காமக் கடல்மன்னும் உண்டே அதுநீந்தும்***
***ஏமப் புணைமன்னும் இல்.***

***காதல் கடலைக் கடப்பதற்குத் தோதான***
***தோணிதான் இல்லை எனக்கு.***

*குறள் 1165:*

***துப்பின் எவனாவர் மன்கொல் துயர்வரவு***
***நட்பினுள் ஆற்று பவர்.***

***காதலில் உள்ளபோதே துன்பம் தருகின்றார்!***
***மோதலில் என்னசெய்வா ரோ?***

*குறள் 1166:*

***இன்பம் கடல்மற்றுக் காமம் அஃதடுங்கால்***
***துன்பம் அதனிற் பெரிது.***

***காதல் மகிழ்ச்சி கடல்போல் பெரிதுதான்!***
***வேதனைமுன் முற்றும் சிறிது.***

*குறள் 1167:*

***காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்***
***யாமத்தும் யானே உளேன்.***

***காதல் கடலினை நீந்திக் கரைகாணேன்!***
***தூங்கவில்லை நள்ளிரவுப் போழ்து.***

*குறள் 1168:*

***மன்னுயிர் எல்லாம் துயிற்றி அளித்திரா***
***என்னல்ல தில்லை துணை.***

***உலகினைத் தூங்கவைத்தே இந்த இரவு***
***தனிமையில் உள்ளது! நான்தான் இதற்குத்***
***துணையானேன்! யாருமில்லை வேறு.***

*குறள் 1169:*

***கொடியார் கொடுமையின் தாம்கொடிய இந்நாள்***
***நெடிய கழியும் இரா.***

***இரவிங்கே நீளும் கொடுமை, தலைவன்***
***பிரிவுக் கொடுமைக்கும் மேல்.***

*குறள் 1170:*

***உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்***
***நீந்தல மன்னோவென் கண்.***

***என்னவர் ஊருக்கோ என்மனம்போல் கண்களும்***
***சென்றுவிட்டால் கண்ணீர்சிந் தாது.***

## *118 கண் விதுப்பழிதல்*
## *( கண் கலங்கி வருந்துதல்)*

*குறள் 1171:*

***கண்டாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்***
***தாங்காட்ட யாங்கண் டது.***

***காதலரைக் காட்டியே துன்பத்தைத் தந்துவிட்டு***
***வேதனையில் கண்கள் அழுவதேன் இப்போது?***
***சோதனைமேல் சோதனை தான்.***

*குறள் 1172:*

***தெரிந்துணரா நோக்கிய உண்கண் பரிந்துணராப்***
***பைதல் உழப்ப தெவன்.***

***அன்று மயங்கிய கண்கள் தவிப்பதேன்***
***இன்று பிரிவை நினைந்து.?***

*குறள் 1173:*

***கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழும்***
***இதுநகத் தக்க துடைத்து.***

***அன்பரைப் பார்த்துத் துள்ளிய கண்களோ***
***இன்று பிரிவில் துவள்வதைக் கண்டால் என்னுள்ளே தோன்றும் சிரிப்பு.***

*குறள் 1174:*

***பெயலாற்றா நீருலந்த உண்கண் உயலாற்றா***
***உய்வில்நோய் என்கண் நிறுத்து.***

***காதலின் துன்பத்தை எனக்களித்து கண்களோ***
***நீர்வறண்டு வாடுவதைப் பார்.***

*குறள் 1175:*

***படலாற்றா பைதல் உழக்கும் கடலாற்றக்
காமநோய் செய்தவென் கண்.***

***கடலளவு துன்பத்தைத் தந்துவிட்டே தூக்கம்
இழந்தே தவிக்கிறது கண்.***

*குறள் 1176:*

***ஓஒ இனிதே எமக்கிந் நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது.***

***கண்கள் எனக்களித்த துன்பத்தைத் தானுமிங்கே
நன்கு படுவதும் நன்று.***

*குறள் 1177:*

***உழந்துழந் துள்நீர் அறுக விழைந்திழைந்து
வேண்டி அவர்க்கண்ட கண்.***

***அன்பரைப் பார்த்தேதான் துள்ளிய கண்களே!
துன்பத்தில் தூக்கமின்றிக் கண்ணீரும் வற்றட்டும்
இன்று பிரிவேக்கத் தால்.***

*குறள் 1178:*
***பேணாது பெட்டார் உளர்மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண்.***

***உள்ளம் விரும்பாமல் சொல்லால் விரும்புகின்றார்!
துள்ளுதே பார்ப்பதற்குக் கண்.***

*குறள் 1179:*

***வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்.***

***அன்பர் வரவில்லை! கண்களோ தூங்கவில்லை!
வந்தால் பிரிவாரோ என்றெண்ணித் தூங்கவில்லை!
துன்பமெல்லாம் கண்களுக்குத் தான்.***

*குறள் 1180:*

***மறைபெறல் ஊராh்க் கரிதன்றால் எம்போல்***
***அறைபறை கண்ணார் அகத்து.***

***பறையறைந்து சொல்லிவிடக் கண்கள் இருக்க***
***மறைப்பதேது ஊரா ரிடம்?***

---

## *119. பசப்புறு பருவரல்*
## *(பசலையால் வருந்துதல்)*

*குறள் 1181:*

***நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்***
***பண்பியார்க் குரைக்கோ பிற.***

***அன்பர் பிரிவுக் குடன்பட்டேன்! மேனியில்***
***வந்த பசலையை யாரிடம் போய்ச்சொல்வேன்?***
***இந்தப் பிரிவினால் நோய்.***

*குறள் 1182:*

***அவர்தந்தார் என்னும் தகையால் இவர்தந்தென்***
***மேனிமேல் ஊரும் பசப்பு.***

***அவரளித்த காரணத்தால் இப்பசலை மேனி***
***முழுதும் படரும் விழைந்து.***

*குறள் 1183:*

***சாயலும் நாணும் அவர்கொண்டார் கைம்மாறா***
***நோயும் பசலையும் தந்து.***

***நோயைப் பசலையைத் தந்துவிட்டுக் கைம்மாறாய்***
***நாணம் அழகை எடுத்து ரசிக்கின்றார்!***
***காதலுக்குத் தந்தார் பரிசு.***

*குறள் 1184:*

***உள்ளுவன் மன்யான் உரைப்ப தவர்திறமால்***
***கள்ளம் பிறவோ பசப்பு.***

***நினைப்பதும் சொல்வதும் அன்பரைப் பற்றி!***
***கணைபோல ஏனோ பசப்பு?***

*குறள் 1185:*

***உவக்காணெம் காதலர் செல்வார் இவக்காணென்***
***மேனி பசப்பூர் வது.***

***அன்பர் பிரிந்த உடனே பசலைதான்***
***என்மேனி கொண்டது காண்.***

*குறள் 1186:*

***விளக்கற்றம் பார்க்கும் இருளேபோல் கொண்கண்***
***முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.***

***விளக்கு மெலிந்தால் இருள்பரவும்! அன்பர்***
***தழுவல் நெகிழ்ந்தால் பசப்பு.***

*குறள் 1187:*

***புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில்***
***அள்ளிக்கொள் வற்றே பசப்பு.***

***அணைத்தேன்! விலகினேன் சற்றே! பசலை***
***அணைத்தது மேனியை ஊர்ந்து.***

*குறள் 1188:*

***பசந்தாள் இவளென்ப தல்லால் இவளைத்***
***துறந்தார் அவரென்பார் இல்.***

***பசலையைப் பார்த்தென்னை ஏசுகின்றார்!! அன்பர்***
***பிரிந்ததைச் சொல்லவில்லை ஊர்.***

*குறள் 1189:*

***பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்***
***நன்னிலையர் ஆவர் எனின்.***

***பிரிவைக்  கொடுத்தவர் நன்னிலையில்  வாழ்ந்தால்***
***இருக்கட்டும் என்மேல் பசப்பு.***

*குறள் 1190:*
***பசப்பெனப் பேர்பெறுதல் நன்றே நயப்பித்தார்***
***நல்காமை தூற்றார் எனின்.***

***பிரிவைக் கொடுத்தவரைத் தூற்றவில்லை  என்றால்***
***பசந்தவள் பேரெடுத்தல் பேறு.***

---

## *120 தனிப்படர் மிகுதி*
## *(தனிமையால் துன்பப்படுதல்)*

*குறள் 1191:*

***தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே***
***காமத்துக் காழில் கனி.***

***தலைவியை ஏற்கும் தலைவன் அமைந்தால்***
***விதையில்லா நற்கனி பெற்ற பேறு!***
***சுவையாகும் காதல் கனி.***

*குறள் 1192:*

***வாழ்வார்க்கு வானம் பயந்தற்றால் வீழ்வார்க்கு***
***வீழ்வார் அளிக்கும் அளி.***

***காதலர்கள் அன்பைப் பொழிதல் பருவத்தில்***
***வான்மழை வாழ்வார்க்குப்  போல்.***

*குறள் 1193:*

***வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே***
***வாழுநம் என்னும் செருக்கு.***

***விரும்புவாரை இங்கே விரும்பினால் காதல்***
***செருக்குடன் காணலாம் வாழ்வு.***

*குறள் 1194:*

***வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்***
***வீழப் படாஅர் எனின்.***

***தலைவி விரும்பி தலைவன் வெறுத்தால்***
***சுவரற்ற சித்திரம்போல் வாழ்வு.***

*குறள் 1195:*

***நாம்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ***
***தாம்காதல் கொள்ளாக் கடை.***

***காதலித்தேன் காதல் மறுத்தார்! எப்படி***
***வாழ்வில்  தழைக்கும் மகிழ்வு?***

*குறள் 1196:*

***ஒருதலையான் இன்னாது காமங்காப் போல***
***இருதலை யானும் இனிது.***

***ஒருதலைக் காதல் துயரம்! காதல்***
***ஒருதண்டில் காவடிபோல் பக்கம் இரண்டும்***
***சரிசமக் காதலே நன்று.***

*குறள் 1197:*

*பருவரலும் பைதலும் காணான்கொல் காமன்*
*ஒருவர்கண் நின்றொழுகு வான்.*

*காமன் ஒருவரிடம் உள்ளதால் காதல்நோய்*
*வாட்டி பசலையால் என்னைத் துன்புறுத்திப்*
*பார்ப்பதைக் கண்டுகொள்ளா ரோ?*

*குறள் 1198:*

*வீழ்வாரின் இன்சொல் பெறாஅ துலகத்து*
*வாழ்வாரின் வன்கணார் இல்.*

*தான்விரும்பும் காதலர் இன்சொல்லால் போற்றவில்லை!*
*காதலர் கல்நெஞ்சமோ? சொல்.*

*குறள் 1199:*

*நசைஇயார் நல்கார் எனினும் அவர்மாட்*
*டிசையும் இனிய செவிக்கு.*

*அன்பருக்கு என்மீது அன்பில்லை என்றாலும்*
*அன்பரின் சொற்கள் இனிது.*

*குறள் 1200:*

*உறாஅர்க் குறுநோய் உரைப்பாய் கடலைச்*
*செறாஅஅய் வாழிய நெஞ்சு.*

*நெஞ்சேஉன் துன்பத்தை அன்பரிடம் சொல்வதினும்*
*அக்கடலைத் தூர்த்தல் எளிது.*

---

## *121 நினைந்தவர் புலம்பல்*
## *(பிரிவால் நினைந்து வருந்துதல்)*

*குறள் 1201:*

***உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால்***
***கள்ளினும் காமம் இனிது.***

***நினைத்ததும் இன்பம் தருதலால் காதல்***
***மதுவினும் என்றும் இனிது.***

*குறள் 1202:*

***எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்***
***நினைப்ப வருவதொன் றில்.***

***பிரிவில் நினைத்தால் பிரிவுத் துயரம்***
***தெரிவதில்லை! எப்படிப் பார்த்தாலும் காதல்***
***அளிப்பதோ இன்பமே! சாற்று.***

*குறள் 1203:*

***நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்***
***சினைப்பது போன்று கெடும்.***

***தும்மல் வருவதுபோல் நிற்கிறதே! அன்பரென்னை***
***எண்ணி மறக்கின்றா ரோ?***

*குறள் 1204:*

***யாமும் உளேங்கொல் அவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்***
***தோஒ உளரே அவர்.***

***என்னெஞ்சில் அன்பர் இருப்பதுபோல் அன்பரின்***
***நெஞ்சில் இருப்பேனா நான்?***

*குறள் 1205:*

***தம்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொல்
எம்நெஞ்சத் தோவா வரல்.***

***அன்பரின் நெஞ்சில் ஒதுக்குகின்றார்! என்னெஞ்சில்
வந்துபுக நாணாரோ? சொல்.***

*குறள் 1206:*

***மற்றியான் என்னுளேன் மன்னோ அவரொடுயான்
உற்றநாள் உள்ள உளேன்.***

***அன்பருடன் வாழ்ந்த நினைவில்  உயிர்வாழ்வேன்!
என்வாழ்க்கை வேறெதனால்? சொல்.***

*குறள் 1207:*

***மறப்பின் எவனாவன் மற்கொல் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளம் சுடும்.***

***அன்பரின் நாளை மறவாமல் வாழ்ந்தாலே
நெஞ்சம் சுடுகிறதே, நானோ மறந்துவிட்டால்
என்னதான் ஆவேனோ? சொல்.***

*குறள் 1208:*

***எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ
காதலர் செய்யும் சிறப்பு.***

***அன்பரைநான் எப்படி எண்ணினாலும் ஏசமாட்டார்!
என்னவரின் காதல் சிறப்பு.***

*குறள் 1209:*

***விளியுமென் இன்னுயிர் வேறல்லம் என்பார்
அளியின்மை ஆற்ற நினைந்து.***

***நம்முயிர் ஒன்றெனச் சொல்லி பிரிந்துசென்றார்!
எண்ணி மருகுதே உயிர்.***

*குறள் 1210:*

***விடாஅது சென்றாரைக் கண்ணினால் காணப்***
***படாஅதி வாழி மதி.***

***அன்பர் பிரிந்துசென்றார்! நானவரைக் காணுமட்டும்***
***வெண்மதியே! என்துணையாய் வா.***

---

## *122 கனவுநிலை உரைத்தல்*
## *(கண்ட கனவு பற்றிக் கூறல்)*

*குறள் 1211:*

***காதலர் தூதொடு வந்த கனவினுக்***
***கியாதுசெய் வேன்கொல் விருந்து.***

***என்துன்பம்  போக்கவந்த தூதாம் கனவிற்குக்***
***கைம்மாறு என்செய்வேன் நான்?***

*குறள் 1212:*

***கயலுண்கண் யானிரப்பத் துஞ்சின் கலந்தார்க்***
***குயலுண்மை சாற்றுவேன் மன்.***

***என்கண்கள் தூங்கினால் அக்கனவில் அன்பரிடம்***
***இன்னுமுயிர் உள்ளதென்பேன் நான்.***

*குறள் 1213:*

***நனவினான் நல்கா தவரைக் கனவினால்***
***காண்டலின் உண்டென் உயிர்.***

***நேரில் வராமல் கனவிலன்பர் காண்பதால்***
***நேரிழை வாழ்கிறேன் சொல்.***

*குறள் 1214:*

***கனவினான் உண்டாகும் காமம் நனவினான்***
***நல்காரை நாடித் தரற்கு.***

***நேரில் வராதவரை இக்கனவு காட்டுவதால்***
***சேயிழைக் கின்பமுண்டு செப்பு.***

*குறள் 1215:*

***நனவினாற் கண்டதூஉம் ஆங்கே கனவுந்தான்***
***கண்ட பொழுதே இனிது.***

***அன்பரை நேரிலே பார்த்தபோதும் என்கனவில்***
***கண்டபோதும் இன்பந்தான் செப்பு.***

*குறள் 1216:*

***நனவென ஒன்றில்லை ஆயின் கனவினாற்***
***காதலர் நீங்கலர் மன்.***

***நினைவு கலைக்கா திருந்திருந்தால் அன்பர்***
***கனவைவிட்டு நீங்கமாட்டார் சொல்.***

*குறள் 1217:*

***நனவினான் நல்காக் கொடியார் கனவினான்***
***என்னெம்மைப் பீழிப் பது.***

***நேரிலே வந்தெனக்கு அன்புகாட்ட மாட்டாராம்!***
***சேயிழையைத் துன்புறுத்த ஏனோ கனவிலே***
***பாய்ந்து வருவாராம் ஏன்?***

*குறள் 1218:*

***துஞ்சுங்கால் தோள்மேலர் ஆகி விழிக்குங்கால்***
***நெஞ்சத்தார் ஆவர் விரைந்து.***

***என்னெஞ்சில் உள்ளவர் தூங்கிடும் நேரத்தில்***
***என்தோளின் மேலே வருகின்றார்! கண்விழித்தால்***
***நெஞ்சுக்குள் செல்வார் விரைந்து.***

*குறள் 1219:*

***நனவினான் நல்காரை நோவர் கனவினான்***
***காதலர்க் காணா தவர்.***

***கனவிலே அன்பரைக் காணாதோர் நேரில்***
***வரவில்லை என்றேசு வார்.***

*குறள் 1220:*

***நனவினான் நம்நீத்தார் என்பர் கனவினான்***
***காணார்கொல் இவ்வூ ரவர்.***

***பிரிந்துவிட்டார் என்றேசும் ஊரார்கள் அன்பர்***
***கனவில் வருவதறி யார்?***

---

## *123 பொழுதுகண்டு இரங்குதல்*
## *(மாலை நேரம் கண்டு வருந்துதல்)*

*குறள் 1221:*

***மாலையோ அல்லை மணந்தார் உயிருண்ணும்***
***வேலைநீ வாழி பொழுது.***

***மாலையே! முன்புவரும் அப்பொழுதா? இல்லையில்லை!***
***வாடும் மகளிர் பிரிவுத் துயரத்தை***
***நாடுகின்ற வேலானாய்! வாழ்த்து.***

*குறள் 1222:*

***புன்கண்ணை வாழி மருள்மாலை எங்கேள்போல்
வன்கண்ண தோநின் துணை.***

***மாலையே! என்போல் துயரப் படுகின்றாய்!
பாரிலே உன்னவரும் என்னவர்போல் கல்நெஞ்சம்
ஏந்தும் கொடியவரோ? சொல்.***

*குறள் 1223:*

***பனியரும்பிப் பைதல்கொள் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்.***

***குளிர்நடுக்க வந்திருந்த  மாலை, வெறுக்கும்
அளவுக்குத் துன்பம் தருகிறதே இன்று!
கலக்கம் பிரிவுத் துயர்.***

*குறள் 1224:*

*காதலர் இல்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.*

***அன்பர் உடனிருந்தார்  வந்தமாலை தந்ததின்பம்!
இன்றோ உடனில்லை! மாலை கொலைக்களத்தில்
வன்பகை வாள்போ லாச்சு.***

*குறள் 1225:*

***காலைக்குச் செய்தநன் றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.***

***காலைக்கு நான்செய்த நன்மையென்ன?
நானென்ன
மாலைக்கு தீமைசெய்தேன்? சாற்று.***

*குறள் 1226:*

***மாலைநோய் செய்தல் மணந்தார் அகலாத***
***காலை அறிந்த திலேன்.***

***அன்பர் பிரியாத போதுநான் மாலையின்***
***வன்கொடுமை நானறியேன்  இங்கு.***

*குறள் 1227:*

***காலை அரும்பிப் பகலெல்லாம் போதாகி***
***மாலை மலருமிந் நோய்.***

***காலை அரும்பிப் பகலில் முதிர்ந்தேதான்***
***மாலை மலருமிந்த நோய்.***

*குறள் 1228:*

***அழல்போலும் மாலைக்குக் தூதாகி ஆயன்***
***குழல்போலும் கொல்லும் படை.***

***முன்பெல்லாம் ஆயன் குழலிசை இன்பந்தான்!***
***இப்போது துன்ப நெருப்பாக   கொல்கின்ற***
***வன்பகையாய்க் கேட்கிறது கேள்.***

*குறள் 1229:*

***பதிமருண்டு பைதல் உழக்கும் மதிமருண்டு***
***மாலை படர்தரும் போழ்து.***

***மாலை வரும்பொழுது என்னிலை நான்மயங்கி***
***நாளும் துன்பத்தில் நான்.***

*குறள் 1230:*

***பொருள்மாலை யாளரை உள்ளி மருள்மாலை***
***மாயுமென் மாயா உயிர்.***

***காதல் பிரிவையெண்ணி மாயாத என்னுயிர்***
***மாலை மயங்குதே சாற்று.***

## *124 உறுப்புநலன் அழிதல்*
## *(பிரிவால் உறுப்புக்கள் அழகிழத்தல்)*

***குறள் 1231:***

***சிறுமை நமக்கொழியச் சேட்சென்றார் உள்ளி***
***நறுமலர் நாணின கண்.***

***பிரிவை நமக்களித்துத் தொலைதூரம்  சென்றார்!***
***மலர்கள்முன் நாணின கண்.***

***குறள் 1232:***

***நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்***
***பசந்து பனிவாரும் கண்.***

***பசலையில் பொங்குகின்ற கண்ணீரோ தன்னை***
***விரும்பிய காதலர் அன்புகாட்ட வில்லை***
***எனத்தான் உரைக்கிறதோ கூறு.***

***குறள் 1233:***

***தணந்தமை சால அறிவிப்ப போலும்***
***மணந்தநாள் வீங்கிய தோள்.***

***மணந்தபோது சேர்ந்திருந்தோம் பூரித்த தோள்கள்***
***பிரிவை உரைக்கும் மெலிந்து.***

***குறள் 1234:***

***பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்***
***தொல்கவின் வாடிய தோள்.***

***அவர்பிரிவால் தோள்கள் இளைத்தே வளையல்***
***கழல மெலிந்தன சாற்று.***

*குறள் 1235:*

***கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு***
***தொல்கவின் வாடிய தோள்.***

***அழகை இழந்தே வளையல் கழல***
***இளைத்துவிட்ட  தோள்கள் அவரின் கொடுமை***
***உரைக்கிறதோ ஊருக்கு? சொல்.***

*குறள் 1236:*

***தொடியொடு தோள்நேகிழ நோவல் அவரைக்***
***கொடியார் எனக்கூறல் நொந்து.***

***தோள்கள் மெலிந்தே வளையல் கழல்வதால்***
***ஊரவரைச் சாடுவதைக் கேட்டேதான் நொந்தேன்!***
***யாரறிவார் என்னவரை  இங்கு?***

*குறள் 1237:*

***பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்***
***வாடுதோட் பூசல் உரைத்து.***

***நெஞ்சே! இரக்கமற்ற அன்பரிடம் வாடுகின்ற***
***என்தோளின் வேதனையைச் சொல்லிப் பெருமைகொள்ள***
***முன்வந்து செல்வாயா நீ?***

*குறள் 1238:*

***முயங்கிய கைகளை ஊக்கப் பசந்தது***
***பைந்தொடிப் பேதை நுதல்.***

***தழுவிய கைகள் நெகிழ்ந்ததும் மங்கை***
***அழகிய நெற்றி பசந்ததே! ஏக்கப்***
***பிரிவின் கொடுமை அது.***

*குறள் 1239:*

***முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற***
***பேதை பெருமழைக் கண்.***

***தழுவல் இடைவெளியில் காற்று நுழைய***
***பிரிவினைத் தாளாமல் மாதரசி கண்கள்***
***பசலையை ஏந்தியது செப்பு.***

*குறள் 1240:*

***கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே***
***ஒண்ணுதல் செய்தது கண்டு.***

***பிரிவுத் துயராலே நெற்றிப் பசலை***
***தெரிந்ததும் கண்களும் துன்பம் அடைந்தே***
***துடித்தன அங்கேதான் சாற்று.***

---

## *125 நெஞ்சொடு கிளத்தல்*
## *(நெஞ்சைசை நோக்கி நெகிழ்தல்)*

*குறள் 1241:*

***நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே எனைத்தொன்றும்***
***எவ்வநோய் தீர்க்கு மருந்து.***

***நெஞ்சே! எனைப்படுத்தும் இந்தநோய் தீர்வதற்கு***
***நன்மருந்து சொல்லேன் எனக்கு.***

*குறள் 1242:*

***காத லவரிலர் ஆகநீ நோவது***
***பேதமை வாழியென் நெஞ்சு.***

***அன்பர் வரவில்லை! நெஞ்சமே***
***நீவிரும்பிச்***
***சென்றால் அறியாமை தான்.***

*குறள் 1243:*

***இருந்துள்ளி என்பரிதல் நெஞ்சே பரிந்துள்ளல்***
***பைதல்நோய் செய்தார்கண் இல்.***

***அன்பர் பிரிவளித்தார்! நெஞ்சமே! நீயேனோ***
***இங்கிருந்து வாடுவதேன்? கூறு.***

*குறள் 1244:*

***கண்ணும் கொளச்சேறி நெஞ்சே இவையென்னைத்***
***தின்னும் அவர்க்காணல் உற்று.***

***நெஞ்சமே! அன்பரைக் காணநீ சென்றாலோ***
***கண்களையும் கூட்டிச்செல்! இல்லையென்றால் என்னையவை***
***தின்பது போல்வாட்டும் பார்.***

*குறள் 1245:*

***செற்றார் எனக்கை விடலுண்டோ நெஞ்சேயாம்***
***உற்றால் உறாஅ தவர்.***

***நம்மை விரும்பவில்லை நெஞ்சே! அதற்காக***
***நம்வெறுப்பைக் காட்டுவாயா நீ.***

*குறள் 1246:*

***கலந்துணர்த்தும் காதலர்க் கண்டாற் புலந்துணராய்***
***பொய்க்காய்வு காய்தியென் நெஞ்சு***

***தையலிடம் ஊடிவிட்டுக் கூடவந்தால்   சாடமாட்டாய்!***
***பொய்க்கோபம் இன்றுமட்டும் ஏன்?***

*குறள் 1247:*

***காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே***
***யானோ பொறேனிவ் விரண்டு.***

***நெஞ்சமே! காதலை அல்லது நாணத்தை***
***விட்டுவிடு! தாங்கேன் இரண்டு.***

*குறள் 1248:*

***பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்***
***பின்செல்வாய் பேதையென் நெஞ்சு.***

***அன்பர் பிரிந்தாலும் பின்னால் அலைகின்ற***
***நெஞ்சமே பேதைதான் நீ.***

*குறள் 1249:*

***உள்ளத்தார் காத லவராக உள்ளிநீ***
***யாருழைச் சேறியென் நெஞ்சு.***

***அவரெந்தன் உள்ளத்தில் இருக்கின்றார்! நெஞ்சே!***
***அலைந்தெவரைத் தேடுகின்றாய் நீ?***

*குறள் 1250:*

***துன்னாத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா***
***இன்னும் இழத்தும் கவின்.***

***பிரிந்தார் புறப்பொலிவு போச்சு! ஏங்கித்***
***திரிந்தேன் அகப்பொலிவும் போச்சு.***

---

## *126 நிறையழிதல்*
## *(வேட்கையால் தலைவி*
## *மறைக்கத்தக்கதைக் கூறல்)*

*குறள் 1251:*

***காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும்***
***நாணுத்தாழ் வீழ்த்த கதவு.***

***நாணமெனும் தாழ்ப்பாளால் மூடிய பேரடக்கம்***
***பேணும் கதவையோ காதலன்புக் கோடரி***
***தூர்த்தே உடைக்கிற தே.***

*குறள் 1252:*

***காமம் எனவொன்றோ கண்ணின்றென் நெஞ்சத்தை***
***யாமத்தும் ஆளும் தொழில்.***

***காதல் இரக்கமின்றி என்னை நடுநிசியில்***
***ஆள்கிறதே தூக்கம் கலைத்து.***

*குறள் 1253:*

***மறைப்பேன்மன் காமத்தை யானோ குறிப்பின்றித்***
***தும்மல்போல் தோன்றி விடும்.***

***மறைக்கின்றேன் காதலை! தும்மல்போல் தோன்றி***
***வெளிவந்து காட்டிவிடும் சாற்று.***

*குறள் 1254:*

***நிறையுடையேன் என்பேன்மன் யானோவென் காமம்***
***மறையிறந்து மன்று படும்.***

***மனஅடக்கம் நம்பி மறைத்திருந்தேன்! காதல்***
***கடந்துவந்து காட்டியதே ஊர்க்கு.***

*குறள் 1255:*

***செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்***
***உற்றார் அறிவதொன் றன்று.***

***நம்மை வெறுத்தவர்பின் செல்லாது நிற்பது***
***நம்காதல் நோய்க்கில்லை சாற்று.***

*குறள் 1256:*

***செற்றவர் பின்சேறல் வேண்டி அளித்தரோ***
***எற்றென்னை உற்ற துயர்.***

***பிரிந்தவர்பின் செல்வதற்குத் தூண்டுகின்ற காதல்***
***துடிக்கவைக்கும் துன்பம் கொடிது.***

*குறள் 1257:*

***நாணென ஒன்றோ அறியலம் காமத்தால்***
***பேணியார் பெட்ப செயின்.***

***காதலர் நாம்விரும்பும் ஒன்றினைச் செய்தாலோ***
***நாணத்தை நாமறியோம் சாற்று.***

*குறள் 1258:*
***பன்மாயக் கள்வன் பணிமொழி அன்றோநம்***
***பெண்மை உடைக்கும் படை.***

***மனஅடக்கக் கோட்டையைத் தாக்கும் கருவி***
***மனக்கள்வன் சொல்கின்ற பாகுமொழிச் சொல்தான்!***
***அனலை அணைக்கும் புனல்.***

*குறள் 1259:*

***புலப்பல் எனச்சென்றேன் புல்லினேன் நெஞ்சம்***
***கலத்தல் உறுவது கண்டு.***

***ஊடுவேன் என்றேதான் சென்றேன்! மனவேகம்***
***கூடலைத் தூண்டிவிட கூடினேன் அன்பருடன்!***
***ஊடலிலே தோற்றுவிட்டேன் வென்று.***

*குறள் 1260:*

***நிணந்தீயில் இட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ***
***புணர்ந்தூடி நிற்பேம் எனல்.***

***தீயில் கொழுப்பாய் உருகிவிடும் நெஞ்சுடையோர்***
***காதலர் கூடலில் ஊடலை ஏற்பாரோ?***
***சோதனையை ஏற்கமாட்டார் கூறு.***

---

## *127 அவர்வயின் விதும்பல்*
## *( காதலரோடு சேர மனம் விரைதல்)*

***குறள் 1261:***

***வாளற்றுப் புற்கென்ற கண்ணும் அவர்சென்ற***
***நாளொற்றித் தேய்ந்த விரல்.***

***வருவார் எனவே வழிபார்த்து விழியின்***
***ஒளியிழக்க நாளெண்ணி கையின் விரல்கள்***
***சுவர்தொட்டுத் தேய்ந்தன காண்.***

***குறள் 1262:***

***இலங்கிழாய் இன்று மறப்பினென் தோள்மேல்***
***கலங்கழியும் காரிகை நீத்து.***

***தோழி! பிரிவாலே இன்றவரை நான்மறந்தால்***
***தோளின் வளைசரியும் வீழ்ந்து.***

***குறள் 1263:***

***உரன்நசைஇ உள்ளம் துணையாகச் சென்றார்***
***வரல்நசைஇ இன்னும் உளேன்.***

***துணிவுடன் சென்றுவிட்டார்! வெற்றி கனிய***
***வருவதை நம்புகின்றேன் வாழ்ந்து.***

***குறள் 1264:***

***கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்***
***கோடுகொ டேறுமென் நெஞ்சு.***

***பிரிந்தவர் இங்கே வருவதை நெஞ்சம்***
***மரமேறிப் பார்க்குதடி பார்.***

*குறள் 1265:*

*காண்கமன் கொண்கனைக் கண்ணாரக் கண்டபின்*
*நீங்குமென் மென்தோள் பசப்பு.*

*அன்பரைக் கண்ணாரக் கண்டதும் என்பசலை*
*வந்தவழி நீங்கிவிடும் சென்று.*

*குறள் 1266:*

*வருகமன் கொண்கண் ஒருநாட் பருகுவன்*
*பைதல்நோய் எல்லாம் கெட.*

*அன்பர் வருவார் எனைநாடி! இன்புறுவேன்*
*துன்பமெல்லாம் நீங்கிடத் தான்.*

*குறள் 1267:*
*புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்*
*கண்ணன்ன கேளிர் வரின்.*

*அன்பரைக் கண்டதும் ஊடுவேனோ? கூடுவேனோ?*
*அன்றித் தழுவுவேனோ? சொல்.*

*குறள் 1268:*

*வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து*
*மாலை அயர்கம் விருந்து.*

*அரசனுக்கு வெற்றி கிடைக்கட்டும்! வீட்டில்*
*கலப்பேன் விருந்தில் திளைத்து.*

*குறள் 1269:*

*ஒருநாள் எழுநாள்போல் செல்லும்சேண் சென்றார்*
*வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.*

*தொலைதூரம் சென்றவரை எண்ணியேங்கும் மங்கைக்(கு)*
*ஒருநாள் பலநாள்போல் தான்.*

*குறள் 1270:*

***பெறினென்னாம் பெற்றக்கால் என்னாம் உறினென்னாம்
உள்ளம் உடைந்துக்கக் கால்.***

***பிரிந்தவரை எண்ணி மனமுடைந்தால் வந்தே
அணைத்தென்ன? ஆறுதல்தான் ஏன்?***

---

## *128 குறிப்பறிவுறுத்தல்*
## *(ஒருவர்க்கொருவர் குறிப்பு அறிவுறுத்தல்)*

*குறள் 1271:*

***கரப்பினுங் கையிகந் தொல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன் றுண்டு.***

***சொல்ல மறைத்தாலும் உன்மைவிழி சொல்கின்ற
செய்திக் குறிப்பொன்றிங் குண்டு.***

*குறள் 1272:*

***கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது.***

*குறள் 1272:*

***கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது.***

***கண்ணழகும் மூங்கிலன்ன தோள்களும்
கொண்டவளின்
பெண்மை அழகே உயர்வு.***

*குறள் 1273:*

***மணியில் திகழ்தரு நூல்போல் மடந்தை
அணியில் திகழ்வதொன் றுண்டு.***

***மணிகளுக் குள்ளிருக்கும் நூல்போல மாதின்
மணியழகில்  உண்டு குறிப்பு.***

*குறள் 1274:*

***முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை***
***நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு.***

***அரும்புக்குள் உள்ள மணம்போல மாதின்***
***சிரிப்பில் குறிப்பொன் றுண்டு.***

*குறள் 1275:*

***செறிதொடி செய்திறந்த கள்ளம் உறுதுயர்***
***தீர்க்கும் மருந்தொன் றுடைத்து.***

***அன்பரசி கள்ளக் குறிப்பில் மருந்துண்டு***
***என்காதல் நோய்தீரத் தான்.***

*குறள் 1276:*

***பெரிதாற்றிப் பெட்பக் கலத்தல் அரிதாற்றி***
***அன்பின்மை சூழ்வ துடைத்து.***

***அன்பர் தழுவுகின்ற அன்பில் பிரிகின்ற***
***எண்ணக் குறிப்பொன் றுண்டு.***

*குறள் 1277:*

***தண்ணந் துறைவன் தணந்தமை நம்மினும்***
***முன்னம் உணர்ந்த வளை.***

***குளிர்ந்த துறையன்பர் நம்மைப் பிரிவார்,***
***அளிப்பார் துயரென் றுணர்ந்து வளையல்***
***கழன்றதோ வீழ்ந்திங்கு சாற்று.***

*குறள் 1278:*

***நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமும்***
***எழுநாளேம் மேனி பசந்து.***

***நேற்றுதான் அன்பர் பிரிந்துசென்றார்! பலநாள்கள்***
***ஆனதுபோல் இந்தப் பசலை படர்ந்ததே!***
***ஏனோ கொடுமை எனக்கு?***

*குறள் 1279:*

***தொடிநோக்கி மென்தோளும் நோக்கி அடிநோக்கி***
***அஃதாண் டவள்செய் தது.***

***அன்பர் பிரிந்தால் வளைநழுவும்  கைபார்த்தாள்!***
***மங்கி மெலியுமென்று தோள்பார்த்தாள்!  மீறினால்***
***பின்தொடரும் கால்பார்த்தாள் நின்று.***

*குறள் 1280:*

***பெண்ணினாற் பெண்மை உடைத்தென்ப கண்ணினால்***
***காமநோய் சொல்லி இரவு.***

***கண்களால் தூதுவிட்டுக் காதலன் போகவேண்டாம்***
***என்றுரைத்தல் பெண்மைக்கு பெண்மையைச் சேர்க்கின்ற***
***தண்ணழகுச் சித்திரந் தான்.***

---

### *129 புணர்ச்சி விதும்பல்*
### *( தலைவனும் தலைவியும் புணர விரைதல்)*

*குறள் 1281:*

***உள்ளக் களித்தலும் காண மகிழ்தலும்***
***கள்ளுக்கில் காமத்திற் குண்டு.***

***நினைத்தாலும் பார்த்தாலும் காதலோ இன்பம்!***
***இவையிரண்டும் கள்ளிலில்லை காண்***

*குறள் 1282:*

***தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத்துணையும்***
***காமம் நிறைய வரின்.***

***பனையளவு காதலன்பு ஊறுகின்ற போது***
***தினையளவும் ஊடல் தவிர்.***

*குறள் 1283:*

***பேணாது பெட்பவே செய்யினும் கொண்கனைக்***
***காணா தமையல கண்.***

***என்னை அவமதித்துச் சீண்டினாலும் கண்களோ***
***அன்பரைத் தேடியோடும் செப்பு.***

*குறள் 1284:*

***ஊடற்கண் சென்றேன்மன் தோழி அதுமறந்து***
***கூடற்கண் சென்றதென் னெஞ்சு.***

***ஊடுகின்ற நோக்கமுடன் நான்சென்றேன்! நெஞ்சமோ***
***கூடலுக்குச் சென்றது பார்.***

*குறள் 1285:*

***எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கண்***
***பழிகாணேன் கண்ட இடத்து.***

***மைதீட்டும் நேரத்தில் கோல்தெரி யாததுபோல்***
***காதலரைக் காணுகின்ற நேரம் அவர்குறைகள்***
***மாதுணர மாட்டாள் மறந்து.***

*குறள் 1286:*
***காணுங்கால் காணேன் தவறாய காணாக்கால்***
***காணேன் தவறல் லவை.***

***காதலரைக் கண்டால் தவறுகளைக் காணமாட்டேன்!***
***காணாத போது தவறைத் தவிரநான்***
***காண முடியவில்லை யே.***

*குறள் 1287:*

***உய்த்தல் அறிந்து புனல்பாய் பவரேபோல்***
***பொய்த்தல் அறிந்தென் புலந்து.***

***வெள்ளம் இழுத்தாலும் நீந்துதல்போல் வெற்றியில்லை***
***என்றாலும் ஊடுவதேன் சாற்று?***

*குறள் 1288:*

***இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக்***
***கள்ளற்றே கள்வநின் மார்பு.***

***அன்பரே! துன்பத்தைத் தந்தாலும் கள்ளுண்டோர்***
***கள்விரும்பு தல்போலுன் மார்பு.***

*குறள் 1289:*

***மலரினும் மெல்லிது காமம் சிலரதன்***
***செவ்வி தலைப்படு வார்.***

***காதலின்பம் பூவினும் மென்மையே! மென்மையுடன்***
***காதலை ஆள்வோர் சிலர்.***

*குறள் 1290:*

***கண்ணின் துனித்தே கலங்கினாள் புல்லுதல்***
***என்னினும் தான்விதுப் புற்று.***

***கண்களால் ஊடியவள் என்னுடன் கூடியதோ***
***என்னைவிட வேகமாய் வந்து.***

---

## *130 நெஞ்சொடு புலத்தல்*
## *(இருவரும் மனத்துடன் புலம்புதல்)*

***குறள் 1291:***

***அவர்நெஞ் சவர்க்காதல் கண்டும் எவன்நெஞ்சே***
***நீயெமக் காகா தது.***

***அவர்க்கே துணையாம் அவர்நெஞ்சம்! நீயும்***
***அவரிடம் செல்வதேன்? சொல்.***

***குறள் 1292:***

***உறாஅ தவர்க்கண்ட கண்ணும் அவரைச்***
***செறாஅரெனச் சேறியென் நெஞ்சு.***

***அன்பருக்கோ அன்பில்லை! கோபம் அடையமாட்டார்***
***என்றுநெஞ்சே செல்வதேன்? சொல்.***

***குறள் 1293:***

***கெட்டார்க்கு நட்டாரில் என்பதோ நெஞ்சேநீ***
***பெட்டாங் கவர்பின் செலல்.***

***கெட்டவர்க்கு நண்பரில்லை என்பதால் அன்பரிடம்***
***நெஞ்சேநீ செல்கின்றா யோ?***

***குறள் 1294:***

***இனியன்ன நின்னொடு சூழ்வார்யார் நெஞ்சே***
***துனிசெய்து துவ்வாய்காண் மற்று.***

***நெஞ்சமே! ஊடியபின் கூடுவதை எண்ணவில்லை!***
***உன்னிடம் யார்பேச? சொல்.***

*குறள் 1295:*

***பெறாஅமை அஞ்சும் பெறின்பிரி வஞ்சும்***
***அறாஅ இடும்பைத்தென் நெஞ்சு.***

***அன்பர் பிரிந்துவிட்டால் அஞ்சுகின்ற நெஞ்சமோ***
***வந்தால் பிரிவாரோ என்றேதான் அஞ்சுதடி!***
***நெஞ்சே துயர்தான் உனக்கு.***

*குறள் 1296:*

***தனியே இருந்து நினைத்தக்கால் என்னைத்***
***தினிய இருந்ததென் நெஞ்சு.***

***அன்பர் பிரிவைத் தனிமையில் எண்ணினால்***
***நெஞ்சமென்னைத் தின்னும் உணர்வு.***

*குறள் 1297:*

***நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாவென்***
***மாணா மடநெஞ்சிற் பட்டு.***

***அன்பரை மறக்காத நெஞ்சுடன் சேர்ந்தேதான்***
***என்நாணம் விட்டேன் மறந்து.***

*குறள் 1298:*

***எள்ளின் இளிவாமென் றெண்ணி அவர்திறம்***
***உள்ளும் உயிர்க்காதல் நெஞ்சு.***

***அவரை இகழ்தல் நமக்கிழிவென் றேதான்***
***அவர்பெருமை எண்ணுகின்றேன் நான்.***

*குறள் 1299:*
***துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய***
***நெஞ்சந் துணையல் வழி.***

***துன்பத்தில் நெஞ்சம் துணைவர வில்லையென்றால்***
***இங்கெவர் வந்திடுவார் கூறு.***

*குறள் 1300:*

***தஞ்சம் தமரல்லர் ஏதிலார் தாமுடைய
நெஞ்சம் தமரல் வழி.***

***நெஞ்சம் நமக்குறவில் லாதபோது மற்றவர்
அப்படி வாழ்தல் எளிது.***

---

## *131 புலவி*
## *(அன்பால் ஊடிக் கொள்ளுதல்)*

*குறள் 1301:*

***புல்லா திராஅப் புலத்தை அவருறும்
அல்லல்நோய் காண்கம் சிறிது.***

***அன்பர் படும்துயரை ஊடி ரசித்திருப்போம்!
நெஞ்சே தழுவாமல் ஊடு.***

*குறள் 1302:*

***உப்பமைந் தற்றால் புலவி அதுசிறிது
மிக்கற்றால் நீள விடல்.***

***உணவிலே உப்பைப்போல் கொஞ்சநேர ஊடல்
சுவைக்கும்! அதிகநேரம் என்றால் உணவில்
அதிகமான உப்புக்கே ஒப்பு.***

*குறள் 1303:*

***அலந்தாரை அல்லல்நோய் செய்தற்றால் தம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.***

***ஊடலில் வாடியோரைக் கூடாமல் போவது
வாடியோரை வாட்டுதல் போல்.***

*குறள் 1304:*

***ஊடி யவரை உணராமை வாடிய***
***வள்ளி முதலரிந் தற்று.***

***ஊடியோரை வாட்டுதல், வாடும் கொடிவேரைக்***
***கீழே அறுத்தழித்தல் போல்.***

*குறள் 1305:*

***நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை***
***பூவன்ன கண்ணார் அகத்து.***

***மகளிரின் ஊடலே அன்பரின் பண்புக்***
***கழகுசேர்க்கும் தன்மையாம் சாற்று.***

*குறள் 1306:*

***துனியும் புலவியும் இல்லாயின் காமம்***
***கனியும் கருக்காயும் அற்று.***

***பெரும்பிணக் கில்லை, கனிந்தபழம் ஆகும்!***
***சிறுபிணக் கில்லையேல் பிஞ்சு.***

*குறள் 1307:*

***ஊடலின் உண்டாங்கோர் துன்பம் புணர்வது***
***நீடுவ தன்றுகொல் என்று.***

***கூடலின் காலமோ தாமத மாவதால்***
***ஊடலிலும் துன்பமுண்டு சாற்று.***

*குறள் 1308:*

***நோதல் எவன்மற்று நொந்தாரென் றஃதறியும்***
***காதலர் இல்லா வழி.***

***வருந்துகிறேன் என்றுணர காதலர் இல்லை!***
***வருந்துவதில் என்னபயன்? சொல்.***

*குறள் 1309:*

***நீரும் நிழல தினிதே புலவியும்***
***வீழுநர் கண்ணே இனிது.***

***நிழலருகில் நீரிருந்தால் இன்பம்! அன்பின்***
***நிழலிலே ஊடல் இனிது.***

*குறள் 1310:*

***ஊடல் உணங்க விடுவாரோ டென்னெஞ்சம்***
***கூடுவேம் என்ப தவா.***

***ஊடலில் வாடவைத்த அன்பருடன் கூட***
***இசைவதே ஆசையினால் தான்.***

---

## *132 புலவிநுணுக்கம்*
## *(ஊடலின் நுட்பம்)*

*குறள் 1311:*

***பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொதுவுண்பர்***
***நண்ணேன் பரத்தநின் மார்பு.***

***பெண்களின் கண்களோ உன்மார்பை மொய்த்தலால்***
***அன்பால் தழுவமாட்டேன் நான்.***

*குறள் 1312:*

***ஊடி இருந்தேமாத் தும்மினார் யாம்தம்மை***
***நீடுவாழ் கென்பாக் கறிந்து.***

***ஊடி இருந்தபோது தும்மினார்! நீடுவாழ***
***வாழ்த்துவேன் என்றே நினைத்து.***

*குறள் 1313*

***கோட்டுப்பூச் சூடினும் காயும் ஒருத்தியைக்***
***காட்டிய சூடினீர் என்று.***

***எனக்கு விருப்பமான மாலை அணிந்தேன்!***
***எவளுக்குக் காட்டவென்றாள் நொந்து.***

*குறள் 1314:*

***யாரினுங் காதலம் என்றேனா ஊடினாள்***
***யாரினும் யாரினும் என்று.***

***யாரினும் நம்காதல் மேலென்றேன்! யாரைவிட?***
***யாரைவிட? என்றாள் துடித்து.***

*குறள் 1315:*

***இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனாக்***
***கண்நிறை நீர்கொண் டனள்.***

***இப்பிறவி வாழ்வில் பிரியமாட்டேன் என்றதும்***
***சட்டென் றழுதாள்! அடுத்த பிறவியில்***
***விட்டுப் பிரிவாயோ? என்று.***

*குறள் 1316:*

***உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்றென்னைப்***
***புல்லாள் புலத்தக் கனள்.***

***உன்னை நினைத்தேன்நான் என்றேன்! மறந்ததேன்***
***என்னை? எனக்கலுழ்ந்தாள் கண்.***

*குறள் 1317:*

***வழுத்தினாள் தும்மினேன் ஆக அழித்தழுதாள்***
***யாருள்ளித் தும்மினீர் என்று.***

***தும்மினேன்! வாழ்த்தினாள்! ஆனால் யார்நினைக்கத்***
***தும்மினீர் என்றழுதாள் மாது.***

*குறள் 1318:*

***தும்முச் செறுப்ப அழுதாள் நுமருள்ளல்***
***எம்மை மறைத்திரோ என்று.***

***தும்மலை நானோ அடக்க, உனைநினைக்கும்***
***அம்மகளை நானறியக் கூடா தெனமறைத்தீர்!***
***என்னவரே என்றழுதாள் பார்த்து.***

*குறள் 1319:*

***தன்னை உணர்த்தினும் காயும் பிறர்க்கும்நீர்***
***இந்நீரர் ஆகுதிர் என்று.***

***ஊடலை நீக்கி நெருங்கினால், நீர்மற்ற***
***மாதுகளை இப்படித்தான் ஆள்வீரோ என்றேதான்***
***கோபத்தைக் கட்டவிழ்த்தா ளே.***

*குறள் 1320:*

***நினைத்திருந்து நோக்கினும் காயும் அனைத்துநீர்***
***யாருள்ளி நோக்கினீர் என்று.***

***காதலியின் கட்டழகைப் பார்த்திருந்தேன்! ஒப்பிட்டீர்***
***யாருடன் என்றாள் சினந்து.***

---

***இன்பத்துப்பால் நிறைவு***
***குறள்களுக்குக் குறள்வடிவில் கருத்து***
***133 ஊடலுவகை***
***(ஊடுதலால் உண்டாகும் மகிழ்ச்சி)***

*குறள் 1321:*

***இல்லை தவறவர்க் காயினும் ஊடுதல்***
***வல்ல தவரளிக்கும் ஆறு.***

***அன்பர்மேல் தப்பில்லை!ஆனாலும் என்மேல்***
***அன்புகாட்ட ஊடல் கருவி.***

*குறள் 1322:*

***ஊடலின் தோன்றும் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.***

***ஊடல் அளிப்பது துன்பமே! அன்பரின்
காதலோ வாடினாலும் ஊடலால் அவ்வன்பின்
காதல் பெருமை பெறும்.***

*குறள் 1323:*

***புலத்தலிற் புத்தேள்நா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னார் அகத்து.***

***நிலத்துடன் நீர்கலந்தால்போன்றிருக்கும்  காதல்
உவந்தளிக்கும் அன்பருடன் ஊடுதல்போல் இன்ப
உலகந்தான் வேறுண்டோ? கூறு.***

*குறள் 1324:*

***புல்லி விடாஅப் புலவியுள் தோன்றுமென்
உள்ளம் உடைக்கும் படை.***

***இன்பம் வளரத் துணைபுரியும் ஊடலுக்குள்
என்னுள்ள வன்மையைத் தாக்கும் படையுண்டு!
உண்மை நிலையிது தான்.***

*குறள் 1325:*

***தவறிலர் ஆயினும் தாம்வீழ்வார் மென்றோள்
அகறலின் ஆங்கொன் றுடைத்து.***

***அன்பர்மேல் தப்பில்லை! மென்தோள்
தவிர்ப்பதிலும்
இன்பமுண்டே ஊடலில் சாற்று.***

*குறள் 1326:*

***உணலினும் உண்ட தறலினிது காமம்***
***புணர்தலின் ஊடல் இனிது.***

***உண்பதினும் சீரணித்தல் நல்லது! கூடலினும்***
***அன்பான ஊடல் இனிது.***

*குறள் 1327:*

***ஊடலின் தோற்றவர் வென்றார் அதுமன்னும்***
***கூடலிற் காணப் படும்.***

***ஊடலிலே தோற்றவரே வென்றவராம்! வெற்றியைக்***
***கூடலின்பம் காட்டும் உணர்.***

*குறள் 1328:*

***ஊடிப் பெறுகுவம் கொல்லோ நுதல்வெயர்ப்பக்***
***கூடலில் தோன்றிய உப்பு.***

***நெற்றி வியர்த்திடும் கூடலின் இன்பத்தை***
***மற்றும் ஒருமுறை ஊடிப் பெறுவேனா?***
***இப்படி நாடும் மனம்.***

*குறள் 1329:*

***ஊடுக மன்னோ ஒளியிழை யாமிரப்ப***
***நீடுக மன்னோ இரா.***

***ஏந்திழை ஊடட்டும்! நானிரந்து நிற்பதற்கு***
***நீளட்டும் இந்த இரவு.***

*குறள் 1330:*
***ஊடுதல் காமத்திற் கின்பம் அதற்கின்பம்***
***கூடி முயங்கப் பெறின்.***

***காதலுக்கோ ஊடலின்பம்! ஊடல் அளவறிந்தே***
***நீக்குதல் கூடலின்பம் கூறு.***

**எனது திருக்குறள் முயற்சிகள்:**

*திருக்குறள் பேழை ஆண்டு 2006*

**145**குறள்கள் வெண்பா முயற்சி

**1330**குறள்களுக்கும் வெண்பா

ஆண்டு **2008**

அறம் பொருள் குறள்களுக்குக் குழந்தைப்பாடல்

(**108** அதிகாரங்கள்)

*இன்பத்துப்பால் 250 குறள்களின் நிகழ்வுகள் குழந்தைகளுக்காக.*

**1330** குறள்களையும் ஆங்கிலத்தில்

மொழியாக்கம்.

**1330** குறள்களுக்கும் குறள் வடிவில் விளக்கம்

---

வெளிச்சம் தொலைக்காட்சி ஆண்டு 2018

அறத்துப்பால் குறள் விளக்கம்

(தினம் ஒரு குறள்--380 நாள்கள்)

---